விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஐப்பசி 08 ஞாயிற்றுக்கிழமை (25.10.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 310

உலகெங்குமுள்ள உறவு களுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- உடு புடைவைகள்
- CD,VCD க்கள் அனுப்ப

நாட வேண்டிய ஒரே இடம்

(C-2529)

ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம்
303.கே.கே.எஸ் வீதி. யாழ்ப்பாணம்
T.P.No : 021 222 5392

# மனித உரிமைகளை பேண இலங்கை அரசு தயார்!

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

ஐ.நாவின் பிரதான நோக்கங்களாக மனிதவுரிமைகளை பேணுதல் மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல் ஆகியன இருக்கின்றன. இவற்றை பூரணமாக பொறுப்புடன் நிறைவேற்ற அரசாங்கம் தயாராக இருக்கின்றது. இவ்வாறு ஐ.நாவின் 70 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கொழும்பிலுள்ள ஐ.நா அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

15 ஆம் பக்கம் பார்க்க....



## விமலின் கடவுச்சீட்டு சி.ஐ.டியிடம்!

(கொழும்பு)

தேசிய சுதந்திர முன்னணியின தலைவர் விமல் வீரவன்சவின் கடவுச்சீட்டு தொடர்ந்தும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் வசம் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரி

16 ஆம் பக்கம் பார்க்க....

## பொலிஸ் ஆணைக்குழுவில் 80 வயதான தமிழர்

(கொழும்பு)

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் குறித்து பொலிஸ் திணைக்களத்தில் அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது.

அரசியலமைப்புச் சபையிடம்

15 ஆம் பக்கம் பார்க்க....

## துறை ஒதுக்கப்படாத அமைச்சுக்கள்!

(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்களுக்கான துறைகள் வர்த்தமானி மூலம் வெளியிடப்படாத காரணத்தினால் பல அமைச்சுக்களில் நெருக்கடியான நிலைமை உருவாகியுள்ளதாக பெருந்தோட்ட

15 ஆம் பக்கம் பார்க்க....

# கைதிகளுக்கு பொதுமன்னிப்பு அமைச்சரவை நிராகரிப்பு

(கொழும்பு)

அண்மையில் தமிழ் அரசியல்

# ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் விலகல்!

(கொழும்பு)

ஊடகப் பிரிவில் இல்லை என ஜனா

15 ஆம் பக்கம் பார்க்க....

வித்தார்.

15 ஆம் பக்கம் பார்க்க....



# கைதிகளுக்கு பொதுமன்னிப்பு அமைச்சரவை நிராகரிப்பு

(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்குவது தொடர்பான அமைச்சரவைப் பத்திர்ம் நிராகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் அமைச்சரவையில இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரமொன்றை மீள்குடியேற்ற அமைச்சர் டீ.எம். சுவாமிநாதன் சமர்ப்பித்துள்ளார்.

அண்மையில் தமிழ் அரசியல் கைதிகள் மேற்கொண்ட உண்ணாவிரதத்தின் எதிரொலியாக இந்த அமைச்சரவைப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனினும் அவ்வாறு விடுதலை செய்வது மோசமான முன்னுதாரணங்களுக்கு வழிவகுத்துவிடும் என்று பல அமைச்சர்கள் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

எனினும் குற்றச்சாட்டுகள் இன்றி நீண்ட காலம் தடுத்துவைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்கள் தொடர்பில் கருணை அடிப்படையிலான விடுதலை குறித்து அமைச்சரவையின் பெரும்பாலான உறுப்பினர்கள்

16 ஆம் பக்கம் பார்க்க....

# ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் விலகல்!

(கொழும்பு)

ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு செயலிழந்துள்ளதாக கூறி அதன் பிரதிப் பணிப்பாளர் பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

வழங்கப்படும் பொறுப்புகளை வினைதிறனாக நிறைவேற்றக் கூடிய சிறந்த சூழல் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவில் இல்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கடிதம் மூலம் அறிவித்து விட்டு, அதன் பிரதிப் பணிப்பாளரான ஓசல ஹேரத் பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

நிர்வாக சிக்கல், ஒருங்கிணை

15 ஆம் பக்கம் பார்க்க....

# அதிநவீன வசதிகளுடன் மகிந்தவின் நிலத்தடி மாளிகை

## ஊடகவியலாளர்கள் பரபரப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி மாளிகையின் நிலக்கீழ் அதிசொகுசு மாளிகைக்கு குறிப்பிட்ட சில ஊடகவியலாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். முன்னாள்

16 ஆம் பக்கம் பார்க்க....

# இந்துக் கோவில்கள் மீது தாக்குதல்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இரண்டு இந்துக் கோவில்கள் உடைக்கப்பட்டு அங்கிருந்த சிலைகளும் உடைமைகளும் வீதியில வீசப்பட்டுள்ளன.

குருக்கள்மடம் கிருஷ்ணன் கோவில், மட்டக்களப்பு - பொலநறுவை நெடுஞ்சாலையிலுள்ள வாக

15 ஆம் பக்கம் பார்க்க....

# ஜெனிவா அறிக்கைக்கு சர்வஜன கருத்துக்கணிப்பு

## அரசியல் கட்சிகள் சில கோரிக்கை

(கொழும்பு)

ஜெனிவா அறிக்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் சர்வஜன கருத்துக் கணிப்பு நடத்தப்பட வேண்டும் என்று ஒரு சில அரசியல கட்சிகள் கோரிக்கையொன்றை முன்வைக்கவுள்ளன.

எதிர்க் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளில் சில கட்சிகள் இது தொடர்பான கோரிக்கையொன்றை ஜனாதிபதி மைத்

15 ஆம் பக்கம் பார்க்க....

# இராணுவம் மீது போர்க் குற்றம் எதுவும் சுமத்தப்படவில்லை!

## ஜனாதிபதி ஆணைக்குழுத் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமது ஆணைக்குழு முன்வைத்த அறிக்கையில், இராணுவத்தின் மீது போர்க்குற்றம் சுமத்தும் வகையில் எந்த விடயங்களையும் முன் வைக்கவில்லை என்று காணாமல போனோர் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்துள்ளார்.

ஐ.நா விசாரணை அறிக்கையை விடவும் எமது அறிக்கை பாரதூரமானது என அரசாங்கம் தெரிவித்து

16 ஆம் பக்கம் பார்க்க....



# ராஜபக்ஷ குடும்ப லண்டன் கணக்கில் 3.88 பில்லியன் ஸ்டேர்லிங் பவுண் வைப்பு

## விசாரணைகள் முன்னெடுப்பு

ராஜபக்ஷ குடும்ப உறுப்பினர்களுக்கு சொந்தமான 3.88 பில்லியன் ஸ்டேர்லிங் பவுண்கள் வைப்பு செய்யப்பட்டுள்ள வங்கி கணக்கு தொடர்பில் இதுவரையில் தகவல் வெளியாகியுள்ளதாக அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவரின் ஊடாக தகவல் வெளியாகியுள்ளது.

ராஜபக்ஷ குடும்பத்தின் டுபாய் வங்கி கணக்கு தொடர்பில் பரவும் கதைகள் தொட ர்பில் சிங்கள ஊடகமொன்று கேள்வியெழுப்பிய சந்தர்ப்பத்தில் அவர் இதனை வெளியிட்டுள்ளார்.

லண்டன் வங்கி கணக்கு மற்றும் ஏனைய தகவல்களை தற்போது வெளியிட முடியாதென கூறிய அவர் வங்கி கணக்கு தொடர்பில் மேலதிக விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த வங்கி கணக்கு போலியானதென வெளியாகும் ஊடக அறிக்கைகளை அவர் நிராகரித்துள்ளார்.

இந்த பணம் டுபாய் வங்கிக்கு கிடைத்த முறை தொடர்பிலும், பின்னர் வேறு நாட்டின் பல வங்கிகளுக்கு மாற்றி அனுப்பி வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பிலும், இதற்கு தொடர்புடைய ஏனைய தரப்பினர் தொடர்பிலும் தற்போது தகவல் வெளியாகியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் அந்த விசாரணை நடவடிக்கைகளில் ஏற்பட்ட தவறு காரணமாக அந்த பணத்தை மீண்டும் இந்த நாட்டிற்கு கைப்பற்றிக்கொள்ளும் நடவடிக்கைகள் தாமதமாவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த கணக்கின் உரிமையாளர்களுக்கு இடையில் ராஜபக்ஷ குடும்பத்தின் இரண்டு மகன்மார்களும், முன்னாள் ஜனாதிபதிக்கு மிகவும் நெருக்கமான உறுப்பினர் ஒருவர் மற்றும் மேலும் வர்த்தகர்கள் இருவரும் உள்ளடக்கப்படுவார்கள்.

விசேடமாக ராஜபக்ஷ குடும்ப உறுப்பினர்களுக்கு எதிராக இந்த நாட்டினுள் நிதி மோசடி குற்றம் சுமத்தப்பட்டு நீதி விவகாரங்கள் மேற்கொள்ளப்படாத நிலைமையினுள் வெளிநாட்டு அரசாங்கங்களின் ஆதரவை பெற்றுகொள்வது இக்கட்டான நிலைமையாக உள்ளதாகவும், இதன் காரணமாக ராஜபக்ஷ குடும்ப உறுப்பினர்க ளுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள நிதி மோசடி குற்றச்சாட்டுகளை உடனடியாக விசாரணை மேற்கொண்டு வழக்கு தாக்கல் செய்யப்பட வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ-12)

# அடையாள அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு தெற்கு 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த தம்பிராசா தனுசன் (861272796V) என்வருடைய தேசிய அடையாள அட்டை உள்ளடங்கிய பேஸ் ஒன்று கண்டெடுக்கப்பட்டு வலம்புரி காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் ஆதாரத்தினைக் காட்டி வலம்புரி காரியாலயத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். (எ-12)

# பொது நோக்கு மண்டப திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு மேற்கு பொது நோக்கு மண்டப திறப்பு விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வேலணை பிரதேச செயலாளர் மஞ்சுளா தேவி சதீசன் கலந்து கொள்கிறார்.

சிறப்பு விருந்தினர்களாக வலம்புரி பத்திரிகையாசிரியர் ந.விஜயசுந்தரம், மண்டைதீவு மகா வித்தியாலய அதிபர் அ.கனகரத்தினம், கிராம சேவையாளர் அ.தேவகி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-12)

### வடக்கு முதலமைச்சரின்

# இணைப்புச் செயலாளர் திடீர் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் இணைப்புச் செயலாளர் எஸ். மன்மதராஜா திடீரென இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் 2013 ஆம் ஆண்டு நடைபெற்றதன் பிற்பாடு முதலமைச்சராக முன்னாள் நீதியரசர் சி.வி விக்னேஸ்வரன் பெரும்பான்மையான வாக்குகளினால் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

இதன்பின்னர் முதலமைச்சரின் பிரத்தியேக செயலாளராக எஸ்.சந்திரலிங்கமும், இணைப்பாளராக எஸ்.மன்மதராஜாவும் முதலமைச்சரினாலேயே தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் கடந்த இரு வருடங்களாக பணியில் ஈடுபட்டு வரும் நிலையில் ஒருங்கிணைப்பும் செயலாளரான மன்மதரா சில வாரங்களிற்கு முன்னால் அவரது பணிகளிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

நடைபெற்று முடிந்த பாராளுமன்ற தேர்தலிணையடுத்து மேற்கொள்ளப்பட்ட இப் பணிநீக்கத்திற்கான காரணம் எதனையும் அறியமுடியவில்லை.

இதேவேளை வடக்கு முதலமைச்சரின் மேற்படி இணைப் புச் செயலாளர் பதவி தொடர்ந்தும் வெற்றிடமாகவே இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-4)


### தேவை

யாழ்.நகரில் உள்ள பிரபல கடை ஒன்றிற்கு ஆண் அல்லது பெண் O/L or A/L படித்த 18-30 வயதிற்குட்பட்ட வேலையாள் தேவை. (யாழ். நகரை அண்டியவர்கள் விரும்பத்தக்கது)

**ராசிக் கிப்ட் சென்ரர்** யாழ்ப்பாணம்.

**0777905333** (2063)

### விற்பனைக்கு

பாவித்த லப்ரப் (Laptop) புதிய லேனோவா ரப் (ipad) உடன் விற்பனைக்குண்டு.

**தொடர்பு:-**

**0768016448, 0714182469** (216)

### பிரத்தியேக வகுப்பு

தரம் 4, 5ற்கான புலமைப் பரிசில் வகுப்புக்கள், தரம் 6 தொடக்கம் 11 வரையான கணித வகுப்புக்கள் மற்றும் க.பொ.த உயர்தர கணக்கீட்டு வகுப்புக்கள் வவுனியா நகரை அண்மித்த பகுதிகளிலும் மற்றும் யாழ். மாவட்டம் முழுவதும் பிரபல ஆசிரியரினால் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.

(சி-2542) **தொடர்பு:-0771175483**


# ஐ.நா ஆணையாளருடன் கூட்டமைப்பு சந்திப்பு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டங்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கையின் பரிந்துரைகளையும், அந்தப் பரிந்துரைகளை ஆதரித்து ஐ.நாவில் அமெரிக்காவின் தலைமையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பரிந்துரைகளையும் அமுல்படுத்துமாறு இலங்கை அரசுக்குத் தொடர்ந்து அழுத்தம் கொடுங்கள். இவ்வாறு அரசியல் விவகாரங்களுக்கான ஐ.நாவின் உதவிச் செயலர் நாயகம் மிரோஸ்லாவ் ஜென்காவிடம் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேரில் வலியுறுத்தினர்.

தமிழருக்கான நிரந்தர அரசியல் தீர்வு மற்றும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, வடக்கு-கிழக்கில் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் காணிகளை முழுமையாக விடுவித்தல், போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப விசேட திட்டத்தை ஏற்படுத்தல் ஆகிய முக்கிய விடயங்களையும் அமுல்படுத்துமாறும் இலங்கை அரசுக்கு ஐ.நா. அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் அரசியல் விவகாரங்களுக்கான ஐ.நாவின் உதவிச் செயலர் நாயகத்திடம் கூட்டமைப்பினர் கோரிக்கை விடுத்தனர். (எ-11)

# அரச தரப்பினரின் கொலைகள் ஜெனிவா அறிக்கையில் இல்லை

(கொழும்பு)

போர்க்குற்றங்கள் தொடர்பான ஜெனிவா அறிக்கையில் அரச தரப்பு முக்கியஸ்தர்களின் படுகொலைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை என்று திவயின பத்திரிகை தெரிவித்துள்ளது.

இது தொடர்பான செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவானது கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற அரசியல் படுகொலைகள் தொடர்பில் போதிய கவனம் செலுத்தவில்லை.

261 பக்கங்களைக் கொண்ட ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு அறிக்கையில் இது தொடர்பாக ஒரு வார்த்தையேனும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

இவற்றில் 25 படுகொலைச் சம்பவங்கள் தொடர்பில் விடுதலைப் புலிகள் நேரடித் தொடர்புபட்டிருந்தமைக்கான சாட்சிகள் உள்ளன.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ரவீந்திரநாத் மற்றும் விரிவுரையாளர் கந்தையா உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் மற்றும் அரசாங்கத்துக்கு நெருக்கமான அரசியல்வாதிகள் ஆகியோர் விடுதலைப் புலிகளால் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

ஆனால் இது தொடர்பான விபரங்கள் ஜெனிவா அறிக்கையில் உள்ளடக்கப்படவில்லை என்றும் திவயின செய்தியில் தொடர்ந்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)


### நொதன் சென்றல் மெற்றோ போலிஸ் ஆய்வுகூடம்

**நொதன் சென்றல் வைத்தியசாலையில் இயங்கும் மெற்றோ போலிஸ் ஆய்வுகூடத்தில் 25.10.2015ல் இருந்து 25.11.2015 வரையான காலப்பகுதியினுள் மிகக் குறைந்த கட்டணத்தில் பின்வரும் ஆய்வுகூட பரிசோதனைகள் நடைபெறவுள்ளன. பொதுமக்கள் இவ்வரப்பிரசாதத்தை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். குறைந்த கட்டணத்துடனான பின்வரும் பொதிகளில் ஒன்றைத் தெரிவு செய்பவர்களுக்கு மேலதிகமாக கீழ் குறிக்கப்பட்டுள்ள ஒன்றையும் குறைந்த கட்டணத்தில் செய்து கொள்ளமுடியும்.**

★ **Package No.1. FBC, Fasting Blood Suger, SGOT, SGPT, UFR**
**25 வயதுக்கு மேற்பட்டவர்கள் Rs.1435/=**
Creatinine, Cholestrol and Calcium

★ **Package No.2. FBC, Fasting Blood Suger, SGOT, SGPT**
**35 வயதுக்கு மேற்பட்டவர்கள் Rs.2470/=**
Creatinine, BUN, Lipid Profile,TSH, Calcium

★ **Package No.3. FBC, Fasting Blood Suger, SGOT, UFR**
**45 வயதுக்கு மேற்பட்டவர்கள் Rs.6450/=**
GGT, ALP, SGPT, HBSAG, Creatinine, BUN
Lipid Profile, TSH and T3, Calcium, Homocystein

**மேலதிகமான சலுகை கட்டணம்**

| | |
|---|---|
| Lipid Profile | Rs. 490/= |
| TSH | Rs. 630/= |
| Homocystein | Rs. 1975/= |
| Vitamin D3 | Rs. 4530/= |

(C-2540) **முகாமையாளர் ஆய்வுகூடம்**


## மரண அறிவித்தல்

### வைத்தியநாதர் கணபதிப்பிள்ளை

**(குழந்தை)**



நெடுந்தீவை பிறப்பிடமாகவும் இல.293, ஸ்கந்தபுரத்தை வதிவிடமாகவும் காத்தார் சின்னக்குளத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட வைத்தியநாதர் கணபதிப்பிள்ளை 22.10.2015 (வியாழக்கிழமை) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்தியநாதர் சின்னப்பிள்ளையின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தையா நாகம்மாவின் மருமகனும் பத்மாவதியின் அன்புக் கணவரும் அமரர் பரமானந்தன் (அப்பன்) (முன்னாள் அக்கராயன் பல.நோ.கூ.சங்க களஞ்சிய காப்பாளர்), சிறிகாந்தன் (சிறி), சாரதா (லண்டன்), சிறிதரன், தர்சினி (சுதா) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெனித்தா (ராசாத்தி), கேமாலினி (மாலினி), நாகேந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.10.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூந்தோட்டம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

**தகவல்:-குடும்பத்தினர், 0773328296** (சி-2543)

# மாலைதீவு ஜனாதிபதியை கொலை செய்ய சதித்திட்டம்

## துணை ஜனாதிபதி அதிரடி கைது!

(மாலே)

**மாலைதீவின் ஜனாதிபதியான அப்துல்லா யாமீனை குண்டு வைத்து கொலை செய்ய சதித்திட்டம் தீட்டியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள துணை ஜனாதிபதி அகமது அதீப் கைது செய்யப்பட்டுள்ளார். மாலைதீவின் தலைநகர் மாலே யில் வைத்து நேற்று நண்பகல் 12 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளார்.**

ஜனாதிபதி அப்துல்லா யாமீன் கடந்த மாதம் செப்டெம்பர் 28 ஆம் திகதி சவுதி அரேபியாவில் புனித யாத்திரையை முடித்துக்கொண்டு விமான நிலையத்திலிருந்து படகு மூலமாக திரும்பிய போது பயங்கர வெடி குண்டுத் தாக்குதல் நிகழ்ந்தது.

இந்த விபத்தில் அதிர்ஷ்ட வசமாக ஜனாதிபதி சிறுகாயங்களுடன் உயிர் தப்பினார். எனினும், அவரது மனைவி மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் காயமடைந்தனர்.

வெடிகுண்டுத் தாக்குதல் தொடர்பாக விசாரணையின் முடிவில் பாதுகாப்புத்துறை அமைச்சர் மற்றும் சில உயர் அதிகாரிகளை ஜனாதிபதி அதிரடியாக பணியில் இருந்து நீக்கினார். இச்சூழலில், ஜனாதிபதியை வெடிகுண்டு மூலம் கொலை செய்ய தட்டமிட்டதாக துணை ஜனாதி பதி அகமது அதீப் தற்போது அதிரடியாக கைது செய்யப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சர் நசீர் உறுதிப்படுத்தியுள்ளார்.

அப்துல்லா யாமீனின் முன்னாள் துணை ஜனாதிபதியும் சதித்திட்டத்தில் ஈடுபட்டதாக அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

பின்னர், அகமது அதீப் துணை ஜனாதிபதியாக நியமிக்கப்பட்ட 3 மாதங்கள் நிறைவடைந்துள்ள நிலையில், தற்போது அதே குற்றத்திற்காக கைது செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## எயிட்ஸ் நோய் விழிப்புணர்வுக்காக பழங்கால கார்கள் கொழும்பில் பேரணி

(கொழும்பு)

எயிட்ஸ் நோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் கொழும்பில் ஆங்கிலேயர் காலத்து பீட்டில் கார்களின் பேரணியொன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உலக எயிட்ஸ் விழிப்புணர்வு தினம் வருடம்தோறும டிசெம்பர் முதலாம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்றது.

இதனை முன்னிட்டு இலங்கை எயிட்ஸ் நோய் விழிப்புணர்வுக்கான அமைப்பு பழங்கால கார்களின் பேரணியொன்றை கொழும்பில் ஏற்பாடு செய்துள்ளது.


எயிட்ஸ்நோய் குறித்த விழிப்புணர்வு வாசகங்கள் தாங்கிய பீட்டில் ரக கார்களைக் கொண்ட பேரணியொன்று கொழும்பு மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் பவனி வருவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இதன் மூலம் பொது மக்களிடையே எயிட்ஸ் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

அத்துடன் கொழும்பு காலி முகத்திடலில் ஐக்கிய நாடுகள் எயிட்ஸ் விழிப்புணர்வு அமைப்பின் ஏற்பாட்டில் விழிப்புணர்வு பொதுக்கூட்டம் ஒன்றுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-7)

## சிறந்த சமுதாயத்தை கட்டியெழுப்புவதில் பொலிஸ்துறையின் பங்கு விசாலமானது

### ஜனாதிபதி தெரிவிப்பு



பொலிஸ் சேவையின் தரத்தை உயர்த்துவது அரசாங்கத்தின் நோக்கம் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நாட்டின் சட்டம் ஒழுங்கை பாதுகாப்பது மட்டுமன்றி ஒரு சிறந்த சமுதாயத்தை கட்டியெழுப்புவதிலும்பொலிஸ்துறை பாரிய பங்கு வகிப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கை பொலிஸ் கல்லூரியின் அணிவகுப்பு நிகழ்வில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

சிறந்த மற்றும் ஒழுக்கமான சமுதாயத்தை கட்டியெழுப்பும் போது பொலிஸ்துறையின்பங்கு விசாலமானதுஎன்று அவர் தெரிவித்தார்.

சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதுடன் நல்லாட்சிக்காக உருவாக்கப்பட்ட அரசாங்கத்தின் குறிக்கோள்களை அமுல்படுத்தும் போது பொலிஸ்துறை தனித்துவமான பங்காற்றுகிறது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஐ.நா.உதவிச்செயலருடன் அமைச்சர் மனோ சந்திப்பு

(கொழும்பு)


தேசிய கலந்துரையாடல் அமைச்சர் மனோ கணேசனை, ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் நாயகம் மிரொஸ்லவ் ஜென்கா சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.



நேற்று நடைபெற்ற இந்த சந்திப்பில், இலங்கைக்கான ஐ.நா. வதிவிட இணைப்பாளர் சுபினே நந்தி, நல்லிணக்க மற்றும் அபிவிருத்தி ஆலோசகர் கீதா சபர்வால் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இராஜகிரியவில் அமைந்துள்ள தேசிய கலந்துரையாடல் அமைச்சு அலுவலகத்தில நடைபெற்ற இந்த சந்திப்பின் போது,

ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சிபாரிசுகளுக்கான இலங்கையின் உள்நாட்டு பங்களிப்பு, புதிய ஆட்சியின் கீழ் இலங்கையில் தற்போதைய நல்லிணக்க செயற்பாடுகளின் முனனேற்றம், அவற்றுக்கான சமகால தடைகள் மற்றும் தேசிய கலந்துரையாடல் அமைச்சின் இனங்களுக்கு இடையிலான சகவாழ்வை மேம்படுத்தும் நடவடிக்கைகளுக்கு ஐ.நா. சபையின் உதவி மற்றும் தொழிநுட்ப ஒத்துழைப்புகளை வழங்குவது தொடர்பிலும் ஆராயப்பட்ட தாக அமைச்சர் மனோ கணேசன் மேலும் தெரிவித்தார். (இ-7)




## ஜெனிவா பிரேரணை விவாதத்தில் உரையாற்றுவதை தவிர்த்த மகிந்த



ஜெனிவா தீர்மானம் தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரண்டாவது நாளாகவும் ஒத்திவைப்பு வேளை விவாதம் இடம்பெற்றது. விவாதத்தில் உரையாற்றுவதற்கு முன்னாள் ஜனாதிபதியும் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ஷவுக்கு 15 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அவர் உரையாற்றுவதிலிருந்து தவிர்த்துக் கொண்டார்.

இலங்கை மீதான ஜெனிவா தீர்மானம் தொடர்பில் பாராளுமன்றத்தில் விவாதம் வேண்டும் என்ற கோரிக்கை மகிந்த அணியினராலேயே முன்வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் விவாதத்துக்கான நாளும் ஒதுக்கப்பட்டிருந்தது.

இதன்படி கடந்த வியாழக்கிழமை முதல் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 6.30 வரை மேற்படி தீர்மானம் மீது ஒத்திவைப்பு வேளை விவாதம் இடம் பெற்றது.

இவ்விவாதத்தில் ஆளும் கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் தமது கருத்துக்களை முன்வைத்திருந்தனர். கடந்த வியாழக்கிழமை உரையாற்றிய நீதியமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ கடந்த அரசாங்கம் மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகிய தரப்புக்கள் மீதே அதிக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவதாலும் சர்வதேசத்துடனானதும் ஐ.நாவுடனானதுமான ஆவண பரிமாற்றங்கள் தொடர்பில் மகிந்த ராஜபக்ஷவே சபையில் தோன்றி பதிலளிக்க வேண்டும் என்று கூறியிருந்தார்.

இதன்படி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம பெற்ற இரண்டாம் நாள் விவாதத்தின் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ உரையாற்றவிருப்பதாக அறிவிக்கப்பட்டது. அவருக்காக 15 நிமிடங்களும் ஒதுக்கப்பட்டிருந்தது.

எனினும் உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் சபையில் பிரசன்னமாகியிருக்கவில்லை. அத்துடன் உரையாற்றுவதிலிருந்து தவிர்த்துக் கொண்டுள்ளார். உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ மேற்படி விவாதத்தில் உரையாற்றமாட்டார் என்பதை உறுப்பினர் டலஸ்அழகப்பெரும சபையில் அறிவித்தார். (இ-7)

## பொலிஸாருக்கு எதிராகக்கிடைத்துள்ள 120முறைப்பாடுகள் குறித்து விசாரணை

பொலிஸாருக்கு எதிராக கிடைத்துள்ள 120 முறைப்பாடுகள் குறித்து விசாரணைகளை ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்காமை, பக்கச் சார்பாக செயற்பட்டமை உள்ளிட்ட விடயங்கள் குறித்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பொலிஸ் ஆணைக் குழுவின் செயலாளர் ஆரியதாச குரே தெரிவித்துள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் முதல், இந்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும், அவை குறித்து எதிர்வரும் வாரம் முதல் விசாரணைகளை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

முறைப்பாட்டுக்குரிய தரப்பினரை பிராந்திய அலுவலகங்கள் ஊடாக வரவழைத்து விசாரணைகளை முன்னெடுப்பதற்கான ஒத்துழைப்புகளை ஆணைக்குழு பெற்றுக்கொடுக்கும் என்றும் அதன் செயலாளர் தெரிவித்தார்.

பொலிஸார் தொடர்பில் முறைப்பாடுகள் இருப்பின், செயலாளர், தேசிய பொலிஸ் ஆணைக்குழு, இலக்கம் 9, பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபம், கொழும்பு 07 என்ற முகவரிக்கு தெரிவிக்க முடியும் என்றும் ஆணைக்குழுவின் செயலாளர் தெரிவித்துள்ளார். (இ-7)


# இலங்கைக்கு எதிரான டெஸ்ட் கரீபியனுக்கு 244 வெற்றி இலக்கு

மேற்கிந்திய தீவுகள்- இலங்கை அணிகள் மோதும் 2-வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி கொழும்பு ஓவல் மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் நாணயசுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. தொடக்கமே இலங்கை அணிக்கு அதிர்ச்சியாக அமைந்தது. தொடக்க வீரர் சில்வா, தான் சந்தித்த முதல் பந்திலேயே டெய்லரின் பந்து வீச்சில் டக் அவுட் ஆகினார்.

இதனையடுத்து நிதானமாக விளையாடி வந்த கருணாரத்ன மற்றும் மெண்டிஸ் அடுத்தடுத்து தலா 13 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினர்.

இதனையடுத்து வந்த வீரர்களும் நிலைக்கவில்லை. சீரான இடைவெளியில் விக்கெட்டுகள் விழுந்ததால் இலங்கை அணி 200 ஓட்டங்களுக்கு சுருண்டது.



இலங்கை தரப்பில், மிலிந்த சிறிவர்தன அதிகபட்சமாக 68 ஓட்டங்கள் எடுத்தார். அறிமுக சுழற்பந்து வீச்சாளர் ஜோமைல் வார்கன் சிறப்பாக பந்துவீசி 4 விக்கெட்களை வீழ்த்தினார்.


பின்னர் முதல் இன்னிங்சை தொடங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி தம்மிக்க பிரசாத், டில்ருவான் பந்துவீச்சில் அடுத்தடுத்து விக்கெட்டை இழந்தது.

இதனால் 64.2 ஓவர்களில் 163 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டையும் இழந்தது. தொடக்க வீரர் பிராத்வெய்ட் 47 ஓட்டங்கள் எடுத்தார். இலங்கை அணி சார்பில், தம்மிக்க பிரசாத் 4, டில்ருவான் 3 விக்கெட்டை வீழ்த்தினர்.

பின்னர் 2வது இன்னிங்சை தொடங்கிய இலங்கை அணி மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இலங்கை துடுப்பாட்ட வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் வெளியேறி னர்.

இதனால் இலங்கை அணி 206 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டையும் இழந்தது. அணித்தலைவர் மத்யூஸ் (46), சிறிவர்த்தன (42) ஓரளவு ஓட்டங்கள் குவித்தனர். மேற்கிந்திய தீவுகள் சார்பில், பிராத்வெய்ட் 6 விக்கெட்டுகளை அள்ளினார்.

இதனால் 244 ஓட்டங்கள் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு இலக்காக கொடுக்கப்பட்டுள்ளது. தற்போது மேற்கிந்திய தீவுகள் அணி



2ஆவது இன்னிங்சை விளையாடி வருகிறது.

இன்னும் 2 நாட்கள் மீதமுள்ள நிலையில் மேற்கிந்திய தீவுகளுக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது. (க)

## யூனிஸ் கானின் சாதனையுடன் பாகிஸ்தான் ஆதிக்கம்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னணி ஆட்டக்காரர் யூனிஸ் கான், டெஸ்ட் போட்டிகளில் 9 ஆயிரம் ரன்கள்ளை கடந்துள்ளார். இதன்மூலம் பாகிஸ்தான் அணியில் 9 ஆயிரம் ரன்களை கடந்த முதல் வீரர் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார்.

டுபாயில் நடைபெற்று வரும் இங்கி லாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாவது இன்னிங்சை பாகிஸ்தான் அணி தற்போது விளையாடி வருகிறது. இந்த போட்டியில் 47 ரன்களை கடந்த போது யூனிஸ் கான் இந்த சாதனையை எட்டினார்.

37 வயதான யூனிஸ் கான் 103 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார். இதுவரை 30 சதங்களையும், 31 அரைசதங்களையும் அடித்துள்ளார். அதிகபட்சமாக 313 ரன்கள் குவித்துள்ளார். 264 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 7,240 ரன்கள் எடுத்துள்ளார்.

இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளிடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் ஐக்கிய அரபு இராட்சியத்தில் நடைபெற்று வருகிறது. முதல் போட்டி டிராவில் முடிந்திருந்த நிலையில், இரண்டாவது போட்டி கடந்த வியாழக்கிழமை தொடங்கி நடைபெற்று வருகிறது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் பேட்டிங் செய்த பாகிஸ்தான் அணி முதல் இன்னிங்சில் 378 ரன்கள் குவித்தது. பின்னர் விளையாடிய இங்கிலாந்து அணி 242 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. இதனைத் தொடர்ந்து பாகிஸ்தான் அணி தனது இரண்டாவது இன்னிங்சை விளையாடி வருகிறது. 61 ஓவர்கள் முடிவில் அந்த அணி 3 விக்கெட் இழப்பிற்கு 222 ரன் கள் எடுத்திருந்தது. யூனிஸ் கான் 71 ரன்களுடன் களத்தில் உள்ளார். (க)

## ஒருநாள் தொடரை கைப்பற்றுவது யார்? தென்னாபிரிக்கா-இந்தியா பலப்பரீட்சை

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையேயான 3 போட்டிகள் கொண்ட 20 ஓவர் தொடரை தென்னாபிரிக்கா 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

5 ஒருநாள் போட்டித் தொடரில் 4 ஆட்டம் முடிந்து உள்ளது. இதில் 2-2 என்ற கணக்கில் சமநிலை ஏற்பட்டுள்ளது. இந்தூரில் நடநத 2-வது ஆட்டத்திலும் (22 ரன்), சென்னையில் நடந்த 4-வது போட்டியிலும் (35 ரன்) இந்தியா வெற்றி பெற்றது.

தென்னாபிரிக்க அணி கான்பூரில் நடந்த முதல ஆட்டம் (5 ரன்) மற்றும் ராஜ்கோட்டில் நடந்த 3-வது ஆட்டத்தில் (18 ரன்) வெற்றி பெற்றது.

இந்திய-தென்னாபிரிக்க அணிகள் மோதும் 5-வது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி மும்பை வான்கடே ஸ்டேடியத்தில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) நடக்கிறது.

இரு அணிகளும் சமபலம் பொருந்தியது என்பதால் ஒருநாள் தொடரை கைப்பற்ற போவது யார்? என்ற எதிர்பார்ப்பு ரசிகர்களிடம் இருக்கிறது.

இரு அணிகளும் வெற்றிக்காக கடுமையாக போராடுவார்கள் என்பதால் ஆட்டம் விறுவிறுப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பகல்-இரவாக நடைபெறும் இந்த ஆட்டம் பிற்பகல் 1.30 மணிக்கு தொடங்குகிறது. தூர்தர்சன் மற்றும் ஸ்டார் ஸ்போர்ட்ஸ் டெலிவிசனில் இந்தப்போட்டி நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படுகிறது.

இரு அணி வீரர்கள் விபரம்:-

இந்தியா: தோனி (கப்டன்), ரோகித் சர்மா, தவான், விராட் கோலி, ரகானே, ரெய்னா, அக்ஷர் பட்டேல், ஹர்பஜன் சிங், அமித் மிஸ்ரா, புவனேஸ்வர் குமார், மொகித் சர்மா, அம்பதி ராயுடு, ஸ்ரீநாத் அரவிந்த், குர்கெரத் சிங், ஸரூவேர்ட் பின்னி.

தென்னாபிரிக்கா: டி வில்லியர்ஸ் (கப் டன்), ஹசிம் அம்லா, குயின்டன் டி கொக், மில்லர், டு பிளசிஸ், பெகருதீன், கிறிஸ் மோரிஸ், இமதாகிர், ரபடா, ஸ்ரெய்ன், எல்கர், அபோட், மோர்னே மோர்கல், ஜோன்டோ, பாங்கிசோ. (க)

# ஹாட்லி விளையாட்டுக் கழக இருபது-20 இறுதிப்போட்டி இன்று





பருத்தித்துறை ஹாட்லி ஹைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையிலான இருபது-20 தொடரின் இறுதிப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு ஹாட்லிக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. இறுதிப் போட்டியில் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஜொலிஸ் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (க)

# அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தினால் கௌரவ பட்டம் வழங்கி கௌரவிக்கப்படுவோர்

### "சைவாகமபூஷணம்" நகுலேஸ்வரக்குருக்கள



ஈழமணித் திருநாட்டின் பழைமையான ஈஸ்வரங்களுள் ஒன்றான கீரிமலை நகுலேஸ்வரத்தின் பரம்பரைப் பிரதம குருவாகவும் ஆதீன கர்த்தாவாகவும் விளங்குபவர் இராஜராஜ ஸ்ரீ குமாரசாமிக் குருக்கள் நகுலேஸ்வரக்ருக்கள் ஆவார். 1947 ஆம் ஆண்டு தொடக்கம் இத்தேவஸ்தானத்தில் சிவப் பணியாற்றி வருபவர்.

ஐயா அவர்களின் குருத்துவ மேம்பாட்டினை உணர்ந்து இணுவில் தர்மசாஸ்தா குருகுலம் "வேதாகம பூஷணம்" எனும் கௌரவப் பட்டத்தினையும் இலங்கை அரசு அகில இலங்கை சமாதான நீதவான் (J.P.) பட்டத்தினையும் வழங்கியமை முக்கியமாகக் குறிப்பிடத்தக்கன. இன்னும் இவர் பல கௌரவப் பட்டங்களைப் பெற்று மிளிர்கின்றார். சைவப் பெருமக்கள், அரசியல் தலைவர்கள், கல்விமான்கள் இணைந்து பவள விழாவினை சிறப்பாக நிகழ்த்தினார்கள்.

இவரது சைவப் பணி, சைவசித்தாந்தப் பணிகளைக் கௌரவித்து அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தினர் "சைவாகமபூஷணம்" எனும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கின்றனர்.

### "சைவப்புலவர் மணி" சுப்பிரமணியம் செல்லத்துரை



யாழ். இளவாலை பத்தாவத்தையை சொந்த இடமாகக் கொண்ட இவர் சுப்பிரமணியம் பத்தினிப்பிள்ளை தம்பதியரின் மகனாவார். பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் 1950 ஆம் ஆண்டில் பயிற்சி முடித்த பின் ஆசிரியத் தொழிலை மேற்கொண்டார்.

வானொலி, தொலைக்காட்சிகளில் பல நிகழ்வுகளை நடத்திய மையோடு பத்திரிகைகளிலும் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். வெளிநாடுகளுக்கும் சென்று சைவ சமய இலக்கிய உரைகளை நிகழ்த்தி வருகின்றார்.

16 உரைநாடகங்கள், 3 இசை நாடகங்கள், 2 இசைச்சித்திரம், 12 நாட்டிய நாடகங்கள், 2 தாளலய நாடகங்கள், 7 சிந்துநடைக்கூத்து, 16 வில்லுப்பாடல்கள், தெருக்கூத்து, 8 பிரபந்தங்கள் பல சிறப்புமலர்களின் ஆசிரியரும் ஆவார்.

இவரது சைவப் பணி, சைவசித்தாந்தப் பணிகளைக் கௌரவித்து அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தினர் சைவப்புலவர் மணி எனும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கின்றனர்.

### "சைவப்புலவர் மணி" செல்லையா திருநாவுக்கரசு



சைவப்புலவர் கலாநிதி செல்லையா திருநாவுக்கரசு அல்லைப்பிட்டியில் செல்லையா இலட்சுமி தம்பதிகளுக்கு 1950 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 24 ஆம் திகதி பிறந்தவர். தனது ஆரம்பக் கல்வியினை அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தில் நிறைவு செய்த பின் வேலணை மத்திய கல்லூரியில் சிரேஷ்ட உயர் நிலைக் கல்வியினைத் தொடர்ந்தார். விவசாயக் குடும்பத்தில் தோன்றிய இவர் ஆரம்பத்தில் கூட்டுறவு ஊழியராக, தபால் திணைக்கள ஊழியராக, இ.போ.ச. ஊழியராக கடமையாற்றியவர். கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளராக, பிரதி அதிபராகக் கடமையாற்றி ஓய்வு நிலை பெற்றுள்ளார்.

சைவசமய,தமிழ் சொற்பொழிவு, நூலாக்கம், சமூக சேவை, எழுத்தாக்கம், இலவசக் கற்பித்தல் போன்ற பல துறைகளிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு இருப்பவர்.

கலைவாரிதி, கலாபூஷணம், கலைஞானச் சுடர் போன்ற கௌரவப் பட்டங்களைப் பெற்ற இவரது சைவப் பணி, சைவசித்தாந்தப் பணிகளைக் கௌரவித்து அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தினர் சைவப்புலவர் மணி எனும் பட்டம் வழங்கி கௌரவிக்கின்றனர்.

### "சிவநெறிப் புரவலர்" குமாரசாமி கங்கைவேணியன



வேணி களஞ்சியம் யாழ்ப்பாணம், வேணி பாரவூர்திச் சேவை, வவுனியா அபிராமி அரிசியாலை என்பவற்றின் உரிமையாளராக விளங்கும் இவர் 1958.07.28 ஆம் திகதி புளியங்கூடலில் பிறந்தவர். யாழ். பழம் றோட், கொழும்பு பம்பலப்பிட்டி ஆகிய இடங்களில் தொழில் நிமித்தமாக வசிப்பிடங்களைக் கொண்டுள்ளார். சைவசமய சமூகத் தொண்டுகளில் மிகுந்த ஆர்வமுடன் ஈடுபடுகின்றவர்.

தீவக அரிமாக்கழக ஆரம்ப கால நிர்வாக உறுப்பினர், யாழ். மாவட்டஅரிமாக்கழகத் தலைவர், மனித உரிமைகள் சங்க நிர்வாக உறுப்பினர், யாழ்.மாவட்ட பசுக்கள் இடங்கள் பாதுகாப்புச் சபை அமைப்பாளர் போன்ற கௌரவ பதவிகளின் ஊடாகச் சமூகத் தொண்டாற்றுகின்றார்.

குங்குலியக் கலயநாயனார் போலசுகந்த தூபம் இடும் பணியிலும் தன்னை முழுமனதுடன் இணைத்து சமயத் தொண்டினில் ஈடுபடுத்தி வருபவராக விளங்குகின்றார்.

இவரது சைவப் பணியை கௌரவித்து அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தினர் சிவநெறிப் புரவலர் எனும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கின்றனர்.

### "சிவநெறிப் புரவலர்" சரவணமுத்து ஆறுமுகநாதன்



துர்க்காபுரம் தெல்லிப்பழையை பிறந்த இடமாகக்கொண்ட ச. ஆறுமுகநாதன் அவர்கள் 1939-10-30 இல் சரவணமுத்து அன்னப்பிள்ளை தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தவர்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் கல்வி பெற்று சிரேஷ்ட தராதரத்தில் சித்தி பெற்றபின் WALKER & SONS நிறுவனத்தில் தொழில் வாய்ப்புப் பெற்று கட்டட ஒப்பந்த வேலைகளைச் செய்தார்.

சமயப் பணிகளோடு தெல்லிப் பழை மல்லாக அரிமாக்கழக தலை வராய், வலயத் தலைவராய், மாவ ட்டத் தலைவராக விளங்குகிறார்.

"சிறந்த கூட்டுறவாளர், "தேசமானி", "தேசபந்து", "லங்கா புத்திர","விசு வகீர்த்தி" ஆகிய கௌரவப் பட்ட ங்களையும் விருதுகளையும் பெற்றுள்ளார்.

இவரது சைவப் பணியை கௌரவித்து அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தினர் சிவ நெறிப் புரவலர் எனும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கின்றனர்.

## கழிவுப் பொருட்கள் அதிகரிப்பு

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களில் பொதுமக்களால் கொட்டப்படும் கழிவுப் பொருட்கள், குப்பைகள் என்பன நிரம்பிக் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் சுகாதார சீர்கேடு அதிகரித்து வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாகக் கொட்டப்பட்டு வரும்இக்கழிவுப்பொருட்கள்,குப்பைகள் மழைகாலத்தில் சுவாசிக்கமுடியாத துர்நாற்றத்தை ஏற்படுத்துகின்றது.

இவ்வாறான கழிவுப்பொருட்கள் உரிய முறையில் அகற்றப்பட்டு வந்த நிலையில் மீண்டும் பொது மக்களால் கொட்டப்பட்டு வருகின்றது.

எனவே கொட்டப்பட்டு வருகின்ற கழிவுப்பொருட்கள், குப்பைகள் என்பன உரிய முறையில் அகற்றப்பட வேண்டும் என வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை செயலாளர் க.கனகதுரை பொதுமக்களிடம் கேட்டுள்ளார். (இ-5-60)

## கலந்துரையாடல்

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோர்களுக்கான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் தரம் 6ஆம்ஆண்டுஅனுமதிக்கானவிண்ணப்ப படிவங்களில் ஒப்பமிடுதல், இந்து ஆரம்பப் பாடசாலையின் நூற்றாண்டு விழா தொடர்பாக பெற்றோருக்கு தெரியப்படுத்துதல் என்பன இடம்பெறும். எனவே அனைத்து பெற்றோர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பாடசாலை அதிபர் நா.மகேந்திரராசா கேட்டுள்ளார். (இ-5)

## விண்ணப்பம் கோரல்

காணி அமைச்சின் இலங்கை நில அளவைத் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள ஆரம்பமட்ட - பகுதி தேர்ச்சி பெற்ற(PL02-2006-A) நில அளவைக்கள உதவியாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காகத் தகைமையுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள கோரப்படுகின்றன.

க.பொ.த. சாதராண தரப்பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும.விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று 18 வயதிற்கு குறையாமலும், 45 வயதிற்கு மேற்படாமலும்இருத்தல்வேண்டும.

சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் (ரீட்சை), நில அளவைத் திணைக்களம், கொழும்பு என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் எதிர்வரும் நவம்பர் 20 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பதாக கிடைக்கத் தக்கதாக அனுப்புதல் வேண்டும.

மேலதிக தகவல்களை நேற்று முன்தினம் வெளியான வர்த்தமானி பத்திரிகையில் பார்வையிடலாம். (இ-7-10)

## ராசி பலன்

**மீனம்:** திட்டமிட்ட பயணமொன்றில் திடீர் மாற்றங்கள் ஏற்படலாம், குடும்பத்தினரிடையே முன்கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**மேடம்:** பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வழக்கத்தை விட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை அமையும்.

**இடபம்:** காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்துசேரலாம், உறவினர்களின் வருகையுண்டு, மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும்.

**மிதுனம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்,மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், நண்பர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**கும்பம்:** பயணங்களால் பலனுண்டு ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் ஏற்பட்ட கவலைகள் தீரும்,பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம்.

| | | | |
|---|---|---|---|
| கேது சந் | | | |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் மகம் சுபமுகூர்த்த தினம் | | |
| | | | குரு, செவ், சுக் |
| | சனி | சூரி | ராகு, புத |

**ராசி பலன்**

25.10.2015
(ஐப்பசி 08, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57மணிக்கு,
திரயோதசி முன்னிரவு 10.56 மணிவரை
உத்தரட்டாதி பின்னிரவு 4.07 மணிவரை
இராகுகாலம் 4.32-6.02 மணிவரை
சுபநேரம் 9.02-10.32 மணிவ்ரை
பிரதோச விரதம்

வளவன்

**கடகம்:** நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும் நாள்,மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் கூடும், பயணங்களால் பலனுண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மகரம்:** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பிரபல மானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், இளைய சகோதர வழியில் இனிய செய்திகள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** ஆதவன் வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், குடும்பத்தில் தேவையற்ற மனஸ்தாபங்கள் ஏற்படலாம், வாகன பழுதுச் செலவுகள் ஏற்பட வாய்ப்புண்டு.

**தனுசு:** பெற்றோர் மீது பிரியம் கூடும், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும்,சுபசெலவுகளில் அக்கறை காட்டுவீர்கள்,அரசியல் செல்வாக்கு மேலோங்கும்.

**விருச்சிகம்:** சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படும், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், புண்ணிய காரியங்களில் நாட்டம் காட்டுவீர்கள்.

**துலாம்:** நன்மைகள் நடைபெறும் நாள், சுப தகவல்கள் வந்து சேரும் நாள்,எடுத்த காரியத்தை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்,உடல் நலம் சீராகும்.

**கன்னி:** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், களஸ்திர நன்மையுண்டு.

# தமிழரின் அரசியல் எதிர்பார்ப்புகள் வென்றெடுக்கப்பட வேண்டும்

(யாழ்ப்பாணம்)

**தற்போதைய சூழலை தமிழ்த் தரப்புகள் தமிழ் மக்களுக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்வது அவசியமாகவுள்ளது. இந்த வாய்ப்பையும் தவறவிட்டால், தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் தீர்வுகள் என்பது த்ராத பிரச்சினையாகவே தொடரக்கூடும் என்று முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.**



இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்தியாவின் முன்னாள் நிதி அமைச்சர் ப. சிதம்பரத்தை நேற்றுமுன்தினம் சந்தித்த போதே டக்ளஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை இருவரும், ஜெனிவாவில் இலங்கை தொடர்பான தீர்மானங்கள், இலங்கையின் சமகால அரசியல் முன்னெடுப்புக்கள், வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகள், 13ஆவது திருத்தச் சட்டத்தின் முழுமையான அமுலாக்கத்தின் அவசியம், புதிய அரசியல் அமைப்பின் ஊடாக தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் அரசியல் தீர்வு போன்ற பல முக்கிய விடயங்கள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடினார்கள.

இச்சந்திப்பில் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த டக்ளஸ், இலங்கையில் முன்னெடுக்கபடும் விசாரணைகள், பாதிக்கப்பட்ட மக்களின் நம்பிக்கையைப் பெறுகின்ற விதமாக முன்னெடுக்கப்பட வேண்டும். இக்கால கட்டத்தில் நடைபெற்ற அனைத்து குற்றங்களும், கொலைகளும் பாரபட்சம் மற்றும் அரசியல் பழிவாங்கல்களுக்கு இடமளிக்காது நீதியாக விசாரிக்கப்பட வேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு பரிகாரங்கள் காணப்பட வேண்டும். புதிய அரசியல் அமைப்பின் ஊடாக வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு விசேட அதிகாரங்கள் வழங்கப்பட வேண் டும் என்பவையே தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளாக இருக்கின்றது என்பதை எடுத் துக் கூறினார்.

இதேவேளை, இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்திய அரசு ஐம்பதாயிரம் வீடுகளைக் கட்டித்தர வேண்டுமென தாம நேரடியாக முன்வைத்த கோரிக்கையை அப்போது காங்கிரஸ் அரசின் உள்துறை அமைச்சராக இருந்த சிதம்பரம் அவர்கள், இந்தக் கோரிக்கையை உடனடியாகவே அப்போதைய இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு தெளிவுபடுத்தி அந்த உதவியை தமிழ் மக்களுக்கு பெற்றுக் கொடுத்ததை தாம் இன்னும் மறக்கவில்லை என்றும் அதற்காக தமிழ் மக்களின் சார்பாக மீண்டும் ஒருமுறை நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாகவும் தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது, ஈ.பி.டி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் வட மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான எஸ். தவராசா, ஈ.பி. டி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.டி.பியின் யாழ்ப்பாண மாவட்ட அமைபபாளருமான கே.வி.குகேந்திரன் மற்றும் கட்சியின் ஊடகச் செயலாளர் ஸ்டாலின் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (இ-7)

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

கடற்றொழில்.நீரியல் வளத்திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவை வகைக்கூறு பதவிகளுக்கு ஆட்சேர்த்துக் கொள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

துயகணிதம்/பீரயோ கணிதம்/ இணைந்த கணிதம் மற்றும் பௌதீகவியல் / பொறியியல் தொழில் நுட்பவியல் /தொழில்நுட்பவியல் விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உட்பட மூன்று பாட ங்கள் க. பொ. த. உயர்தர பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் . அத்துடன் சிங்களம்/தமிழ் /ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் க. பொ. த. சாதாரண தரப்பரீட்சையில் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்

விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்குமேற்படாமலும் இருத்தல் வேண்டும்

பணிப்பாளர் நாயகம், கடற்றொழில்,நீரியல் வளத் திணைக்களம், புதிய செயலகம, மாளிகாவத்தை, கொழும்பு 10 என்னும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் எதிர்வரும் நவம்பர் 6ஆம் திகதி அல்லது அதற்கு முன்பதாக கிடைக்கத்தக்கதாக அனுப்புதல் வேண்டும. மேலதிக தகவல்களை நேற்று முன்தினம் வெளியான வர்த்தமானி பத்திரிகையில் பார்வையிடலாம். (இ-7)

***************************************

நிலையான அபிவிருத்தி மற்றும் வன விலங்குகள் அமைச்சின் தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தில் முகாமைத்துவ உதவியாளர் தொழில் நுட்பம் சாராதபிரிவு 2 சேவை வகைக்குரியகட்டண அறவீட்டு உத வியாளர் பதவிக்கு ஆட்சேர் ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகுதி வாய்ந்த விண் ணப்பதாரிகளிடமிருந்து விண் ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழி,கணிதம் மற்றும் வேறுபாடங்கள் இரண்டில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் மற்றும் க.பொ.த. உயர்தரப் பரீடசையில் குறைந்தது பிரதான பாடங்களில் ஒன்றிலாவது சித்தியடைந்திருத்தல்.

விண் ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

பணிப்பாளர் நாயகம், தேசியதாவரவியல் பூங்காக்கள் திணைக்களம், த. பெ. இல. 14, பேராதனை என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில்எதிர்வரும் நவம்பர் 13ஆந் திகதி அல்லது அதற்கு முன்பதாக கிடைக்கத்தக்கதாக அனுப்புதல்வேண்டும்

மேலதிக தகவல்களை நேற்றையதினம் வெளியான வர்த்தமானிபத்திரிகையில் பார்வையிடலாம். (இ-7)

## ஒக்டோபர் எழுச்சியின் நினைவுக்கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் 1966 ஒக்டோபர் எழுச்சியின் 49ஆவது ஆண்டு நினைவுக் கருத்தரங்கு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை யாழ். பொது நூலயத்தில் உணவக மண்டபத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு கட்சியின் வட பிராந்தியச் செயலாளர் செல்வம் கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கருத்துரைகளை கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல், பொருளாதார சமூக ஆய்வாளர் அகிலன் கதிர்காமர் ஆகியோர் வழுங்கவுள்ளனர்.

குறிப்புரைகளை மு.இராசநாயகம், யாழினி யோகேஸ்வரன், கி.நவநீதன், த.சிறீபிரகாஷ் ஆகியோர் வழுங்கவுள்ளனர். (இ-5)

## கந்தபுராண படிப்பு

சுழிபுரம் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவிலில் ஆண்டுதோறும் இடம்பெற்று வரும் கந்தபுராண படிப்பு நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகி 2016 ஆம் ஆண்டு தை மாதம் வரை நடைபெறவுள்ளது.

இக்கந்தபுராண படிப்பு நிகழ்வினை சைவசித்தாந்த பண்டிதர் செ.சிவபாதம், பண்டிதர் தி.பொன்னம்பலவாணர் ஆகியோர் வழங்குவர் (இ-5)

## யாழ்.இந்து ஆரம்பப்பாடசாலையின் 100 ஆவது ஆண்டு நிறைவு விழா

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் 100ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை 26ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 28ஆம் திகதி புதன்கிழமை வரை யாழ்ப்பாணம் நீராவியடியில் அமைந்துள்ள இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதற்கமைய நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள காலை நிகழ்வுகள் பாடசாலை அதிபர் நா.மகேந்திரராசா தலைமையில் இடம் பெறும்.

பிரதம விருந்தினராக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமா மகேஸ்வரன் கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜாவும், கௌரவ விருந்தினராக தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத் தலைவர் கலாநிதி. ஆறு.திருமுருகனும், கலந்துகொள்ளவுள்ளனர்.

இதன்போது ஆசியுரையினை நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் வழங்கவுள்ளார்.

இரண்டாம் நாள் அமர்வு 27ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 8.30 மணிக்கு அதிபர் தலைமையில் ஆரம்பமாகி நடைபெறும்.

பிரதம விருந்தினராக வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளதுடன் சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ். அமிர்தலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.

இதன்போது ஆசியுரையினை சின்மயாமிஷன் வதிவிட ஆச்சாரியார் ஜாக்ரத சைதன்யா சுவாமிகள் வழங்கவுள்ளார்.

தொடர்ந்து இந்து மழலைகள் நூல் வெளியீடு இடம் பெறும்.

நூல் வெளியீட்டுரையினை சிரேஷ்ட ஊடகவியலாளர் ந.வித்தியாதரன் நிகழ்த்துவார். முதற் பிரதியை என்பு முறிவு சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர்.கோபிசங்கர் பெற்றுக் கொள்ளவுள்ளார்.

நயப்புரையினை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கல்வியியற்றுறை முன்னாள் தலைவர் ஓய்வுநிலை பேராசிரியர் மா. சின்னத்தம்பி நிகழ்த்தவுள்ளதுடன், ஏற்புரையினை யாழ்.இந்து ஆரம்பப்ப ாடசாலை ஆசிரியர் சி. நவகாந்தன் வழங்கவுள்ளார்.

தொடர்ந்து மாலை நிகழ்வுகள் பிற்பகல் 3.30 மணிக்கு பழைய மாணவர் சங்கத் தலைவர் எஸ்.ரி.பி.இராஜேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் ந.வேத நாயகன் கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார், சர்வதேச வர்த்தக வங்கியின் முன்னாள் தலைவரும், ஆர்.எம்.எஸ் ஹெல்த் கெயார் தலைவர் இ.இராகவன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதன்போது ஆசியுரையினை சிவஸ்ரீ. ஜெ. உமா சுதக்குருக்கள் வழங்கவுள்ளார்.

மூன்றாம் நாள் அமர்வு 28 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல்3.30மணிக்குபழைய மாண வர் சங்க ஸ்தாபகத் தலைவர் ந. வித்தியாதரன் தலைமையில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொள்வ துடன் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் கலந்து கொள்ளவுள்ளார். ஆசியுரையினை தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் நிகழ்த்தவுள்ளார். (இ-5)

# தமிழ்க் கைதிகளின் விடுதலைக்காக வழிபாடு



தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வேண்டி வீணாகான குருபீடத்தினரால் திருவாசக முற்றோதல் நிகழ்வு நேற்றைய தினம் காலை வடக்கம்பரை ஸ்ரீமுத்துமாரியம்பாள் ஆலயத்தில் நடைபெற்றது. வீணாகான குருபீடத்தின் ஏற்பாட்டிலும் ஸ்ரீ முத்துமாரியம்பாள் ஆலயத்தின் ஒத்துழைப்புடனும் நடைபெற்ற இந்த நிகழ்வில் நீண்ட காலமாக சிறைத்தண்டனை அனுபவித்து வரும் தமிழ் அரசியல் கைதிகளுக்கு மிக விரைவாக விடுதலை கிடைக்க வேண்டியும் கொழும்பு மேல்நீதிமன்றத்தினால் 300 வருடங்கள் சிறைத்தண்டனையை பெற்றுள்ள அந்தண சிவாச்சாரியார் ரகுபதி சர்மாவுக்கு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை கிடைக்க வேண்டியும் இத் திருவாசக முற்றோதல் நடைபெற்றது. (இ-9)

## ஞானச்சுடர் வெளியீடு

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை வெளியீடாகிய ஞானச்சுடர் இதழின் 213 ஆவது புரட்டாதி மாத மலர் வெளிவந்துள்ளது. (இ-5)

## பரிசளிப்பு விழா

யாழ். வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கல்லூரி அதிபர் திருமதி தே.நவரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கி பருத்தித்துறை கிளை முகாமையாளர் சி. ஆனந்தராஜா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இதன்போது பரிசில்களை திருமதி ஜெயகௌரி ஆனந்தராஜா வழங்கவுள்ளார். (இ-5-60)

## போதனாசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரல்

இலங்கைத் தொழிற் பயிற்சி அதிகார சபையின் யாழ். மாவட்டத்தில் உள்ள தொழில் பயிற்சி நிலையங்களுக்கு கற்கை நெறிகளை கற்பிக்கும் போதனாசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சமயற்கலை வல்லுநர், வெதுப்பாளர், அறை ஒழுங்குபடுத்துநர், உணவு பரிசோதகர், மின் மோட்டார் மீள் முறுக்குநர் (வைன்டிங்), நீர்க்குழாய் பொருத்துநர், அழகுக் கலை வல்லுநர், பெண்கள், சிறுவர்களுக்கான ஆடை வடிவமைப்பாளர், அலுமினியம் பொருத்துநர், குடிசார் பட வரைகலைஞர், குடிசார் கணிய அளவையியலாளர் போன்ற கற்கை நெறிகளுக்கு போதனாசிரியர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. மேற்படி கற்கைநெறிகளை கற்பிக்கும் போதனாசிரியர்கள் க.பொ.த. சாதாரண தரத்தில் தமிழ், கணிதம், ஆங்கிலம் உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் அவசியம்.

தொழில்சார் தகைமைகளாக அரசாங்க அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் NVQ-3/4 பட்டம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் சம்பந்தப்பட்ட துறையில் 3 வருடத்திற்கு மேல் தொழில் பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ் அல்லது சம்பந்தப்பட்ட துறையில் டிப்ளோமா அல்லது பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

மேலும் சம்பந்தப்பட்ட துறை ஒன்றில் இரண்டு வருடத்திற்கு மேலான அனுபவம் இருத்தல் வேண்டும். எனவே மேற்படி தகைமைகளையுடைய ஆர்வமுடையோர் தமது சுயவிபரம் அடங்கிய விண்ணப்பப் படிவம் ஒன்றினை நவம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னதாக உதவிப் பணிப்பாளர், இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை, 1ஆம் மாடி வீரசிங்கம் மண்டபம், இல. 12 கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு இலங்கைத் தொழிற் பயிற்சி அதிகார சபையின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் கு. நிரஞ்சன் அறிவித்துள்ளார் (இ-5)


## தேவை

கிளிநொச்சியில் அமைந்திருக்கும் பிரபல வர்த்தக நிறுவனம் ஒன்றிற்கு கீழ்க்குறிப்பிடப்படும் பதவிக்கான பணியாளர்கள் தேவை.

சிட்டை எழுதுநர்
கணக்காளர்
Salesman - பொதி செய்பவர்

[ஐந்து வருட அனுபவம் விரும்பத்தக்கது]

தொடர்புகளுக்கு:071 735 4308

(2147)

## நெல் வயல் காணி விற்பனைக்கு

நாவற்குழி, நெணியன் வயல் வெளியிலுள்ள நல்ல விளைச்சல் உள்ள ஒரு ஏக்கர் வயல் காணி விற்பனைக்குண்டு.
ஒரு பரப்பு ரூ 20,000/=
விலை பேசித்தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு:071 618 5498

(2108)

## அமெரிக்க Green Card Lottery -2017

அமெரிக்க Green card Lottery விண்ணப்பத்தில் 13 வருட அனுபவமிக்க எமது நிறுவனத்தில் 2017 ஆம் ஆண்டுக்கான விண்ணப்பப்படிவம் மற்றும் விபரங்களை ரூபா 15/- முத்திரையொட்டப்பட்டு சுய முகவரியிட்ட தபாலுறையை Bristol Cyber cafe. No. 8/3/4, Bristol Street, Colombo -01 எனும் முகவரிக்கு அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.
(எமது நிறுவனத்திற்கு கிளை அலுவலகமோ அல்லது பிரதிநிதிகளோ இலங்கையின் எப்பாகத்திலும் இல்லை என்பதை அறியத் தருகின்றோம்.)

Tel : 0112393919, 0774276579

(C-2243)

W/A 44843 www.bristolcc.biz


# அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் தமிழ் தெரிந்த அதிகாரிகள் இல்லை

## அமைச்சர் திகாம்பரம் கண்டனம்

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தில் தமிழ் தெரிந்த அதிகாரிகள் இல்லாமை குறித்து அமைச்சர் திகாம்பரம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் கட்டட ஆய்வு மையம் ஆகியவற்றில் தமிழ் தெரிந்த அதிகாரிகள் இல்லாமையும் ஒரு பேரனர்த்தம் என்பதாக அமைச்சர் திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்ட உட்கட்டமைப்பு, சமூக அபிவிருத்திக்கான அமைச்சர் பழனி திகாம்பரம இது தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பாவுக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளார்.

மலையகத்தின் பல்வேறு பகுதிகள் அடிக்கடி இயற்கை அனர்த்தங்களுக்கு உள்ளாகி வரும் நிலையில் அது தொடர்பான நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிலையத்தில் தமிழ் தெரிந்த அதிகாரிகள் இன்மையால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே குறித்த நிறுவனங்களில் தமிழ் தெரிந்த அதிகாரிகளை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அமைச்சர் திகாம்பரம் கோரிக்கை விடுத்துள்ளார்.(இ-7)


## நடமாடும் மிருகவைத்திய சேவை

தாவடிக்கு அண்மையில் மிருக வைத்திய சேவைகளுக்கு
தொடர்பு: 077 973 8802, 021 224 2502

(2156)

## வவுனியாவில் சித்த ஆயுர்வேத வைத்தியம்

நீர்வேலியில் வைத்திய சேவை செய்த கிருஷ்ணா சித்த ஆயுர்வேத வைத்தியசாலை கீழ்க்காணும் முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது. ஆயினும் எமது வழமையான நோயாளர்கள் முன் ஏற்பாட்டின் பேரில் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நீர்வேலியில் சந்திக்கலாம்.

எம்மிடம் நீண்ட அழகிய கூந்தலைப் பெற நேத்திர சிந்தாமணித் தைலம் (மொட்டைத் தலை இளைஞர்களும் பாவித்துப் பயன் பெறலாம்)
திருமணமாகி நீண்டகாலமாகியும் குழந்தைச் செல்வம் இல்லாதவர்களுக்கு உள்ள குறைபாடுகள் நீங்கி குழந்தைச் செல்வம் கிடைப்பதற்கான ஏது நிலைகள் உருவாக்கிக் கொடுக்கப்படும்.

பாலியல் வாழ்வில் திருப்தியில்லாதவர்களுக்கு "இராஜவசீகரனா லேகியம்" பாவித்துப் பூரண திருப்தி பெறலாம். மற்றும் மூட்டுவாத வலிகள், நெஞ்சுவலி, இடுப்பு வலி, பெண்கள் சம்பந்தமான நோய்கள் ஆகியவற்றுக்கும் நீண்டகால நோய்களால் அவதிப்படுவோர் தங்கள் ஜாதகக்குறிப்புடன் தொடர்பு கொண்டால் அவற்றிற்கான பரிகாரங்களும் செய்யப்படும்.

தூர இருந்து வருவோர் முன் அனுமதி பெற்று வரவும்.

இல:11, 3ம் குறுக்கு தெரு (பஞ்சாலைக்கு முன்னால்), கண்டி றோட், வவுனியா.

Dr.த.கிருஷ்ணபகவான் (Govt Rgt No-10329)
தொலைபேசி இல: 077 972 3369

(2124)

## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா:31 செவ் 2 இல்
உயரம்: 5’9"
தகைமை/தொழில்:BSC/ பொறியியலாளர்
தொ.இ: B/4028

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 12
உயரம்: 5’8"
தகைமை/தொழில்:Diploma/ ஆசிரியர்
தொ.இ: B/1622

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 13
உயரம்: 5’8"
தகைமை/தொழில்:BSC, MSC/ தனியார் தொழில்
தொ.இ: B/1628

பிறப்பு: 1971 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 32 செவ் 7 இல்
உயரம்: 5’6"
தகைமை/தொழில்:BA/ஆசிரியர்
தொ.இ: B/1631

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 11 சூரிசெவ் 10 இல்
உயரம்: 5’4"
தகைமை/தொழில்:HNDA/ அரசதொழில்
தொ.இ: G/2744

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 19சூரிசெவ் 11 இல்
உயரம்: 5’2"
தகைமை/தொழில்:பொறியியலாளர் லண்டன் NOT PR
தொ.இ: G/2748

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 3
உயரம்: 5’
தகைமை/தொழில்:B.COM
தொ.இ: G/2758

பிறப்பு: 1983RC
நட்சத்திரம்: ஆயிலியம்
உயரம்: 5’5"
தகைமை/தொழில்:A/L/கணக்காளர்
தொ.இ: G/2760

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( [illegible] )

# பாலச்சந்திரன் படுகொலைக்கு உயர்மட்ட உத்தரவே காரணம்

## மங்கள சமரவீர சுட்டிக்காட்டு



வெள்ளைக்கொடியுடன் சரணடைய வந்தவர்கள். புலிகளின் தலைவர் பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரன் ஆகியோரை கொலை செய்ய வேண்டிய அவசியம் களத்தில் இருந்த இராணுவத்தினருக்கு இருக்கவில்லை எனவும் உயர்மட்ட உத்தரவே இதற்கு காரணம் எனவும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற, ஜெனிவா தீர்மானம் மற்றும் ஐ.நா விசாரணை அறிக்கை தொடர்பான ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்துக்குப் பதிலளித்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில்,

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் பற்றி சிலர் அர்த்தமற்ற வகையில் கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர். இதன் பின்னணி என்னவென்பது புரியாமலேயே அவர்கள் உளறுகின்றனர்.

உண்மை என்னவென தெரிந்திருந்தும் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக போலிப்பிரசாரங்களை பரப்புகின்றனர்.

முன்னய அரசு சிறந்த இராஜதந்திர வெளியுறவுக் கொள்கையை பேணவில்லை.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் தீர்மானத்தை எதிர்த்த முன்னைய அரசுக்கு சார்பாக 12 நாடுகளே குரல்கொடுத்தன. ஏனைய உறுப்பு நாடுகள் இலங்கை மீது கடும் அதிருப்தியில் இருந்தன.

இதனால் அனைத்துலகத்தின் மத்தியில் இலங்கையின் நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டது.

ஜனவரி 8 ஆம் நாள் இலங்கையில் ஜனநாயகப் புரட்சி ஏற்பட்டது. புதியதொரு அரசியல் கலாசாரம் உருவாக்கப்பட்டது.

இதன்பெறுபேறாக குறுகிய காலத்துக்குள் எம்மால் அனைத்துலகத்தின் நன்மதிப்பை பெறமுடிந்தது. அத்துடன் அமெரிக்காவின் யோசனையை இலங்கையின் யோசனையாக மாற்றினோம்.

முன்னைய அரசால் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் உறுப்பு நாடுகளுக்கிடையே பிளவுகள் ஏற்பட்டன.

எனினும் தற்போது நாடுகள் ஒன்றிணைந்துள்ளன. சீனா, ரஷ்யா, இந்தியா ஆகிய நாடுகளும் தீர்மானத்துக்கு வரவேற்பு தெரிவித்துள்ளன.

ஐ.நா.மனிதவுரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் 20 ஆவது பந்தி மிக முக்கியமானதாகும். இதைப்பற்றி எவரும் கதைக்கவில்லை.

இலங்கை அரசுடன் பேச்சு நடத்தி அவர்களின் இணக்கப்பாட்டுடனேயே நடவடிக்கைகள் இடம்பெற வேண்டும் என்றும் தொழில்நுட்ப உதவி ஆலோசனைகள் வழங்கப்பட வேண்டும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

ஆகவே எதை செய்வதாக இருந்தாலும் அது இலங்கையின் அனுமதியுடனேயே அது இடம்பெறவேண்டும் என்பது இதன் ஊடாக தெளிவாக புலனாகின்றது.

இந்த விடயம் இங்குள்ள பிள்ளே அணிக்கு (உதய கம்மன்பில தரப்பு) விளங்குவதில்லை.

ஜெனிவாவில் முன்னெடுக்கப்பட்டது இலங்கையின் நடவடிக்கையாகும். வேறு நாட்டவர்களை திருப்திப்படுத்த வேண்டிய அவசியம் எமக்கு கிடையாது.

ஆகவே இலங்கைக்கே உரிய பாணியில்தான் உள்ளகப் பொறிமுறை நிறுவப்படும்.

கலப்பு நீதிமன்றம் பற்றி பேசப்படுகிறது. அவ்வாறு எந்தவொரு யோசனையும் இதில் இல்லை.

கம்போடியாவில் கலப்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டது. அதற்கான நீதிபதிகளை ஐ.நா. பொதுச்செயலர் தான் நியமித்தார். இங்கு அப்படியொன்றும் நடைபெறாது. எந்த நாட்டவர்கள் வந்தாலும் எமது சட்டத்தின் பிரகாரமே நகர்வுகள் இடம்பெறும்.

பரணகம ஆணைக்குழுவின் அறிக்கையில் பாரதூரமான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த அறிக்கை தொடர்பில் தனிவிவாதம் நடத்தினால்கூட பரவாயில்லை.

ஐ.நா. அறிக்கையில் கூட பெயர், விபரம் வெளியாகவில்லை. ஆனால் பரணகம குழுவில் அது நடந்துள்ளது.

உள்ளக விசாரணைப் பொறிமுறையை நிறுவுவதற்குரிய பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் ஓர் அங்கமாகத்தான் அனைத்துக் கட்சி மாநாடு நடைபெற்றுள்ளது. அடுத்தவாரமும் இந்த கூட்டம் நடைபெறும்.

உள்ளக விசாரணைக்கு நாம் தேர்தல் அறிக்கையில் உறுதியளித்தோம். இதற்கு மக்கள் ஆணையும் கிடைக்கப் பெற்றுள்ளது.

காணாமற் போனவர்களுக்கான தனிப்பணியகம், கருணைச்சபை, உண்மையை கண்டறியும் ஆணைக்குழு உட்பட நான்கு நிறுவனங்கள் அமைக்கப்படும்.

இதில் காணாமல் போனோர் பணியகம் எதிர்காலத்திலும் இயங்கக்கூடிய வகையில் அமையும்.

அதேவேளை இலங்கையின் நீதிக்கட்டமைப்பு குறித்தும் பேசப்பட்டது. 1971 ஆம் ஆண்டு, 1987 ஆம் ஆண்டு ஆகிய காலப்பகுதிகளில் இலங்கையின் நீதிக்கட்டமைப்பு பலமாகத்தான் இருந்தது.

எனினும் முன்னைய அரசுதான் நீதித்துறையை தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்து. அதன் கம்பீரத்தையும் சுயாதீனத்தையும் இல்லாது செய்தது.

பிரதம நீதியரசராக சரத் என் சில்வாவை நியமித்ததால் நிலைமை மேலும் மோசமடைந்தது. நீதியரசராக இருந்த ஷிராணி பண்டாரநாயக்க அப்பதவியில் இருந்து நீக்கப்பட்டு மெதமுலனவில் பாத்திரம் கழுவியவருக்கு நீதியரசர் பதவி வழங்கப்பட்டது.

இதனால் நீதித்துறைமீது இருந்த நம்பிக்கை கீழ்மட்டத்துக்கு வந்தது. ஆட்சிமாற்றத்தின்பின்னர் நீதித்துறையை நேர்வழியில் பயணிக்க விட்டிருக்கின்றோம்.

சுயாதீன ஆணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் நீதித்துறை முழுமையாக பலமடைய காலமெடுக்கும்.

எனவே உள்ளகப் பொறிமுறை நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு அனைத்துலகத்தின் பங்களிப்பு அவசியம்.

முன்னர் இலங்கையின் இராணுவத்துக்கு உலகில் பெரும் கௌரவமிருந்தது. அது பின்னர் சீர்குலைக்கப்பட்டது. ஒரு சிலரின் செயற்பாட்டால் ஒட்டுமொத்த இராணுவக்கட்டமைப்புக்கும் இழுக்கு ஏற்பட்டுள்ளது.

எனவே இராணுவத்தின் நன்மதிப்பை மீள கட்டியெழுப்ப வேண்டும். இதற்காக விசாரணை அவசியம்.

ஆயிரம் பேரின் நற்பெயரை பாதுகாப்பதற்கு ஒருவரை தண்டிப்பதில் தவறு கிடையாது. இராணுவம் பற்றி விசாரணை நடத்துவது அவசியம் என்று நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையிலும் பரிந்துரைக்கப்பட்டது.

அனைத்துக் கட்சி மாநாட்டில் அனைத்துலக விசாரணைக்கு தான் ஒத்துழைப்பு வழங்குவதாக முன்னாள் இராணுவத்தளபதி சரத்பொன்சேகா தெரிவித்திருந்தார் என்பதையும் இவ்விடயத்தில் கூறவிரும்புகின்றேன்.

சனல் 4 ஊடகம் போர்க்குற்ற ஆவணங்களை வெளியிட்ட போது அதன் ஊடகவியலாளரை விமர்சித்தீர்கள். அவர் இலங்கை வந்தபோது கீழ்த்தரமான முறையில் நடந்து கொண்டீர்கள்.

ஆனால் பரணகம ஆணைக்குழு சனல் 4 வீடியோவை நிராகரிக்கவில்லை. அது பற்றி நீதிமன்ற விசாரணை அவசியம் என கூறியுள்ளது.

வெள்ளைக்கொடியுடன் சரணடைய வந்தவர்கள், பிரபாகரனின் இளைய மகன் ஆகியோரை கொலை செய்ய வேண்டிய அவசியம் களத்தில் இருந்த இராணுவத்தினருக்கு இருக்கவில்லை.

உயர்மட்டத்தில் இருந்து பிறப்பிக்கப்பட்ட கட்டளையின்படியே நடைபெற்றுள்ளது என்று கூறப்படுகின்றது.

அப்படியானால் கட்டளையிட்டவர்களை விசாரிக்கும் வகையில் சட்டத்திருத்தம் அவசியம். இதற்கான பரிந்துரையையும் பரணகம குழு முன்வைத்துள்ளது என அவர் மேலும் அவர் தெரிவித்தார். (இ-7)

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

10.2015 25

1147 - முதலாம் அஃபொன்சோ தலைமையில் போர்த்துகீசர் லிஸ்பன் நகரைப் பிடித்தனர்.

1415 - அஜின்கோர்ட் நகரில் இடம்பெற்ற போரில் இங்கிலாந்தின் ஐந்தாம் ஹென்றியின் படைகள் பிரான்சைத் தோற்கடித்தனர்.

1616 - அவுஸ்திரேலியாவில் கால்பதித்த இரண்டாவது ஐரோப்பியர் டச்சு கப்டன் டேர்க் ஹார்ட்டொக். மேற்கு அவுஸ்திரேலியாவில் டேர்க் ஹார்ட்டொக் தீவு அவரது பெயரால் அழைக்கப்படுகிறது.

1760 - மூன்றாம் ஜோர்ஜ் பெரிய பிரித்தானியாவின் மன்னனானான்.

1900 - ஐக்கிய இராச்சியம் தென்னாபிரிக்காவின் டிரான்ஸ்வால் மாநிலத்தை இணைத்துக் கொண்டது.

1917 - ரஷ்யாவில் ஒக்டோபர் புரட்சி (பழைய ஜூலியன் நாட்காட்டியின் படி), இடம் பெற்றது. போல்ஷெவிக்குகள் குளிர்கால அரண்மனையைக் கைப்பற்றினர்.

1918 - அலாஸ்காவில் பிரின்சஸ் சோஃபியா என்ற கப்பல் தாண்டதில் 353 பேர் கொல்லப்பட்டனர்.

1924 - இந்தியாவில் சுபாஷ் சந்திர போஸ் பிரித்தானியரால் சிறைபிடிக்கப்பட்டார்.

1935 - ஹெயிட்டியில் சூறாவளி மற்றும் வெள்ளம் காரணமாக 2,000 பேர் கொல்லப்பட்டனர்.

1936 - ஹிட்லர் மற்றும் முசோலினி இணைந்து ரோம்-பேர்லின் அச்சு என்ற கூட்டமைப்பை ஏற்படுத்தினர்.

1944 - இரண்டாம் உலகப் போர்: பிலிப்பீன்சில் ஐக்கிய அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் இடையில் வரலாற்றில் பெரும் கடற்சமர் இடம் பெற்றது.

1945 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பான் கூட்டு நாடுகளிடம் சரணடைந்ததைத் தொடர்ந்து சீனக் குடியரசு தாய்வானை இணைத்துக் கொண்டது.

1973 - இசுரேல்-எகிப்து இடையல் நடைபெற்ற யோம் கிப்பூர்ப் போர் முடிவுற்று சீனாய் இடைக் கால உடன்படிக்கைக்கு வழிநடத்தியது.

1971 - ஐநாவிலிருந்து சீனக் குடியரசு வெளியேற்றப்பட்டு மக்கள் சீன குடியரசு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

1983 - ஐக்கிய அமெரிக்காவும் அதன் கரிபியன் கூட்டு நாடுகளும் கிரெனாடாவை முற்றுகையிட்டு அதனைக் கைப்பற்றின.

1991 - யூகொஸ்லாவிய இராணுவம் சிலவேனியாவில் இருந்து முற்றாக வெளியேறியது.

1995 - கொழும்பு கொலன்னாவை எண்ணெய்க் குதங்களில் இடம்பெற்ற பெரும் தீயில் 21 படையினர் கொல்லப்பட்டனர்.

2000 - பிந்துனுவேவா படுகொலைகள்: இலங்கையில் பண்டாரவளை, பிந்துனுவேவா சிறைகள் மீது சிங்களவர்கள் நடத்திய தாக்குதலில் தமிழ் அரசியல் கைதிகள் 26 பேர் கொல்லப்பட்டனர்.

2001 - விண்டோஸ் எக்ஸ்பி வெளியிடப்பட்டது.

2001 - இந்தியாவில் தடா சட்டத்துக்கு பதிலாக பொடா என்ற புதிய பயங்கரவாத தடுப்பு சட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்தது. இந்த சட்டத்தின் கீழ் விடுதலைப் புலிகள் உள்ளிட்ட 23 தீவிரவாத அமைப்புகளுக்கு நடுவண் அரசு தடை விதித்தது.

2007 - சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் முதலாவது இரட்டை அடுக்கு விமானம் ஏர்பஸ் ஏ380 தனது முதலாவது சேவையை சிட்னிக்கு ஆரம்பிக்கிறது.

### பிறப்புக்கள்

1811 - எவரிஸ்ட் கால்வா, பிரெஞ்சு கணிதவியலர் (இ. 1832)

1881 - பாப்லோ பிக்காசோ, ஸ்பானிய ஓவியர், சிற்பி (இ. 1973)

1973 - றசல் பிரேமகுமாரன் ஆர்னோல்ட், இலங்கை துடுப்பாட்ட வீரர்

### இறப்புகள்

1400 - ஜெஃப்றி சோசர், ஆங்கில இலக்கிய மேதை. (பி 1340)

2005 - நிர்மல் வர்மா, ஹிந்தி எழுத்தாளர் (பி. 1929)

1980 - ஸாகிர் லுதியானவி, ஹிந்தித் திரைப்படப் பாடலாசிரியர் (பி. 1921)

# ஐ.நா.விசாரணை அறிக்கையை முழுமையாக ஏற்கத்தேவையில்லை

## அமைச்சர் நிமால் கூறுகிறார்



(கொழும்பு)

**ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் விசாரணை அறிக்கையை நாம் முழுமையாக ஏற்றுக்கொள்ளத் தேவையில்லை. அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை விசாரிப்பதற்காகவே தேசிய பொறிமுறையொன்றை அரசாங்கம் அமைப்பதற்கு இணங்கியிருப்பதாக போக்குவரத்துத்துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.**

தேசிய பொறிமுறையின் மூலம் விசாரணை நடத்தி உண்மையை கண்டறிந்த பின்னர், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையில் காணப்படும் குறைபாடுகளை தெளிவாகச் சுட்டிக்காட்ட முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஜெனிவா பிரேரணை தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர், நாம் தேசிய பொறிமுறைக்குப் பயப்படத் தேவையில்லை. தருஸ்மன் அறிக்கை உள்ளிட்ட சர்வதேச விசாரணை அறிக்கை யில் உள்ள பிழைகளை எமது தேசிய விசாரணை முடிவுகள் மூலம் சுட்டிக்காட்டு வதற்கு நமக்கு சிறந்ததொரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. உடலாகம அறிக்கை மற்றும் பரணகம அறிக்கைகள் மூலம் நாட்டில ஏற்பட்ட உண்மை நிலைமைகளை வெளிக்கொணர முடிந்துள்ளது.

இதுபோன்றே தேசிய பொறிமுறையின் மூலம் மேலும் பல உண்மைகளை எம்மால் வெளிப்படுத்த முடியும். அதேநேரம், எந்தவொரு விசாரணையாக இருந்தாலும் அது இலங்கையின் அரசியலமைப்புக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் என நாம் தெளிவான நிலைப்பாட்டில் இருக்கின்றோம் என மேலும் தெரிவித்தார். (இ-7)

## கொழும்பு நகரம் மக்கள் அச்சமின்றி வாழக்கூடிய நகரமாக மாற்றப்படும்

### ரவி கருணாநாயக்க வாக்குறுதி

கொழும்பு மாநகரம் பொது மக்கள் அச்சமின்றி அதே நேரம் ஆரோக்கியமாக வாழக் கூடிய நகரமாக மாற்றியமைக்கப்படும் என்று நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த கலந்துரையாடலில் தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் ரவி கருணாநாயக்க,

கொழும்பு மாநகரின் வடக்குப் பகுதியான காக்கைத்தீவு பகுதியில் பொலிஸ் சோதனைச் சாவடிகள் அமைத்து அப்பகுதியில் நடைபெறும் சமூக விரோதச் செயல்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்படும்.

களனியாற்றின் இருகரைகள் மற்றும் முக்கியமான சூழல் அம்சங்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் கொழும்பின் சூழல் மாசடைதலைத்தடுத்து ஆரோக்கியமான வாழ்க்கைக்கு அடித்தளமான மாசற்ற சூழல் நிலையை ஏற்படுத்த பல்வேறு செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபை, பொலிஸார் மற்றும் அனைத்து அரச அதிகாரிகளின் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் ரவி கருணாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## விபத்தில் 25 பேர் படுகாயம்

தம்புள்ளை. இனாமலுவ பிரதேசத்தில் நிகழ்ந்த வாகன விபத்தில் 25 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று அதிகாலை 2.25 மணியளவில் தனியார் பேருந்து ஒன்றும் லொறியொன்றும் மோதியதினாலே இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. குறித்த பேருந்தில் பயணித்த 35 பேர் காயமடைந்துள்ள நிலையில் அவாகளில 25 பேர் தம்புள்ளை ஆதர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சிறு காயங்களுக்குள்ளானவர்கள் சிகிச்சை பெற்று கொள்ளாமல் வேறு வாகனங்களில் சென்றுள்ளனர்.

பொலனறுவை, சிறிபுரவில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த பேருந்துடன் சீமெந்து ஏற்றிக் கொண்டு கொழும்பு நோக்கி பயணித்த லொறியின் பின் பக்கத்தில் மோதியதினால இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. லொறியில விளக்கு இல்லாமையாலே மோதுண்டதாக பேருந்து சாரதி தெரிவித்தார்.

தான் லொறியின் சக்கரங்களை சரி பார்ப்பதற்காக பிரதான வீதிக்கு பயணித்து கொண்டிருக்கும் போதே குறித்த பேருந்து மோதியதாக சாரதி தெரிவித்தார். சிகிரியா பொலிஸார் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## வாரம் ஒரு தகவல்

### வாழ்க்கை

வாழ்தல் வேறு பிழைப்பு வேறு வாய்க்கும் வயிற்றுக்குமே போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் பிழைப்பு நிலையில் இருப்பவர்களிடம் பெரிய பெரிய தத்துவங்களைப் பற்றியோ பிரபஞ்ச ரகசியங்களைப் பற்றியோ பேசி விட முடியாது. பேசவும் கூடாது. அவர்களுக்கு அரை வயிற்றுக் கஞ்சிக்காவது வழி வகுப்பதுதான் முதல் கடமை. அவர்களைப் பிழைப்பு நிலையிலிருந்து மேல் நிலைக்குக் கொண்டு வந்த பிறகு வேண்டுமானால் வாழ்கையை முழுமையாக வாழுதல் என்பது பற்றிப் பேச முடியும்.

மனம் செம்மையுற்று ஆன்மீகப் படியில் மேலேற வேண்டுமென்றால் மனிதன் முதலில் வாழும் கலையைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

ஆம் வாழும் கலையைக் கற்றுத் தான் ஆக வேண்டும்.

பிறந்தவன் வாழ்ந்துதானே ஆக வேண்டும்? இதில் கற்றுக் கொள்வதற்கு என்ன இருக்கிறது? என்று கிண்டலாகச் சிலர் கேள்வி எழுப்பலாம்.

நான் முன்பே கூறிய படி பிறந்தவர்கள் எல்லாம் வாழ்பவர்கள் அல்லர். அவர்கள் பிழைப்பு நிலையிலோ இருத்தல் நிலையிலோ தான் பெரும்பாலும் இருக்கிறார்கள். அவர்கள் வாழ்தல் நோக்கி நகருவார்கள்.

அவர்கள் அந்நிலைகளிலிருந்து மீள வேண்டுமானால் மீண்டு மேம்பட வேண்டுமானால் வாழும் கலையைக் கற்றுத்தான் ஆக வேண்டும்.

சில சமயம் சிறையில் இருப்பவர்கள் கூட சந்தோஷ மாக வாழலாம். ஆனால் வாழ்வையே சிறையாக மாற்றிக் கொண்டவர்களால் ஒரு கணப் போதும் மகிழ்ச்சியடைய முடியாது.

## திக்வெல கடலில் மூழ்கி வெளிநாட்டு பெண் பலி

வெளிநாட்டு பெண் ஒருவர் திக்வெல கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார். குறித்த பெண் மேலும் சில வெளிநாட்டவர்களுடன் திக்வெல கடல் பகுதிக்கு சென்றுள்ளார்.

அதன் பின்னர் திடீரென கடலில் மூழ்கிய அவரை திக்வெல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த பெண் 60 வயதுடைய ஸ்லோவேனியா நாட்டை சேர்ந்தவர் என தெரியவந்துள்ளது.

உயிரிழந்த பெண்ணின் பிரேத பரிசோதனை நேற்று இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-7)

## சமூகசேவகி வேசம் போட்ட வெலே சுதாவின் சகோதரி

### போதைப்பொருள் வர்த்தகர்கள் பலருடன் தொடர்பு

போதைப்பொருள் வர்த்தகம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள வெலே சுதாவின் தங்கை நில்மினிக்கு போதைப் பொருள் வர்த்தகர்கள் பலருடன் தொடர்பு இருப்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அவரது மொபைல் போனில் ஏராளமான போதைப் பொருள் வர்த்தகர்களின் தொடர்பு இலக்கங்கள் இருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெலேசுதா விளக்கமறியலுக்கு அனுப்பப்பட்டதன் பின்னர் கடந்த மூன்று மாத காலமாக அவரது வர்த்தகத்தை நில்மினி நடத்தி வந்துள்ளார். இதற்காக பல்வேறு நபர்களுடன் அடிக்கடி தொடர்பில் இருந்துள்ளார். அவர்களில் சிலர் வெளிநாட்டவர் என்பதும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதற்கிடையே அண்மையில் தனது வசிப்பிடத்தை மினுவாங்கொடைக்கு மாற்றியிருந்த நில்மினி, அப்பகுதியில் சமூக சேவகியாக தன்னை இனம் காட்டிக் கொண்டிருந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

## ஜனவரி 8 சூழ்ச்சித்திட்டம் குறித்து பல தகவல்கள் வெளியாகியுள்ளன

ஜனவரி 8 சூழ்ச்சித் திட்டம் தொடர்பில் பல தகவல்கள் வெளியாகியுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது கடந்த அரசாங்கம் சூழ்ச்சித் திட்டமொன்றின் மூலம் ஆட்சியை தொடர முயற்சித்தது என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஜனவரி 8 ஆம் திகதி அலரி மாளிகையில் இடம்பெற்ற சூழ்ச்சித் திட்டத்தின் முக்கிய தகவல்கள் பல கிடைத்துள்ளன.

விசாரணைகளை முன்னெடுப்பது தொடர்பில் புலனாய்வுப் பிரிவிற்கு, சட்டமா அதிபர் திணைக்களம் ஆலோசனை வழங்கியுள்ளது.

சீ.சீ.ரீ.வி. கமராவின் காட்சிகள் அழிக்கப்பட்டிருந்தாலும் அவற்றை மீளப் பெற்றுக் கொள்ளும் தொழில்நுட்பம் இலங்கையில் காணப்படுகின்றது.


தானாகவே அழிந்ததா அல்லது அழிக்கப்பட்டதா என்பதனையும் விசாரணை செய்யக்கூடிய ஆற்றல் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனவரி 8 சூழ்ச்சித் திட்டம் தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு செய்திருந்தார். (இ-7)

# ஐப்பசி மாத ராசி பலன்கள்

## 18.10.2015-16.11.2015 வரை

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



**மயக்கும் பேச்சால் மனதில் இடம் பிடிக்கும் தனுசு ராசி நேயர்களே!**

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, இம்மாதம் மூன்று கிரகங்கள் பெயர்ச்சியாகின்றன. மேலும் புதனும் சனியும் வலிமை இழந்து சஞ்சரிக்கின்றன. உங்கள் ராசியைப் பொறுத்தவரை ஏழரைச்சனியின் ஆதிக்கம் நடைபெறுவதால், இது போன்ற காலங்களில்சனி வலிமை இழந்து சஞ்சரிப்பது நன்மை தான். கெடு பலன்கள் குறையும். நற்பலன்கள் கூடுதலாகக் கிடைக்கும்.

ஏழரைச்சனியில் இரண்டாவது சுற்று நடப்பவர்கள் ஓரளவு வருமானப் பெருக்கத்தோடு வாழ்க்கை நடத்துவர். முதல் சுற்றோ, மூன்றாவது சுற்றோ நடப்பவர்கள் எதையும் யோசித்துச் செய்வது நல்லது.

மாதத் தொட க்கத்தில் புதன் தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். எனவே தொழில் வளம் சிறப்பாக இருக்கும்.

அதே நேரத்தில் குருவின் பரிபூரண பார்வையும் உங்கள் ராசியல் பதிகிறது. "குரு பார்க்கக் கோடி நன்மை" என்பதால் கொடுக்கல்-வாங்கல்கள் சிறப்பாக இருக்கும. தொழிலில் கூடுதல் லாபம் கிடைக்கும். அடுக்கடுக்காக நல்ல பலன்கள் நடப்பது கண்டு ஆச்சரியப்படுவீர்கள். விடுமுறை நாட்களிலும் உழைத்து பொருளாதாரத்தை உயர்த்திக் கொள்ள முன் வருவீர்கள்.

ஒக்டோபர் 26 ஆம் திகதிக்கு மேல் அதிர்ஷ்ட தேவதை உங்கள் இல்லத்தில் அடியெடுத்து வைக்கப் போகிறார். காரணம் தொழில் ஸ்தானாதிபதியான புதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போவது தான். தொழில் வெற்றி நடைபோடும் பொழுது எதற்கும் கவலைப்படத் தேவையில்லை அல்லவா! மாதத்தின் மையப்பகுதியில் மகிழ்ச்சி அதிகரிக்கும் சம்பவங்கள் நிறைய நடைபெறும். சேமிப்பு உயரும். சிறுதொழில் புரிவோர் உங்களின்உதவிபெற்று தொழிலை விரிவு செய்ய முன்வருவர்.

அருளாளர்களின் சந்திப்பால் அப்போதைக்கப்போது ஆலோசனைகளைக் கேட்டு நடந்து, ஆனந்தமயமான வாழ்க்கையை அமைத்துக் கொள்வீர்கள். திருமணத் தடை அகலும். திடீர் திருப்பங்கள் உருவாகும். ஏழரைச் சனிக்குப் பரிகாரமாக சனிக்கிழமை தோறும சனி பகவான் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. எள் தீபம் ஏற்றி வழிபட்டால் நல்லது நடக்கும்.

**புதிய திருப்பம் தரும் புதனின் பெயர்ச்சி!**

ஒக்டோபர் 26 ஆம் திகதி லாப ஸ்தானத்திற்கு புதன் வருகிறார். நவம்பர் 12 ஆம் திகதி விருச்சிக ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இந்த இரண்டு பெயர்ச்சி காலமுமே உங்களுக்கு யோகம் தரும் காலம தான். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் புதன். 4, 7 இற்கு அதிபதியான புதன் ஒக்டோபர் 27ஆம் திகதி வலிமை இழந்து சஞ்சரிப்பதால எதிர்பார்ப்புகள் எளிதில் நிறைவேறும. இல்லத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகும். மாமன் வழியில்

## ஒக்டோபர் 26 இற்கு மேல் அதிர்ஷ்டம்

ஏற்பட்ட மனக் கசப்புகள் மாறும். பூமிப் பிரச்சினை அகலும். பொன், பொருள் மற்றும் ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும்.

**நீச்ச சுக்ரனின் சஞ்சாரம்!**

சுக்ரன் கன்னி ராசியில் நவம்பர் 2 ஆம் திகதி நீச்சம் பெறுகிறார். உங்கள் ராசிநாதன் குருவிற்கு பகை கிரகம் சுக்ரன். அவர் நீச்சம் பெறுவது யோகம் தான். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும்.

மேலதிகாரிகளின் அன்பிற்கு பாத்திரமாவர். பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும்.




**செவ்வாய் பெயர்ச்சிக் காலம்!**

நவம்பர் 5 ஆம் திகதி கன்னி ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். விரயாதிபதி தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது தொழிலில் எதிர்பாராத விரயங்கள் ஏற்படலாம்.

புத்தி ஸ்தானாதிபதியாகவும் செவ்வாய் விளங்குவதால் பிள்ளைகளாலும் விரயங்கள் ஏற்படலாம்.

குடியிருக்கும் வீட்டை விலைக்கு வாங்கும் முயற்சியில் ஒரு சிலர் ஆர்வம் காட்டுவர். இம்மாதம் குருவை வழிபட்டு குதூகலம் காணுங்கள். அன்னை பராசக்தியை வழிபட்டால் எண்ணிய காரியம் எளிதில் நிறைவேறும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் கல்யாணக் கனவுகள் நனவாகும். பார்க்கும் குருவால் பணத்தேவைகள் பூர்த்தியாகும். பக்கத்து வீட்டாரின் பகை மாறும். மக்கள் செல்வங்களால் மேன்மை கிட்டும். குழந்தைகள் வெளிநாடு செல்லும் முயற்சிக்கு வித்திடுவீர்கள். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். புத்திர விருத்திக்கான அறிகுறி தென்படும்.

விரயச் சனியின் ஆதிக்கத்தால் ஆரோக்கியத் தொல்லை ஏற்படலாம். மாற்று மருத்துவத்தை மேற்கொள்வதோடு சனி பகவானையும் வழிபடுவது நல்லது. உத்தியோகத்தில்உள்ளவர்களுக்குநினைத்தபடியே இலாகா மாற்றம் கிடைக்கும். அரசுவழிச் சலுகைபெற்றுமகிழ்ச்சியடைவீர்கள்.



**எதிலும் முன்யோசனையுடன் செயற்பட்டால் முன்னேற்றம் கிடைக்கும் என்று சொல்லும் மகர ராசி நேயர்களே!**

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கிற பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் சனி விருச்சிகத்தில் சஞ்சரித்தபடி உங்கள் ராசியையே பார்க்கிறார். என்ன தான் ராசிநாதனாக இருந்தாலும் பார்க்கும் சனியால் சில பாதிப்புகள் உருவாகும். எனவே துன்பங்களிலிருந்து விடுபடத் துணையாக இருப்பது இறைவழிபாடு ஒன்றுதான். அந்த வழிபாட்டை அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் செவ்வாய் மீதும், அதே இடத்தில் சஞ்சரிக்கும் குருவின் மீதும், உங்களை ராசியைப் பார்க்கும் சனியின் மீதும் வைப்பது நல்லது.

அஷ்டமத்துச் செவ்வாய் மூலம் ஏற்படும் அவதிகள் குறைய செவ்வாய்க்கிழமைதோறும் முருகப்பெருமான் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. ஆரோக்கியத் தொல்லை நீங்கும். எலும்பு நரம்பு சம்பந்தப்பட்ட வகையில் ஏதேனும் இடர்பாடுகள் இருந்தாலும் அவை எளிதில் குணமாக வழி பிறக்கும். அஷ்டமத்து குருவால் அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்கவில்லையே என்று சொல்லாமல் இருக்க, வியாழன் தோறும் குரு வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

பார்க்கும் சனியால் பல புதிய வாய்ப்புகள் கைநழுவிப் போகலாம். அதுமட்டுமல்லாமல் நட்புகளை பகையாக்கிவிடலாம். அவற்றிலிருந்து விடுபட அனுமனையும், சனி பகவானையும் சனிக்கிழமை தோறும் வழிபாடு செய்ய வேண்டும். என்ன இருந்தாலும் பொறுமையை அதிகம் கடைப்பிடிக்க வேண்டிய மாதமாகவே ஐப்பசி மாதம் அமைகின்றது. அஷ்டம ஸ்தானத்தில் மூன்று கிரகங்கள் சேர்க்கை ஏற்படுகின்றது. இருந்தாலும் அஷ்டமாதிபதி சூரியன் நீச்சம் பெற்று விட்டதால் பெரியளவில் பாதிப்புகள் ஏற்படாது.

மலைபோல் வந்த துயர் பனி போல் விலகும். வழிபாட்டின் மூலம் வளர்ச்சியைக் கூட்டிக் கொள்ள இயலும். திசாபுத்தி பலம் பெற்றவர்கள் சிரமத்திற்கு ஆளாக மாட்டார்கள்.

சுய ஜாதகத்தில் தெசாபுத்தி பலமறிந்து புது முயற்சிகளில் ஈடுபடுவது நல்லது. புதன் துலாத்தில் பெயர்ச்சியான பிறகு, ஒரு சில நல்ல மாற்றங்கள் உங்களுக்கு வந்து சேரும். குறிப்பாக 9 இற்கு அதிபதி 10 இல் சஞ்சரிக்கும் பொழுது பொன், பொருள் சேர்க்கை, ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். தீபாவளிப் பண்டிகையை சிறப்பாகக் கொண்டாடி மகிழ்வீர்கள்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

உங்கள் ராசிக்கு 6, 9 இற்கு அதிபதியானவர் புதன். அவர் மாதத் தொடக்கத்தில் உச்சம் பெற்றிருக்கிறார். பிறகு 10 இல் சஞ்சரித்து பலவித நன்மைகளை உங்களுக்கு வழங்கப் போகிறார். குறிப்பாக எதிரிகளின் தொல்லை அகலும். இடம்,

## குடும்பச் சுமை கூடுதலாக இருக்கும் நேரம்

பூமி வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள். கடன் சுமை பாதிக்கு மேல் குறைய நண்பர்கள் கைகொடுத்து உதவுவர். புதிய ஒப்பந்தங்கள் வந்து பொருளாதாரத்தை விருத்தி செய்து கொடுக்கும். நவம்பர் 12 ஆம் திகதிக்கு மேல் விருச்சிகத்தில் புதன் சஞ்சரிக்கப் போவதால் வெளிநாட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வீடு மாற்றங்களாலும் ஒரு சிலர் அனுகூலம் காண்பர்.

**சுக்ரப் பெயர்ச்சிக் காலம்!**

நவம்பர் 2 ஆம் திகதி கன்னி ராசியில் சுக்ரன் நீச்சம் பெறப்போகிறார். இது அவ்வளவு நல்லதல்ல. பிள்ளைகளால் பிரச்சினைகள் ஏற்படலாம். பூர்வீக சொத்துக்களைப் பிரித்துக் கொள்வதில் சிலரின் குறுக்கீடுகள் வந்து சேரும. பாகப்பிரிவினை சுமுகமாக முடியவில்லையே என்று கவலைப்படுவீர்கள். பெண் குழந்தைகளின் திருமணப் பேச்சுக்களை தீவிரமாகப் பேசி முடிப்பது நல்லது.




**செவ்வாய் பெயர்ச்சிக் காலம்!**

நவம்பர் 5 ஆம் திகதி கன்னி ராசியில். செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். அஷ்டமத்துச் செவ்வாய் மாறுவதால் இனி உங்களுக்கு யோககாலம் தான். ஆரோககியத் தொல்லை அகலும். அடுக் கடுக்காக வந்த தொல்லை விலகும். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். பத்திரப்பதிவில் இருந்த தடை அகலும். இம்மாதம் சிம்ம வாகினியை வழிபட்டு செயல்பாடுகளில் வெற்றி காணுங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய மாதமாகும். கொடுக்கல், வாங்கல்களில் பிரச்சினை, கூட இருப்பவர்களால் பிரச்சினை ஏற்படலாம். அடிக்கடி ஆரோக்கியத் தொல்லை ஏற்படாதிருக்க ஆரம்பத்திலேயே மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது.

ஒக்டோபர் 26 ஆம் திகதிக்கு மேல் உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். இல்லத்தில் உள்ளவர்கள் உங்கள் சொல்கேட்டு நடப்பர். கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. குடும்ப விவகாரங்களை மூன்றாம் நபரிடம் சொல்ல வேண்டாம்.

சனிக்கிழமை தோறும் ஆதியந்தப் பிரபுவை வழிபட்டு வருவதன் மூலம் ஆனந்தத்தை வரவழைத்துக் கொள்ளலாம்.

(தொடரும்)

# நாற்றுமேடை அமைத்தல் தொழில்நுட்ப களப்பயிற்சிகள்



கோட்டைகட்டிய குளம் கிராமத்தில் ஐயங்கன் குளம் விவசாயப் போதனாசிரியர் அ. அஜந்தன் தலைமையில் நாற்று நடுகை இயந்திரம் மூலமான நாற்றுமேடையமைத்தல் தொழில்நுட்பம் தொடர்பாக நேற்று முன்தினம் களப்பயிற்சிகள் பிரதேச விவசாயிகளுக்கு வழங்கப்பட்டதாக முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பொ. அற்புதச்சந்திரன் அறிவித்துள்ளார். இக் களப்பயிற்சியானது மாவட்ட நெல் மற்றும் பண்ணை இயந்திரங்களுக்குப் பொறுப்பான பாடவிதான உத்தியோகத்தர் அ. கபிலன் நடத்தியிருந்தார். இப் பயிற்சியில் பிரதேச விவசாயப் போதனாசிரியர்கள், விவசாயிகள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர். இவ்வாறான பயிற்சி கடந்த 16ஆம் திகதி உடையார்கட்டு விவசாயப் போதனாசிரியர் பிரிவில் உடையார்கட்டு தெற்கு கிராமத்திலும் நடத்தப்பட்டதாக அவர் தெரிவித்தார். (2)

# பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகனங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட வேண்டும்

## பெற்றோர் கோரிக்கை

மன்னாரில் பாடசாலை சேவையில் ஈடுபட்டு வரும் வாகனங்கள் தொடர்பில் வீதிப் போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் அதிக கவனம் செலுத்த வேண்டும் என பெற்றோர் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

மன்னார் நகரிலுள்ள பாடசாலைகளுக்கு மாதாந்த தவணைக்கட்டண அடிப்படையில் மாணவர் களை ஏற்றி இறக்கும் சேவையில் முச்சக்கரவண்டி மற்றும் ஹயஸ் வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

எனினும் சில முச்சக்கரவண்டி சாரதிகள் தமது முச்சக்கரவண்டியில் அளவுக்கு அதிகமாக மாணவர்களை ஏற்றி சேவையில் ஈடுபடுவதாகவும் அதிவேகத்தில் பயணிப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் முச்சக்கரவண்டி 4 முதல் 6 வரையான சிறுவர்கள் ஏற்றிச் செல்லப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

எனவே சிறுவர்களையும் மாணவர்களையும் ஆபத்துக்களிலிருந்து பாதுகாக்கும் வகையில் பொலிஸார் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் குறிப்பாக பாடசாலை சேவையில் ஈடுபட்டு வரும் முச்சக்கரவண்டி மற்றும் ஹயஸ் வாகன உரிமையாளர்களுக்கு இச் சேவை தொடர்பில் விழிப்புணர்வு ஏற்படுத்த மன்னார் வீதி போக்குவரத்துப்பிரிவு பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென பெற்றோர் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2)

# 'உற்பத்தித் திறனுக்கு ஆரோக்கியமான உணவுகள்'


## போசாக்கு கண்காட்சி மன்னாரில்

(மன்னார்)

**அதிக பலம், ஆற்றல் மற்றும் உற்பத்தித் திறனுக்கு ஆரோக்கியமான உணவுகள்** எனும் தொனிப்பொருளில், மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணியகமும் மன்னார் வேள்ட் விஷன் நிறுவனமும் இணைந்து, மன்னார் நகராட்சி மன்ற மண்டபத்தில் போசாக்கு கண்காட்சியொன்றை நேற்று முன்தினம் நடத்தின.

இந்நிகழ்வின் போது, மன்னார் நகர பிரதேசத்தில் சுத்தமான உணவுகளை மக்கள் பெற்றுக் கொள்வதற்கும் உணவு விற்பனையாளர்களது விழிப்புணர்வுக்கும் ஒரு பெயர்ப்பலகை திறந்து வைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மன்னார் நகராட்சி மன்ற மண்டபத்தில் கண்காட்சி விழா ஆரம்பித்து வைகக்கப்பட்டது.



இக்கண்காட்சியில் மன்னார், நானாட்டான், மடு, மாந்தை, முசலி ஆகிய பிரதேச வைத்திய அதிகாரிகள் காரியாலயத்தின் மூலமாகவும் பிராந்திய சுகாதார சேவைகள் பணியகத்தின் பற்சுகாதார மது போதைப் பாவனை ஒழிப்பு, பாலியல் தொற்று நோய்த்தடுப்பு, தாய் சேய் நலப்பிரிவு மற்றும் தொற்றா நோய்த்தடுப்பு பிரிவுகளிலிருந்தும் படைப்புக்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. (2)

# திருக்குறள் மாநாட்டையொட்டி நடைபெற்ற போட்டிகளின் முடிபுகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் இவ்வாண்டு நடைபெறவுள்ள திருக்குறள் மாநாட்டையொட்டி பாடசாலை மாணவர்களுக்கிடையில் மாவட்ட மட்டத்தில் நாவன்மைப் போட்டி, கலைத்திறன் (ஆடல், பாடல்) போட்டிகள் அண்மையில் நடத்தப்பட்டன.

இப்போட்டிகளில் வெற்றியீட்டி முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத் தலைவரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய முடிவுகள் வருமாறு,

**நாவன்மைப் போட்டி**

**பிரிவு -அ-தரம் 10, 11**

யி.லயிக்கா, வ.அபிஸ்ா, ஜெயதுசா (கிளி/பளை மத்திய கல்லூரி)

**ஊக்கப் பரிசு பெறுவோர்**

சி.குகனியா (கிளி/முருகானந்தா கல்லூரி)

**பிரிவு-இ- தரம் 8, 9**

ஒளிசுயேம்சு (கிளி/மத்திய உ.நி.ப), (இருவர் இரண்டாமிடம்) க.லம்போதரன் (கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி), தி.லெனுசனா (கிளி/முருகானந்தா கல்லூரி), செ.டிலக்சா (கிளி/தருமபுரம் மத்திய கல்லூரி)

**ஊக்கப்பரிசு பெறுவோர்**

இ.சானுயா (கிளி/முருகானந்தா கல்லூரி), செ.பகலரசி (கிளி/பிரமந்தன் ஆறு உ.நி.ப), பா.நிருசணா (கிளி/பளை மத்திய கல்லூரி)

**பிரிவு- ஈ- தரம்-6, 7**

ச.யெயகிருச்னா (கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி), (இருவர் இரண்டாமிடம்) க.அபிநயன் (கிளி/மத்திய உ.நி.ப), யோ.மதுலயா (கிளி/முருகானந்தா கல்லூரி), இ.மயூரன் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.ப.)

**ஊக்கப் பரிசு பெறுவோர்**

சி.நிலக்கிளி (கிளி/கல்லாறு தமிழ்ப் பள்ளி), வி.ஆரணி (கிளி/தருமபுரம் மத்திய கல்லூரி)

**பிரிவு -ஊ-தரம்-4, 5**

(முதலாமிடம் இருவர்) சி.விதுர்சி (கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி), ச.பாமகள் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.ப.), அ.புவிசாந் (கிளி/இயக்கச்சி அ.த.க.ப.), செ.தீபாயினி (கிளி/கந்தபுரம் எண் 01 அ.த.க.ப.)

**ஊக்கப்பரிசு பெறுவோர்**

ச.தனுசியா-கிளி/பிரமந்தன் ஆறு உ.நி.ப.), ச.கவியழகி (கிளி/தருமபுரம் எண் 01 அ.த.க.பள்ளி), யெ.அனுசன் (கிளி/பிரமந்தன் ஆறு உ.நி.ப.)

**பிரிவு-ஊ-தரம் 2, 3**

சி.கரிச்சனா (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.ப.), இரண்டாமிடம் இருவர்) சி.மயூரிகா (கிளி/ இராமநாதபுரம் மேற்கு அ.த.க.ப.), க.நேத்திரா (கிளி/முருகானந்தா தொடக்கப் பள்ளி), (மூன்றாமிடம் மூவர்) சுஜானியா (கிளி/திருவையாறு உ.நி.ப), தி.புகழரசி (கிளி/தருமபுரம் எண் 01அ.த.க. பள்ளி), கு.அதீதனா (கிளி/பளை இந்து தொடக்கப்பள்ளி)

**கலைத்திறன் போட்டி**

**தமிழ்த்தாய் வணக்கப் பாடல்**

(முதலாமிடம் இரு பாடசாலைகளுக்கு) கிளி/பளை மத்திய கல்லூரி, கிளி/மத்திய உ.நி.ப.), கிளி/முருகானந்தா கல்லூரி), கிளி/உருத்திரபுரம் உ.நி.ப.

**தமிழ் இசைப் பாடல்கள்**

கிளி/பளை மத்திய கல்லூரி, கிளி/மத்தியகல்லூரி, கிளி/கனகபுரம் உ.நி.ப

**குறள் இசை**

கிளி/முருகானந்தா கல்லூரி, கிளி/உருத்திரபுரம் உ.நி.ப.

**நாட்டார் பாடல்**

கிளி/பளை மத்திய கல்லூரி, கிளி/ மத்திய கல்லூரி, கிளி/முருகானந்தா கல்லூரி

**வரவேற்பு ஆடல் (ஊரக ஆடல்)**

வரவேற்பு ஆடலுக்கும் ஊரக (கிராமிய) ஆடலுக்கும் போட்டியின்றி முதலாம் இடத்திற்கு முறையே கிளிநொச்சி மத்திய உ.நி.பள்ளியும் கனகாம்பிகைக்குளம் அ.த.க.பள்ளியும் தெரிவு செய்யப்பட்டன.

இவர்களுக்கான பரிசில்களும் இந்த ஆண்டு நடைபெறும் திருக்குறள் மாநாட்டில் வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# நாளைய சமுதாயம் பிள்ளைகளின் கல்வியில் தான் தங்கியிருக்கின்றது

## சாள்ஸ் எம்.பி.தெரிவிப்பு

எமது போராட்டத்திற்காக உங்களது உறுப்புகளை இழந்து தியாகங்களை செய்து மாற்றுத்திறனாளிகளாக இருக்கும் உங்களை நினைத்து நான் தலை வணங்குகின்றேன் என வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து வரும் மாற்றுத் திறனாளிகளின் பிள்ளைகளுக்கு பாடசாலைபை மற்றும் பயிற்சி புத்தகங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு அண்மையில் முல்லைத்தீவு திருக்குடும்ப கன்னியர்மடத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் தலைமையில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனதுரையில் தெரிவிக்கையில்,




எமது நாளைய சமுதாயம் எமது பிள்ளைகளின் கல்வியில் தான் தங்கியிருக்கிறது.உங்களது குடும்பத்தில் பல தேவைகள் இருக்கின்றன. ஆனால் எமது பிள்ளைகள் கல்வியில் உயர் நிலைக்கு வரமென்மேலும் ஊக்கப்படுத்தி அவர்களை நாளைய சமுதாயத்தில் மதிக்கத்தக்க உயர் பண்புகள் உள்ள மனிதர்களாக நீங்கள் மாற்ற வேண்டும்.

அப்போது உங்கள் பிள்ளைகள் எங்கள் அப்பா மண்ணுக்காக போராடியவர்கள் என்று உறுதியாக பெருமையாக சொல்கின்ற காலம் ஒன்று வரும் அதற்காக தொடர்ந்து காத்திருப்போம் என தெரிவித்தார்.

புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும், ஒவ்வொரு புலம்பெயர் உறவுகளும் எமது நினைவுகளுடன் வாழ்கின்றமையை நான் சென்ற போது உணரமுடிந்தது.

எமது தாய்நிலம் அபிவிருத்தி அடைய வேண்டும் என்றால் இதில் புலம்பெயர் மக்களின் தியாகம் பிரதானமானதாகும்.

இதில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாத்தளன், முள்ளியவளை, வட்டுவாகல், செல்வபுரம், சிலாவத்தை, அளம்பில், செம்மலை ஆகிய கிராமங்களை சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 120 மாணவ, மாணவிகளுக்கு பாடசாலைபை மற்றும் பயிற்சிப் புத்தகங்கள் என்பன நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் விருந்தினர்கள் ஆகியோர் வழங்கி வைத்தனர்.

குறித்த உதவித்திட்டமானது முதறகட்டமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாற்றுத்திறனாளிகளின் குடும்பங்களை சேர்ந்த பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்தும் முகமாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஏனைய மாவட்டங்களிலும் மாற்றுத்திறனாளிகளின் குடும்பங்களை சேர்ந்த பாடசாலை மாணவ, மாணவிகளின் கல்வியை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.(2-281)




வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண இலக்கிய பெருவிழா -2015 நேற்று முன்தினமும் நேற்றும் கிளிநொச்சியில் நடைபெற்றது. இதில் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்திலுள்ள கலைஞர் சூசை சந்தியா அரங்கில் நடைபெற்ற நிகழ்வுகளின் பதிவுகள்... (படங்கள்:-மல்லாவி செய்தியாளர்)

# சிரியாவில் ரஷ்ய போர் விமானங்களின் தாக்குதலில் 450பேர் பலி



**உள்நாட்டுப் போர் தீவிரமடைந்துவரும் சிரியாவில் ரஷ்ய விமானங்கள் மேற்கொண்டு வரும் தாக்குதலில் இதுவரை 450 பேர் பலியாகியுள்ளதாகவும் 35 பெண்கள், 38 குழந்தைகள் உள்ளிட்ட 151 பொதுமக்கள் இதில் உள்ளடங்குவதாகவும் சிரிய மனித உரிமைகள் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.**

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத் தலைமையிலான அரசை பதவியில் இருந்து இறக்கும் நோக்கத்தில் அவரது அதிருப்தியாளர்கள் தொடங்கிய போராட்டம், உள்நாட்டுப் போராக உருவெடுத்தது. 4 ஆண்டுகளாக இந்த போராட்டம் நடைபெற்று வரும் நிலையில் ஐ.எஸ். தீவிரவாதிகளை ஒழித்துக்கட்டும் நோக்கத்தில் அமெரிக்க கூட்டுப் படைகள் சிரியாவில் விமானப்படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றன. சிரிய ஜனாதிபதி ஆசாத்தின் படைகளுக்கு ஆதரவாக ரஷ்யா களத்தில் இறங்கி கடும் வான்வழி தாக்குதலை நடத்தி வருகிறது.

இந்நிலையில் சிரியாவில் ரஷ்யா மேற்கொண்டுவரும் வான்வழி தாக்குதலில் இதுவரை சுமார் 450 பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும், இதில் மூன்றில் ஒருவர் பொதுமக்கள் என்று சிரிய மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

மேலும் சுமார 151 பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும், இதில் 35 பெண்களும் 38 குழந்தைகளும் அடங்குவர்கள் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ-7)

# நைஜீரியாவில் இரு மசூதிகள் மீது வெடிகுண்டுகளை வீசித் தாக்குதல்

## 55 பேர் உடல் சிதறிப் பலி



நைஜீரியாவின் வடகிழக்கு பகுதியில் உள்ள முக்கிய நகரமான மைடுகுரி அருகே அடுத்தடுத்து மசூதிகள் மீது வெடிகுண்டுகளை வீசி நடத்தப்பட்ட தாக்குதலில் 55 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர்.

கிறிஸ்தவர்களும், முஸ்லிம்களும் சம விகிதத்தில் வாழ்ந்து வரும் நைஜீரியாவில் கடுமையான இஸ்லாமிய சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட ஆட்சியை நிறுவ வேண்டும் என்ற எண்ணத்தில் போகோஹறாம் என்ற தீவிரவாத இயக்கத்தினர் தேவாலயங்கள் மீதும், மசூதி கள் மீதும், மக்கள் அதிகமாக வாழும் குடியிருப்புப் பகுதிகள், பெருமளவில் மக்கள் நடமாடும் சந்தைப்பகுதிகள் போன்ற இடங்களிலும் தீவிரவாத தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், மைடுகுரியில் உள்ள யோலா மற்றும் கெரோவா பகுதயில் உள்ள மசூதிகள் மீது நேற்று முன் தினம் போகோஹராம் தீவிரவாதிகள் வெடிகுண்டுகளை வீசி நடத்திய இரண்டு தாக்குதல்களில் குறைந்தபட்சம் 55 பேர் பலியானதாகவும், நூற்றுக்கணக்கானோர் படுகாயம் அடைந்ததாகவும் உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த தாக்குதலை அடுத்து கேமரூன அருகேயுள்ள ஒரு சிறிய நகரையும் தீவிரவாதிகள் கைப்பற்றியுள்ளதாக கூறப்படுகிறது. (இ-7)

# பங்களாதேஷ் ஷியா முஸ்லிம்களை குறிவைத்து வெடிகுண்டு தாக்குதல்

## 90 பேர் படுகாயம்



அசுரா புனித தினமான நேற்று பங்காளதேசத்தில் ஷியா பிரிவினரை குறிவைத்து வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில், ஒருவர் உயிரிழந்தார். 90-க்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்தனர். நேற்று அதிகாலை 1.30 மணியளவில் அங்குள்ள ஷியா பிரிவினரின் முக்கிய பிரார்த்தனை மையமான 17-ம் நூற்றாண்டை சேர்ந்த கட்டடம் ஒன்றில் வெடிகுண்டு வெடித்தது. இந்த தாக்குதலுக்கு எந்த தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. இஸலாமிய பயங்கரவாதிகளால் அங்கு அவ்வப்போது தாக்குதல் நடத்தப்பட்டு வருவது மக்களின- பாதுகாப்பை கேள்விக்குறியாக்கியுள்ளது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 100 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 120 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 280 | 250 | 500 | 400 | 400 |
| தக்காளி | 100 | 120 | 120 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 40 | 50 | 50 |
| கோவா | 60 | .60 | 80 | 80-120 | 80 |
| கரட் | 80 | 60 | 120 | 60-180 | 70 |
| பூசணி | 40 | 40 | 60 | 50 | 40 |
| புடோல் | 100 | 40 | 80 | 60 | 50 |
| வாழைக்காய் | 80 | 40 | 60 | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 100 | 140 | 140 | 120 | 100 |
| பெரிய வெங்காயம் | 120 | 140 | 120 | 110 | 120 |
| பாகற்காய் | 200 | 250 | 160 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 120 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 100 | 80 | 70 |
| பயற்றங்காய் | 100 | 100 | 140 | 120 | 180 |
| லீக்ஸ் | 80 | 60 | 80 | 100 | 90 |
| பீற்றூட் | 50 | 30 | 50 | 40 | 50 |
| கறிமிளகாய் | 200 | 10 | 200 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 140 | 10 | 160 | 120 | 180 |
| போஞ்சி | 160 | 200 | 200 | 160 | 180 |
| கத்தரிதம்புள்ள | 60 | 50 | 80 | — | 100 |
| கீரை - 1 பிடி | 30 | 200 | 40 | 40 | 30 |
| தேசிக்காய் | 350 | 350 | 50 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 25-60 | 40-50 | 50 | 50 |
| இராசவள்ளி | 180 | 300 | — | — | — |
| வெங்காயப்பூ | 180 | — | — | 160 | 180 |
| முள்ளங்கி | 40 | — | 80 | 40 | 50 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 30 | 30 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 10 | 25 |

# சிறப்பிதழ் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

மகுடம் கலை இலக்கிய சமூக பண்பாட்டு காலாண்டிதழ் "பிரமிள் சிறப்பிதழ் அறிமுகமும் மகுடம் இதழ்கள் பற்றிய கருத்துப்பகிர்வும் நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்கு பருத்தித்துறை வி.எம். வீதியில் அமைந்துள்ள ஞானாலயத்தில் நடைபெறவுள்ளது.

குப்பிளான் ஐ.சண்முகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரமிள் சிறப்பிதழ் அறிமுகத்தை சு.குணேஸ்வரன் நிகழ்த்துவதுடன் இதழ் 1, 2, 3 களுக்கான அறிமுகத்தை ஐ.சண்முகனும், இதழ் 4,5,6 களின் அறிமுகத்தை த.அஜந்தகுமார் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். ஏற்புரையினை இத ழாசிரியர் மைக்கல் கொலின் நிகழ்த்தவுள்ளார். (இ-5)

# பாக். முஹர்ரம் ஊர்வலம் மீது தற்கொலைப்படைத் தாக்குதல்

## 22 பேர் துடிதுடித்து பலி

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் நடைபெற்ற முஹர்ரம் ஊர்வலத்தின் மீது தற்கொலைப்படை தீவிரவாதி நடத்திய மனித வெடிகுண்டு தாக்குதலில் 22 பேர் துடிதுடித்து பலியாகினர்.

ஷியா பிரிவு மக்கள் அதிகமாக வாழும் ஜக்கோபாபாத் பகுதியில் முஹர்ரம் பண்டிகையை முன்னிட்டு நேற்று முன்தினம் நூற்றுக்கணக்கானோர் ஊர்வலமாக சென்று கொண்டிருந்தனர். அப்போது கூட்டத்துக்குள் புகுந்த ஒரு வன் தனது உடலில் கட்டியிருந்த வெடி குண்டை வெடிக்கச்செய்ததில் 4 குழந்தைகள் உட்பட 22 பேர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறிப் பலியாகினர்.

காயமடைந்த சுமார் 40 பேர் ஜக்கோபாபாத் மாவட்ட அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

மனித வெடிகுண்டாக வந்தவனின் உடலின் கீழ்பகுதியை மட்டும் கைப்பற்றியுள்ள பொலிசார், அவன் எந்த இயக்கத்தைச் சேர்ந்தவன் என்பது தொடர்பாக விசாரித்து வருகின்றனர்.

பாகிஸ்தானில் சிறுபான்மை இனத்தவரான ஷியாக்கள் மீது பெரும்பான்மை இனத்தவர்களான சன்னி பிரிவினர் நடத்திவரும் தாக்குதல்களில் கடந்த ஆண்டுகளில் பல்லாயிரம் பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

வாக்குறுதி கொடுப்பவன் அதற்கு கடனாளி ஆகிறான்.

- தலாமூத்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# 2016ஆம் ஆண்டுக்குள் தீர்வு கிடைத்து விடுமா?

இனப்பிரச்சினைக்கான தீர்வு 2016ஆம் ஆண்டின் இறுதிக்குள் கிடைத்துவிடும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பொதுத் தேர்தல் காலத்தில் தெரிவித்திருந்தார்.

2016ஆம் ஆண்டின் இறுதிக்குள் தீர்வு கிடைத்துவிடும் என்று உறுதியாக சம்பந்தன் எவ்வாறு தெரிவித்தார் என்பதற்கு ஆதாரம் ஏதும் உண்டா? என்று கேட்டால், அந்த ஆதாரங்கள் இரா.சம்பந்தரிடமே இருக்க முடியும்.

அதேசமயம் பொதுத் தேர்தலில் வெல்வதற்காக சம்பந்தர் பொய்யான ஒரு பிரசாரத்தை செய்திருக்கமாட்டார் என்றே தமிழ் மக்கள் கருதுகின்றனர்.

2016ஆம் ஆண்டுக்குள் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்ற உத்தரவாதத்தினை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் வழங்கியிருந்தால் மட்டுமே சம்பந்தரால் உறுதிபடக் கூறியிருக்க முடியும்.

இருந்தும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தில் இருந்து நாட்டைக் காப்பாறிக் கொள்வதற்காக, சம்பந்தருக்கு அப்படி ஒரு உறுதிமொழி அரச தரப்பால் வழங்கப்பட்டிருக்கலாம்.

அதேநேரம் எதிர்க்கட்சித் தலைமைப் பதவியும் அதற்கான ஒரு சன்மானம் என்பதை அடியோடு நிராகரிக்க முடியாது. எதிர்க்கட்சி வரிசையில் இருக்கக்கூடிய 56 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டு குமார் வெல்கமவை எதிர்க்கட்சித் தலைவராக நியமியுங்கள் என்று சபாநாயகரிடம் மனுசமர்ப்பித்த போது எதிர்க்கட்சித் தலைமைப் பதவியை அவர்களுக்கு வழங்குவதே பொருத்துடையது.

ஆனால் அவ்வாறு வழங்காமல் இரா.சம்பந்தருக்கு எதிர்க்கட்சித் தலைமைப் பதவியை வழங்கியதற்குள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் உச்சமான இராஜதந்திரம் இருப்பதைக் கண்டறிய முடியும்.

தமிழர்களின் விடுதலைப் போராட்டம் எங்ஙனம் உடைக்கப்பட்டதோ அதுபோல தமிழ் அரசியல் தலைமைக்கு பதவியைக் காட்டி சர்வதேச விசாரணையில் இருந்து இலங்கை காப்பாற்றப்பட்டது.

இப்போது ஐ.நா தீர்மானம் தொடர்பில் பாராளுமன்றத்தில் பெரும் விவாதங்கள் நடக்கின்றன. கூடவே காணாமல் போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு சமர்ப்பித்த அறிக்கை பற்றிய விவாதங்களும் சூடுபறக்கத் தொடங்கி விட்டது.

ஒரு பாராளுமன்ற உறுப்பினர் செங்கோலைத் தூக்கிக் கொண்டோடியுள்ளார். செங்கோல் ஆட்சி இல்லாத இடத்தில் செங்கோல் எதற்கு என்ற நிலையிலும் அந்த உத்தமப் பெருமகன் செங்கோலைத் தூக்கிச் சென்றிருக்கலாம். இவை எல்லாம் பாராளுமன்றத்தில் நடத்தப்படுவது உலகத்திற்கு ஒரு நாடகம் காட்டுவதற்காகவே.

தமிழ் மக்களின் வாக்குகளால் பாராளுமன்ற உறுப்பினர் பதவியைப் பெற்ற பின்பு பதவிக்காக கொண்ட கொள்கைகளை விட்டுக் கொடுக்கின்ற தமிழ் அரசியல் தலைமையை எப்படியும் ஏமாற்றலாம். ஏமாற்றவேண்டும் என்ற அடிப்படையிலேயே அனைத்தும் நடந்து கொண்டிருக்கிறது.

அது மட்டுமல்ல தமிழினத்திற்கு எதிரான அனைத்து விடயங்களிலும் அனைத்து ஆட்சியாளர்களும் ஒன்றுபட்டு செயற்படுகின்றனர். வெளியில் மட்டும் எதிர்ப்புக் காட்டுவது போல பாசாங்கு செய்யப்படுகிறது.

எதுவாயினும் தமிழ் மக்களுக்கான தீர்வு என்பதை 2016இற்குள் அடையத் தவறினால், தமிழ் மக்களுக்கு எதுவுமே கிடையாது என்பது நிறுதிட்டமான உண்மை. ஆகையால் பதவிக்கும் பணத்திற்கும் விலை போகாமல் தமிழ் மக்களுக்கான தீர்வில் தமிழ் அரசியல் தலைமைகள் விடாப்பிடியாக நிற்க வேண்டும். இல்லையேல் அனைத்தும் அம்போதான்.

# மீனவர்கள் வேலைநிறுத்தம்

இலங்கை கடற்படையினரின் அத்துமீறலை தடுத்து நிறுத்தி மீனவர்களையும் படகுகளையும் விடுவிக்க வலியுறுத்தி தமிழக மீனவர்கள் வேலைநிறுத்தம் மற்றும் உண்ணாவிரத போராட்டத்தில் நேற்றையதினம் ஈடுபட்டனர்.

இலஙகை கடற்படையால் சிறை பிடிக்கப்பட்ட ராமேஸ்வரம் மீனவர்கள் படகுகளையும் மீனவர்களையும் உடனடியாக விடுவிக்க வேண்டும் அதேபோல் இலங்கை சிறைகளிலுள்ள புதுக்கோட்டை, தூத்துக்குடி, நாகை உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்களையும் படகுகளையும் உடனடியாக விடுவிக்க வலியுறுத்தியும் இலங்கை கடற்படையால் மூழ்கடிக்கப்பட்ட வில்வராஜின் குடும்பத்திற்கு அரசு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி நேற்று இராமேஸ்வரம் விசைப் படகு மீனவர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும் மத்திய, மாநில அரசுகள் உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி நேற்றையதினம் முற்பகல் 11 மணி முதல் தங்கச்சிமடத்தில் கொட்டும் மழையில் கைக்குழந்தைகளுடன் பாதிக்கப்பட்ட மீனவக் குடும்பங்களுடன் மீனவ அமைப்புகளும் மற்றும் மீனவ மகளிர் அமைப்புக்கள் சார்பில் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

உண்ணாவிரதப் போராட்டத்துக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் டி.ராஜா நேரில் சென்று ஆதரவு தெரிவித்தார். பின் அவர் செய்தியாளரகளிடம் கருத்து தெரிவிக்கும் போது, தமிழக மீனவர்களின் பிரச்சினையில் மத்திய அரசு மெத்தனப் போக்கை கடைபபிடிப்பதாக குற்றம் சுமத்தினார். மீனவர்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாண கச்சதீவு ஒப்பந்தத்தை மறுசீரமைப்பு செய்ய வேண்டும் இல்லையேல் கச்சதீவை திரும்ப பெறவேண்டும். தமிழக முதல்வர் கடிதம் எழுதினால் மட்டும் போதாது தமிழக நாடாளுமன்ற உறுப்பினரகளும் மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என தெரிவித்தார்.

வேலைநிறுத்தப் போராட்டத்தால் நாள் ஒன்றுக்கு சராசரி ரூபாய் இரண்டு கோடி வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

# ரயில்முன் பாய்ந்து பெண் தற்கொலை

(கொழும்பு)

பெண்ணொருவர் முந்தலம், மதுரங்குளிய பிரதேசத்தில் ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்துள்ளார்.

கொழும்பு, புத்தளம் புகையிரத வீதியில் புத்தளம் நோக்கி சென்ற ரயில் முன் பாய்ந்து குறித்த பெண் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக புத்தளம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சடலம் தொடர்பில் அடையாளம் காணப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

முந்தலம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பவளவிழாவும் பொன்விழாவும்

நெல்லண்டையான் வெளியீட்டக ஏற்பாட்டில் பேராசிரியர் அருணாசலம் சண்முகதாஸ் தம்பதிகளின் பவள விழாவும் இல்லற வாழ்வின் பொன் விழாவும் நாளை மறுதினம் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு நெல்லியடி தடங்கன் புளியடி நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஓய்வுநிலை பேராசிரியர் மா.நடராஜசுந்தரம் தலைவராகப் பங்கேற்கும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

ஆசியுரையினை யாழ். நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், நெல்லண்டை பத்திரகாளி அம்மன் ஆதீனகர்த்தா சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜக் குருக்கள் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். தலைமையுரையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஓய்வுநிலை பேராசிரியர் மாணிக்கம் நடராஜசுந்தரம் வழங்கவுள்ளதுடன், தொடக்கவுரையினை நெல்லண்டையான் வெளியீட்டுக்கழக செயலாளர் வேல். நந்தகுமார் வழங்கவுள்ளார்.

வாழ்த்துரைகளை வடமராட்சி கல்வி வலய கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார், வட மாகாண உறுப்பினர்கள் வே.சிவயோகன், ச.சுகிர்தன், யாழ். புதிய உயர் கல்லூரி இயக்குநர் திருமதி இ.அருள்நங்கை சண்முகதாசன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஓய்வுநிலை பேராசிரியர் கலாநிதி எஸ்.சிவலிங்கராசா, ஓய்வு பெற்ற அதிபர் கி.நடராஜா ஆகியோர் வழங்கவுள்ளனர்.

நூல் வெளியீட்டுரையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் நா.ஞானக்குமாரன் வழங்கவுள்ளதுடன் நூல் மதிப்பீட்டுரை 1 : பவளமணி - யாழ்.புற்றளை மகா வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதன் வழங்கவுள்ளதுடன், நூல் மதிப்பீட்டுரை 2 : தமிழ் இலக்கியப் பராம்பரியத்தில் பெண் - கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் ஆகியோர் வழங்கவுள்ளனர். (இ-5)

# பார்வையைச் சரிப்படுத்தி அடுத்தவரைச் சரியான கண்ணோட்டத்தில் பார்க்க பார்வை பெறுவோமா?

'இயேசுவும் அவருடைய சீடரும் எரிகோவுக்கு வந்தனர்." என இன்று நமக்கு தரப்படும் பைபிள் பகுதி தொடங்குகிறது. இந்த எரிக்கோவிற்கென்று ஒரு தனித்தன்மை அன்றிருந்தது. ஜெருசலேம் தேவாலயத்தில் பணிபுரிகிற குருக்களும், லேவியர்களும் கிட்டத்தட்ட 20 ஆயிரம் பேர் இருந்தனர். அவர்கள் சுழற்சிமுறையில் அவ்வாலயத்தில் பணிசெய்துவந்தனர். அவர்கள் 26 குழுக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தனர். தேவாலயத்தில் பணி இல்லாத நேரங்களில், அவர்கள் எரிக்கோவில் தங்கியிருப்பர். பாஸ்கா திருவிழா சமயத்தில் மட்டும், அனைவருமே

## பரமபிதா காட்டிய பாதை

ஜெருசலேம் தேவாலயத்தில் பணி செய்து வந்தனர். இவ்விதமாக திரளாக மக்கள் கூட்டம் எரிகோவை விட்டு வெளியே சென்ற போது, திமேயுவின் மகன் பார்வையற்ற பர்த்திமேயு வழியோரம் அமர்ந்து பிச்சை எடுத்துக் கொண்டிருந்தார். ஜெருசலேமில் பணிபுரியக் கூடிய இந்த குருக்கள் இலேவியர் கூட்டமும் இந்த கூட்டத்தில் நிச்சயம் இருந்திருக்க வாய்ப்புண்டு.

இயேசுவும் அவருடைய சீடர்களும் எரிக்கோவிற்குச் சென்றபோது, ஒரு பார்வையற்ற மனிதர் வழியோரமாய் அமர்ந்திருக்கிறார். திமேயுவின் மகன் என்பது அவர் பெயர். முதல் மூன்று நற்செய்திகளிலும் இயேசு ஆற்றிய புதுமைகளில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ஒரே புதுமை இதுதான். பார்வையற்ற பர்த்திமேயு பிச்சை எடுத்தான். ஆனால் வாழ்வு அவ்வளவுதான் என்று அலுத்தவனல்ல. ஒரு கதவை அடைத்த கடவுள் வேறு ஒரு ஜன்னலையாவது திறந்து பார் என்று நம்பியவன். ஆகவே கண் பார்வையற்றபோதிலும் காதால் கேட்டு அறிந்து கொள்வதில் கவனமாக இருந்தான். 'நாசரேத்து இயேசுதாம் போகிறார் என்பதை கவனமாகக் காது கொடுத்து கேட்டான்." இயேசுவே, தாவீதின் மகனே, எனக்கு இரங்கும்" என்று கத்தத் தொடங்கினான். தன் கேட்கும் திறனையும் பேசும் ஆற்றலையும் முறையாகப் பயன்படுத்தினான். யாரைப் பற்றியும் கவலைப்படாமல் இரண்டாம் முறையும் 'தாவீதின் மகனே, எனக்கு இரங்கும்" என்று இன்னும் உரக்கக் கத்தி பர்த்திமேயு இயேசுவைக் கூப்பிடுகிறான். இயேசுவின் கவனத்தை ஈர்த்தான். இயேசு அவரிடம் உமக்கு நான் என்ன செய்ய வேண்டும் என விரும்புகிறீர்? என்று கேட்கிறார். நான் மீண்டும் பார்வை பெற வேண்டும் என்று சொல்கிறார். அவருடைய எண்ணம், சொல், செயல் அனைத்துமே ஒரே இலக்கை நோக்கியதாகத்தான் இருந்தது. அவருடைய உள்ளத்திலும் ஒலித்துக் கொண்டிருந்த ஒரே குரலும் அதுதான்: 'பார்வை பெற வேண்டும்". இயேசு அவருக்கு பார்வை கொடுக்கிறார். பார்வை பெறவேண்டும். அழுக்கில்லாத, களங்கமில்லாத பார்வை பெறவேண்டும். தெளிவான, சரியான பார்வை பெற வேணடும் என்ற இலக்கு எந்நேரமும் அவரின் உள்ளம் ஒலித்துக்கொண்டிருந்தது. அவனும் சரியான பார்வை பெற்றான்.

இந்த இடத்தில் பார்வையுடன் தொடர்புடைய ஒரு கதையை கூறித் தான் ஆகவேண்டும்: ' ஒரு மனைவி தன் வீட்டு கண்ணாடி ஜன்னல் வழியே அடுத்த வீட்டுத்தலைவி, தினமும் துணிகளைக் காயவைப்பதைப் பார்க்கிறார். பின் தன் கணவனிடம் முறையிடுகிறார்: அந்தம்மாவுக்கு சரியா துணி துவை க்கத் தெரியவில்லை. துவைத்த பின்பு அந்தத் துணியெல்லாம் எவ்வளவு அழுக்கா இருக்கு.; முறையீடு கள் 3 நாட்கள் தொடர்ந்தன. நான்காம் நாள் காலை யில் வழக்கம் போல் ஜன்னல் வழியே பார்த்து குறை சொல்ல நினைத்த அந்த மனைவிக்கு ஒரே ஆச்சரியம். மனைவி கணவரிடம் சொன்னார்: அங்கே பாருங்கள். நான் மூன்று நாளாக சொல்லிக் கொண்டிருந்தது அந்த அம்மாவின் காதுல விழுந்து விட்டது. இன்று அவர் துவைத்த துணி யெல்லாம் சுத்தமா இருக்கு என்கிறார். கணவன் அமை தியாக, அடுத்த வீட்டு அம்மாவில் ஒன் றும் குறையி லலை. இன்று நம் முடைய ஜன்னல் கண்ணாடிகளை நான் காலையில எழுந்து சுத்தமாகினேன்" என்று சொன்னாராம்.



கண் பார்வை இல்லாமல், காது கேளாமல், வாய் பேசாமல் இருந்த அமெரிக்க எழுத்தாளர் ஹெலன் கெலர் கூறிய அழகான சொற்கள்" இவை: 'உலகில் மிக அழகானவை களைக் கண்ணால் காண முடியாது, தொட்டும் உணர முடியாது. உள்ளத் தால் மட்டுமே உணரமுடியும்." இறை வாக்கினர் எசாயா கூறிய வரிகள் இவை: 'அப்போது பார்வையற்றோ ரின் கண்கள் பார்க்கும்.... அவர்கள் முகம் என்றும் உள்ளத்து மகிழ்ச்சி யால் மலர்நதி ருக்கும்.... பார்வை பெற வேண்டும். அழுக்கில்லாத, களங்கமில்லாத பார்வை பெற வேண்டும். தெளிவான, சரியான பார்வை பெற வேண்டும். பார்வைகளைச் சீர்படுத்தி, அடுத்த வரைச் சரியான கண்ணோட்டத்தில் பார்க்க பார்வை பெறவேண்டும். அதற்கு நம் உள்ளத்தைத் தூய்மையாக்க வேண்டுவோம். பாதை யோரம் படுத்திருந்த பார்வையற்ற மனிதரின் இலக்கு சரியாக இருந்தத னால் வாழ்வின் வெற்றிக்கே இயே சுவால் கொண்டு செல்லப்படுகிறார். இன்று இதே போல் எத்தனை பேர் வாழ்வின் ஓரத்தில், விழி இழந்து, வழி இழந்து எங்களின் ஒரு வார்த் தைக்காகக் காத்திருக்கிறார்கள். உமக்கு நான் என்ன செய்ய வேண்டும்?" என யாராவது கேட்கமாட்டார்களா எனக் காத்திருப்பவர்களை வெற்றிகர வாழ்வின் மையத்திற்கு கொண்டுவர எம்மால் முடியுமா? எங்கள் பதில் என்ன?


ம.பிரான்சிஸ்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

# அரசஅதிபர் துடுப்பாட்ட வெற்றிக்கிண்ணம்

# நல்லூர் பிரதேச செயலகம் சம்பியனானது



மாவட்ட செயலக அணியினரை வீழ்த்தி அரச அதிபர் துடுப்பாட்ட வெற்றிக்கிண்ணத்தை கைப்பற்றியது நல்லூர்பிரதேசசெயலக அணியினர்.







யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்திற்கான துடுப்பாட்டபோட்டியின் இறுதிப்போட்டி கடந்த 19.10.2015 (திங்கட்கிழமை) முற்பகல் 10 மணிக்கு கல்வியங்காடு GPS மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் வேலணை பிரதேச செயலக அணியை வெற்றி கொண்டு நல்லூர் பிரதேச செயலக அணியினரும் கரவெட்டி பிரதேச செயலக அணியை வெற்றி கொண்டு மாவட்டச் செயலக அணியினரும் இறுதிப் போட்டிக்கு தெரிவாகியிருந்தனர். இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நல்லூர் பிரதேச செயலக அணியினர் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார்கள். ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக பிரசன்னாவும் லவக்காந்தும் களம் இறங்கினார்கள். ஆரம்பம் முதலே நிதானமாகவும் மெதுவாகவும் ஓட்டத்தினை சேகரித்த நல்லூர் பிரதேச செயலக அணியினர் ஒரு கட்டத்தில்(10பந்து பரிமாற்ற நிறைவில்) 3இலக்கு களை இழந்து 34 ஓட்டங்களை பெற்றிருந்தபோதிலும் நான்காவதாககளம் இறங்கிய சுகுமாறனின் அதிரடி ஆட் டத்தினால் 15 பந்து பரிமாற்ற நிறைவில் 7இலக்குகளை இழந்து 81 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. இதில் சுகுமாறன் ஆட்டம் இழக்காமல் 30ஓட்டங்களையும் லவக்காந் 23 ஓட்டங்களையும் பிரசன்னா 12 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்திருந்தார்கள்.பந்து வீச்சில் சுதர்சன் 2 இலக்குகளையும் தர்சன்,சதீஸ், சுரேன்,ரஜீவன் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்கு 82 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய மாவட்டச் செயலக அணியினர் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக குகதாசும் றேகனும் களம் புகுந்தனர். ஆரம்பம் முதலே பந்துவீச்சில் ஆதிக்கம் செலுத்திய நல்லூர் பிரதேச செயலக அணியினர் முதலாவது இலக்கை அணி 6 ஓட்டங்களை பெற்றிருந்தபோது பிரதீஸ்வரன் கைப்பற்ற சராசரி ஓட்ட விகிதத்திற்கு ஏற்ப இலக்குகளையும் இழந்து கொண்டிருந்தார்கள்.13.5 பந்து பரிமாற்ற நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 45 ஓட்டங்களை பெற்று 36 ஓட்டங்களினால் தோல்வியை தழுவிக் கொண்ட அதேநேரம் 2015ஆம் ஆண்டுக்கான அரச அதிபர் துடுப்பாட்ட வெற்றிக்கிண்ணத்தினை நல்லூர் பிரதேச செயலக அணியினர் தமதாக்கிக் கொண்டனர்.பந்து வீச்சில் லவக்காந்,பிரதீஸ்வரன் தலா மூன்று இலக்குகளையும் யுவராஜ் 2இலக்குகளையும் துசிகரன் 1இலக்கையும் கைப்பற்றினார்கள்.

இப்போட்டியில் சிறந்த துடுப்பாட்ட வீரராக 30ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்ற நல்லூர் பிரதேச செயலக அணியின் சுகுமாறனும் சிறந்த பந்து வீச்சாளராக 3பந்து பரிமாற்றங்களை வீசி 7ஓட்டங் களை கொடுத்து 3இலக்குகளை கைப்பற்றிய நல்லூர் பிரதேச செயலக அணியின் லவக்காந்தும் சிறந்த களத்தடுப்பு வீரராக நல்லூர் பிரதேச செயலக அணியின் யுவராஜ்யும் போட்டியின் ஆட்டநாயகனாக 30 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்ற நல்லூர் பிரதேச செயலக் அணியின் சுகுமாறனும் தெரிவு செய்து கௌரவிக்கப்பட்டார்கள். (க)

# தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டி

# மகாஜன மாணவர்கள் சாதனை















அண்மையில்நடைபெற்றதேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டியில் தெல்லிப்பழை மகாஜன மாணவர்கள் அதிக பதக்கங்களை குவித்து சாதனை படைத்துள்ளனர்.

எஸ்.டிலக்ஷசன் 19 வயது பிரிவு கோலூன்றிப்பாய்தலில் தங்கப் பதக்கத்தினை பெற்றதோடு 4.42 மீற்றர் உயரம் பாய்ந்து புதிய சாதனையைப் படைத்துள்ளார்.

17 வயதுப்பிரிவு கோலூன்றிப் பாய்தலில் கபீசன் வர்ண விருதினையும் 21 வயது பெண்கள் பிரிவில் கோலூன்றிப் பாய்தலில் அபர்ணா வர்ண விருதினையும் 21வயதுப் பிரிவில் கோலூன்றிப்பாய்தலில் பி.றிசோத் தங்கப் பதக்கத்தினை யும்15 வயதுப் பிரிவு உயரம் பாய்த லில் சி.கரிணா வெள்ளிப் பதக்கத் தினையும் 21வயதுப்பிரிவு கோலூ ன்றிப் பாய்தலில் ஜெ.அனித்தா வெள்ளிப் பதக்கத்தினையும் பெற்றுக் கொண்டுள்ளனர். (க)

# விண்ணப்பிக்குக

இலங்கை உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினால் நடத்தப்படும் மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

குறித்த பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்களை யாழ். உதைபந் தாட்ட லீக் செயலாளர் அஜித்குமாரிடம் பெற்று எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன் ஒப்படைக்குமாறு உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் அறிவித்துள்ளது. (க)

## உதைபந்தாட்டத்துக்கு விண்ணப்பிக்குக

யாழ். மாவட்ட பாடசாலைகளின் விளையாட்டுச் சங்கம் வட மாகாணப் பாடசாலைகளுக்கு இடையில் நடப்பு வருடத்துக்கான உதைபந்தாட்டத் தொடரை எதிர் வரும் 30 ஆம் திகதி முதல் நடத்த தீர்மானித்துள்ளது.

குறித்த தொடரில் பற்கேற்க விரும்பும் பாடசாலைகள் தமது பதிவை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் யாழ் .மாவட்ட பாடசாலைகளின் விளையாட்டுச் சங்கச் செயலாளர் திருமாறனுடன் தொடர்பு மேற்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

# இன்றைய போட்டிகள்

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் மாகாணத்தின் மகுடம் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் மன்னார் அடம்பன் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வடமராட்சி வல்வை விளையாட்டுக் கழகமும்

மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் கிளிநொச்சி உருத்திரபுரம் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மன்னார் தாழ்வுபாடு சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது. (க)

# உண்மைகளை வெளிக்கொணரவே சர்வதேச விசாரணை வலியுறுத்தல்

## சித்தார்த்தன் எம்.பி உரை



(கொழும்பு)

யாரையும் பழிவாங்கும் நோக்கில் சர்வதேச விசாரணையைக் கோரவில்லை.

தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட அநீதிகள் தொடர்பான உண்மையை வெளிக்கொணர்வதற்காகவே சர்வதேச விசாரணையை வலியுறுத்துவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

ஜெனிவா தீர்மானம் தொடர்பான ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சித்தார்த்தன் எம்.பி இதனைத் தெரிவித்தார்.

தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட பிரச்சினையை எமக்குள்ளேயே தீர்த்திருந்தால் சர்வதேசத்துக்குக் கொண்டு சென்றிருக்கத் தேவையில்லை.

கடந்து வந்த அரசாங்கங்களே எமது பிரச்சினையை உள்நாட்டில் தீர்க்கமுடியாது அதனை சர்வதேச மட்டத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்ற நிலைமையை ஏற்படுத்தியிருந்தன.

உண்மையைக் கண்டறிவதற்கான விசாரணைகள் மூலம் மக்களுக்குத் தீர்வு கிடைப்பது மாத்திரமன்றி பிரச்சினைக்கான அடிப்படைகள் கண்டுபிடிக்கப்பட்டு அவை தீர்க்கப்பட வேண்டும்.

நாமும் இலங்கையர்தான் என்று உணர்ந்து செயற்படுவதற்கான சூழல் உறுதிப்படுத்தப்பட வேணடும்.

அதேநேரம் உள்ளக விசாரணைப் பொறிமுறையில் வெளிநாட்டு தலையீடுகள் பரிந்துரைக்கப்பட்ட போதும் மக்கள் இதனை இவ்விசாரணைப் பொறிமுறை மீது நம்பிக்கை கொள்ளவில்லை.

ஏன் நம்பவில்லையென்றால் பெரும்பான்மையினரை ஆதரித்து வரும் அரசாங்கம் நாம் எதிர்பார்க்கும் சில விடயங்களை இன்னும் செய்துமுடிக்கவில்லை.

மக்கள் மத்தியில் அமைதியுருவாகி நம்பிக்கையொன்று ஏற்பட்டுள்ளபோதும், காணி முழுமையாக விடுவிக்கப்படவில்லை. சிறைக் கைதிகள் முழுமையாக விடுவிக்கப்படவில்லை.

இரண்டு வருடங்கள் மாத்திரம் சிறையில் இருக்க வேண்டியவர்கள் 18 வருடங்களாக சிறையில் இருக்கின்றனர்.

தமிழ் மக்களை நம்ப வைக்க வேண்டுமாயின் உடனடியாக காணிகள் விடுவிக்கப்படுவதுடன், சிறையில் உள்ள இளைஞர்கள் விடுவிக்கப்படவேண்டும்.

இதன்மூலமே விசாரணைப் பொறி முறை தொடர்பில் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-11)

# திருமலை மாணவர் படுகொலையை அதிரடிப்படையே மேற்கொண்டது

## உதலாகம அறிக்கை தெரிவிப்பு

(திருகோணமலை)

திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் படுகொலைகளை விசேட அதிரடிப்படையினரே மேற்கொண்டதாக உதலாகம அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாணவர் படுகொலைகளுடன்சீருடை அணிந்த தரப்பிற்கு தொடர்பு இருப்பதாக அண்மையில் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட நிசாங்க உதலாகம அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தக் கொலைகளை விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்டாரகள் என்பதனை நேரடியாக அறிக்கையில் சுட்டிக்காட்டப்படவில்லை என்ற போதிலும், விசேட அதிரடிப் படையினரை சுட்டும் வகையிலேயே அறிக்கையில் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

2006-ம் ஆண்டு ஜனவரி மாதம 2-ம் திகதி திருகோணமலை கடற்கரையில் வைத்து ஐந்து மாணவர்கள் சுட்டுக் கொலை செய்யபட்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. முச்சக்கர வண்டியில் வந்த படையினர் மாணவர்களுடன் பேசியதாகவும், பின்னர் துப்பாக்கிச் சூடு நடத்தி விட்டு சென்றதாகவும் திருகோணமலை துறைமுகம் அமைந்துள்ள பகுதிக்கு சென்றதாகவும், அந்த வழியில் சோதனைச் சாவடிகள் முகாம்கள் காணப்பட்டதாகவும் நேரில் கண்ட சாட்சியங்கள் தெரிவிக்கின்றன.

எனவே, இந்தக் குற்றச் செயலை படைத் தரப்பினரே செய்திருக்க முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தும் நோக்கில் இந்தக் கொலை செய்யப்பட்டிருந்தால் அது ஓர் பிழையான தீர்மானம் எனவும், குற்றச் செயலுக்காக மன்னிப்பு கோரப்பட வேண்டியது அவசியமானது எனவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, ஏ.சீ.எப். தன்னார்வ தொண்டர்கள் கொலையுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்புபட்டிருப்பதாக அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

# கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கார்த்திகை மாதம் நடைபெறவுள்ள மர நடுகை தொடர்பான கலந்துரையாடல் இன்று மாலை 4.00 மணியளவில் கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் வடக்கு மாகாண சபை விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களினை சேர்ந்தவர்களை கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலர் எஸ்.பஞ்சலிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார். (எ-12.277)

# மனித உரிமைகளை பேன...

இது தொடர்பில் அவர் தனதுரையில் மேலும் குறிப்பிடுகையில்,

ஐ.நாவின் ஒரு நீண்ட கால உறுப்பினராக இலங்கை இருந்து வருகின்றது. ஐ.நாவில் இலங்கை உறுப்பினராகிய 60-வது ஆண்டு நிறைவினை அண்மையில் நாங்கள் கொண்டாடியிருந்தோம்.

எனவே ஐ.நாவின் 70ஆவது ஆண்டு நிறைவு தினத்தில் இங்கு உரையாற்றுவதையிட்டு நான் பெருமையடைகின்றேன்.

ஐ.நாவின் ஒரு உறுப்பு நாடு என்ற வகையில் இலங்கை இந்த அமைப்பில் செயல்திறனும், பொறுப்பும் வாய்ந்த பாத்திரத்தை வகித்து வருகிறது. ஐ.நா நிறுவப்பட்டு 70 வருடங்கள் ஆன நிலையிலும், இலங்கை அதில் உறுப்பினராகி 60 வருடங்கள் பூர்த்தியாகியிருக்கின்றது.

ஐ.நா பொதுச்சபையில் கடந்த மாதம் நான் உரையாற்றிய வேளையில் குறிப்பிட்டது போல், ஐ.நா சாசனம், சர்வதேச மரபுகள் மற்றும் கொள்கைகளை இலங்கை மதிக்கின்றது. ஐ.நாவில் இலங்கை ஒரு பன்முகத்தன்மையான பங்குவகிக கிறது.

1960களில் தொடங்கிய ஐ.நா அமைதிகாக்கும் பணிக்காக நம்முடைய பங்களிப்பு தொடர்கிறது. ஐ.நா அமைதி காக்கும் பணிக்கு எமது அர்ப்பணிப்புமிக்க பங்களிப்பை எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்க நாம் எதிர்பார்த்துள்ளோம்.

நாட்டுக்கான எம்முடைய புதிய குறிக்கோளானது நிலையான வளர்ச்சி மற்றும் நல்லிணக்கம் ஆகிய இரட்டை நோக்கங்களை அடைவதற்கானதாகவே காணப்படுகின்றது.

இது இந்த சூழலில் அடிப்படை தேவையாக இருக்கின்ற நேர்மையாக கடந்த காலத்தினை கையாள்வதனூடாக ஒரு நவீன இலங்கையை கட்டியெழுப்பும் நோக்கத்தைக் கொண்டது.

அரசாங்கம் முன்னுரிமை ரீதியில் மேற்கொள்ளும் செயற்திட்டங்களுக்கு ஐ.நாவின் உதவியினைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு 2012 ஆம் ஆண்டில் 2013-2017 ஐ.நா அபிவிருத்தி உதவி கட்டமைப்பு உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டது.

இதனூடாக புத்தாயிரமாம் ஆண்டில் நிலையான அபிவிருத்தி மற்றும் தரமான சமூக சேவையினை வழங்கும் பொருட்டு உள்ளக பொருளாதார வளர்ச்சி, மனித திறன்கள் மற்றும் நல்லிணக்கத்தை பலப்படுத்துவதனூடாக சமாதானத்தை உறுதிப்படுத்துதல் ஆகியவற்றை அடைந்து கொள்ள எதிர்பார்க்கப்பட்டது.

இலங்கை மக்களுக்கு ஒரு சிறந்த வாழ்க்கையினை வழங்கும் பொருட்டு சமூக, பொருளாதார, மனிதாபிமான மற்றும் கலாசாரம் ஆகியவற்றில் உள்ள சவால்களை இனம்கண்டு, அதுதொடர்பான வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்காக இலங்கையில் அபிவிருத்தி மற்றும் மனிதாபிமான செயற்பாடுகளில் பங்காளியாகச் செயற் படும் ஐ.நாவின் செயற்பாடுகள் தொடர்பில் நாம் முழுமையான திருப்தி அடைந்திருக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-11)

# மழை பெய்யும்

(கொழும்பு)

நாட்டின் பல பாகங்களில் மழை வீழ்ச்சி அதிகரிக்கக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

குறிப்பாக கிழக்கு மற்றும் வட மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமாக மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மின்னல் தாக்கங்களில் இருந்து பாதுகாத்துக் கொள்ள பொது மக்கள் அவதானமாக செயற்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

# ஜனாதிபதி...

ப்புகளில் தளர்வு நிலைமை மற்றும உள்ளக அரசியல மயம் காரணமாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு செயலிழந்துள்ளது.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளி ஊடகங்களுடன் நடுநிலையான தொடர்புகளை பேண வேண்டும் என்ற போதிலும் அது அவ்வாறு நடப்பதில்லை என தான் உணர்வதாகவும் ஹேரத் கூறியுள்ளார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவில் ஜனாதிபதி தொடர்பான செய்திகள் மாத்திரமே வெளியிடப்படுகின்றன.

நல்லாட்சி எண்ணக்கருவை விரிவுப்படுத்தும் பணிகள் மிகவும் குறைவாகவே நடைபெற்று வருவதாகவும் ஹேரத் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் கூறியுள்ளார். (எ-11)

# பொலிஸ் ஆணைக் குழுவில்...

முன்வைக்கப்பட்டிருந்த யோசனையை கவனத்தில் கொள்ளாது 80 வயதை கடந்த இரண்டு பேரை ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியமித்துள்ளமை தொடர்பில் அதிகாரிகள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

பொலிஸ் ஆணைக்குழுவிற்கு நியமிக்கப்பட்ட சில்வா என்ற முன்னாள் பொலிஸ் மா அதிபர் 21 வருடங்களுக்கு முன்னர் ஓய்வு பெற்றவர் எனவும் அவருக்கு தற்போது 81 வயதாவதாகவும் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும் பிரதிப்பொலிஸ் மா அதிபராக இருந்த அன்டன் ஜெயநாதன் 20 வருடங்களுக்கு முன்னர் ஓய்வுபெற்றதுடன் அவருக்கு தற்போது 80 வயதாகிறது.

காங்கேசன்துறையை சேர்ந்த ஜெயநாதன், எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனின் பரிந்துரைக்கு அமையவே பொலிஸ் ஆணைக் குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-11)

# இந்துக்...

னேரி இத்தியடி வழிப் பிள்ளையார் ஆலயம் ஆகிய இரண்டு கோயில்களின் மீதே இந்த தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

வாகனேரி இத்தியடி வழிப் பிள்ளையார் ஆலயம் சில மாதங்களுக்கு முன்னரும் இது போன்ற தாக்குதலுக்கு உள்ளானதாக உள்ளூர் மக்கள் தெரிவிக்கின்றனர்.

குருக்கள்மடம் கிருஸ்ணன் கோவில் மீது தாக்குதல் நடத்திய நபர்களினால் அங்கிருந்த நவக்கிரகங்கள் உட்பட 13 விக்கிரகங்கள் சேதமாக்கப்பட்டு வீதியில் வீசப்பட்டுள்ளன.

இந்த சம்பவங்கள் தொடர்பாக ஆலய நிர்வாகங்களினால் பொலிஸிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மோப்ப நாய்களின் உதவியுடன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ள போதிலும் சந்தேகநபர்கள் எவரும் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்று கூறப்படுகின்றது.

குறித்த ஆலயங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் மாகாண சபை உறுப்பினர்களும் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர். (எ-11)

# துறை ஒதுக்கப்படாத...

கைத்தொழில் அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்களுக்கு பணிகளை ஒதுக்க அஞ்சுவதால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் கடந்த காலத்தில்தான் இவ்வாறான நிலைமையை எதிர்நோக்கியிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வரலாற்றில் முதல் முறையாக ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே துறைகளை வர்த்தமானியில் அறிவித்ததாகவும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சராக இருந்த லக்ஷ்மன் கிரியெல்ல எந்த பேதமும் இன்றி துறைகளை ஒதுக்கியதாகவும் பரதியமைச்சராக தான் உரிய முறையில் பணியாற்ற முடிந்ததாகவும் திஸாநாயக்க நினைவுகூர்ந்துள்ளார்.

சில அமைச்சர்கள் இவ்வாறு நேர்மையாக பணிகளை ஒதுக்க மாட்டார்கள் என்பதால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்து பேச்சுவார்த்தை நடத்தி, இராஜாங்க மற்றும் பிரதியமைச்சர்களுக்கான துறைகளை ஒதுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

# ஜெனிவா அறிக்கைக்கு...

திரிபால சிறிசேனவிடம் முன்வைப்பதற்குத் தயாராகி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜெனிவா அறிக்கையை நடைமுறைப்படுத்த முன்னதாக நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவைப் பெற்றுக் கொள்வதுடன், அது தொடர்பில் சர்வஜன கருத்துக் கணிப்பு நடத்தப்பட வேண்டுமெனவும் இந்த அரசியல் கட்சிகளின் கோரிக்கையின் சாராம்சமாகும்.

இது தொடர்பான எழுத்து வடிவிலான கோரிக்கையொன்று தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாகவும், எதிர்வரும் நாட்களில் அதனை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கவுள்ளதாகவும் குறித்த அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது. (எ-11)

வலம்புரி
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# அதிநவீன வசதி...

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தனது பதவிக் காலத்தில் இந்த மாளிகையை நிர்மாணித்திருந்தார்.

மாளிகையை நிர்மாணிப்பதற்கான நல்ல நேரத்தையும் மகிந்தவின் ஆஸ்தான சோதிடரான சுமணதாஸ என்பவரே குறித்துக் கொடுத்துள்ளார்.

மாளிகையின் உள்ளே நுழைவதற்கு ரகசியக் குறியீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் உள்ளே இருந்து கதவை மூடிக கொண்டால் வெளியில் இருந்து ரகசியக் குறியீட்டின் மூலம் கூட திறக்க முடியாதளவுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் மாளிகையில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஏ.சி. வசதி, தொலைபேசி, இன்டர்நெட், அகலத்திரை தொலைக் காட்சிகள், சொகுசு இருக்கைகள், நிலமட்டத்திற்கு மேலே ஜனாதிபதி மாளிகையை முழுவதும் நடப்பவற்றை கண்காணிப்பதற்கான கமெராக்கள் என கற்பனை கூட செய்ய முடியாத அளவு நவீன மற்றும் சொகுசு வசதிகள் இந்த மாளிகைக்குள் உள்ளடங்கியிருந்தன.

மாளிகையின் மேற்புறம் நில மட்டத்திற்கு மேலாக இரண்டு அறைகள் கொண்ட ஓய்வு விடுதியொன்றும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. (எ-11)


உங்கள் வியாபாரத்தின் அடுத்தகட்ட வளர்ச்சிக்கு...

வியாபார கணனிமயமாக்கல் மூலமான இலாபநட்ட கணக்கறிக்கை, தினசரி இருப்பறிக்கை மற்றும் பிற வசதிகள் உள்ளடங்கலான மென்பொருள் (Accounting Software) சேவைகளை பெற்றுக் கொள்வதற்கு

அழையுங்கள் :- SMT

(2140) 0766202313



அமெரிக்க லொத்தர் விசா

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்



18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.

இந்தவருடத்தில் 55000 பேருக்கான இலவச வாய்ப்பு

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேறலாம்

இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா? இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

பங்களாதேஸ், இந்தியா,பாகிஸ்தான் போன்ற சனத்தொகை கூடிய நாடுகள் இவ்வருடம் விண்ணப்பிக்க தகுதி இல்லாதமையால் ஆசியாவில் இலங்கையர்களுக்கான வாய்ப்புக்கள் அதிகம்

கடந்த வருடம் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா செல்லும் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.

இன்னும் 5 நாளில் பதிவுகள் நிறைவடைகின்றன.

அலுவலர்களின் நன்மை கருதி சனி மற்றும் ஞாயிறு உட்பட இரவு 8 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

V2 TRAVELS

யாழ்ப்பாணம் 0768226241

கிளிநொச்சி 0768226240

நெல்லியடி 0776699892

வல்வெட்டித்துறை 0776697960


# இராணுவம் மீது...

ள்ளது. ஆனால் அத்தகைய பாரதூரமான எத்தகைய அறிக்கையையும் நாம் தயாரிக்கவில்லை.

போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டவுடன் இறுதிப் போரில் காணாமல்போன பொதுமக்கள் மற்றும் போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பில் ஆராய முன்னைய அரசாங்கத்தினால் அமைக்கப்பட்ட எமது ஆணைக்குழு, சரியான தகவல்களை சேகரித்து, மிகச்சரியான அறிக்கையையே தயாரித்துள்ளது.

இந்த அறிக்கையில், நான்காம் கட்ட ஈழப் போரில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட குற்றச்செயல்கள் மற்றும் இராணுவம் ஒரு சில சந்தர்ப்பங்களில் மேற்கொண்டுள்ள குற்றங்கள் அனைத்தும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக வெள்ளைக்கொடி விவகாரம் உள்ளிட்ட குற்றச்செயல்கள் தொடர்பாக இராணுவத்தின் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அதேபோல போரின்போது இராணுவத்தினரால், மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிடும் படுகொலைகளை வெளிப்படுத்தும் சனல் 4 காணொளிகள் மற்றும் தகவல்களையும் நிராகரித்துவிட முடியாது.

அவை தொடர்பிலும் ஒருசில இடங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட வேண்டும் என்பதை எமது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளோம்.

போரின் போது இராணுவத்தின் தரப்பில் இடம்பெற்றுள்ள குற்றச்சாட்டுகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் அவை தொடர்பில் சரியான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் தான் குறிப்பிட்டுள்ளோம்.

இந்த குற்றச்சாட்டுகள் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

அதற்கமைய சரியான வகையில் இரண்டு தரப்பின் குற்றச்சாட்டுகளையும் முழுமையாக ஆராய்ந்து உண்மைகளை கண்டறிய வேண்டும்.

அவ்வாறு விசாரணைகளை மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களில் சுமத்தப்பட்டுள்ள குறறச் சாட்டுகள் நிராகரிக்கப்படலாம். ஆகவே உண்மைகளை கண்டறிய விசாரணைகள் மிகமுக்கியமானது.

இந்த அறிக்கையில் பாதகமான அல்லது பாரதூரமான விடயங்கள் இல்லை. இதுதொடர்பான அரசாங்கத்தின் கருத்தை நிராகரிக்கின்றேன்.

அவ்வாறான நாட்டுக்கு முரண்பாடான எந்த வித தன்மைகளையும் எமது அறிக்கையில் உள்ளடக்கவில்லை.

போரின்போது விடுதலைப்புலிகள் மீது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளதைப்போல இராணுவத்தினர் மீதும் ஒருசில குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன என்பதை குறிப்பிட்டுள்ளோம்.

ஆனால் இராணுவம் போர்க்குற்றங்களை மேற்கொண்டுள்ளது என்ற ஒட்டுமொத்த தீர்மானத்தை ஒரு சந்தர்ப்பத்திலேனும் சுட்டிக் காட்டவில்லை.

பரணகம அறிக்கையில் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை இல்லையா அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு நம்பிக்கை இல்லையா என்ற கேள்வி உள்ளது.

காணாமல்போனோர் தொடர்பில் நாம் கடந்த காலங்களில் வடக்கு கிழக்கில் ஆதாரங்களை தேட ஆரம்பித்த போதே தமிழ் மக்கள் எம்மை நம்பிவிட்டனர்.

ஆனால் அனைத்துலக தரப்பிடம் மாற்றுக் கருத்துகளை கொண்டு செல்ல வேண்டும என்ற ஒரு காரணத்திற்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முரண்பாட்டுக் கருத்துகளை முன்வைத்தது. அவற்றை நாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

அதேபோல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை திருப்திப்படுத்த நாம் செயற்பட முடியாது. எமது கடமை உண்மைகளை கண்டறிவது மட்டுமேயாகும்.

அரசாங்கம் அதற்காகவே காணாமல் போன பொதுமக்களை கண்டறியும் ஆணைககுழுவை நிறுவியது. அதேபோல் அரசியல் செயற்பாடுகளிலும் எம்மை இணைத்துக் கொள்ள முடியாது என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-11)

# விமலின் கடவு...

விக்கப்படுகின்றது.

செல்லுபடியற்ற கடவுச்சீட்டில் வெளிநாடு செல்ல முயன்றதன் காரணமாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச நேற்று முன்தினம் குற்றப்புலனாய்வுத் திணைக்கத்தினால் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது நீதிமன்றம் அவரது வெளிநாட்டுப் பயணங்களுக்கு தடை விதிக்காத நிலையிலும், கடவுச்சீட்டை திருப்பிக் கையளிக்க குற்றப் புலனாய்வுத்துறையினர் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

எதிர்வரும் 28-ம் திகதி குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் கடவுச்சீட்டை திரும்ப ஒப்படைப்பது தொடர்பான இறுதி முடிவொன்றை அறிவிப்பதாக நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக விமல் வீரவன்ச ஏற்கெனவே திட்டமிட்டிருந்த படி வெளிநாடுகளில் மேற்கொள்ளவிருந்த ஒருமாத கால சுற்றுப் பயணம் தடைப்பட்டுள்ளது.

எனினும் 28-ம் திகதி கடவுச்சீட்டு திருப்பிக் கையளிக்கப்படும் பட்சத்தில் 29ம் திகதியே அவர் வெளிநாடுகளுக்கான சுற்றுப் பயணத்தை ஆரம்பிக்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

# கைதிகளுக்கு...

இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து அமைச்சர் சுவாமிநாதனின் அமைச்சரவைப் பத்திரம் நிராகரிக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ மேற்கொண்டுவரும முயற்சிகளை முனனெடுப்பது தொடர்பில் அமைச்சரவையின் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)




Ave Maria Travels & Tours

van for Hire (வான் வாடகைக்கு)

Luxury and comfortable

Van for hire (KDH 223)

All Ceylon Trip

Colombo Airport Hire

wedding & Special Hire

(2157) பாதுகாப்பான பயணத்துக்கு ஆவே மரியா ரவல்ஸ்

J.Ria

0777165230

0775792295

49,St.Patrick's Road Jaffna.



வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

021 567 1532



CNR World Wide Express & Travels

வெளிநாடுகளுக்கான பொதி அஞ்சல் சேவை



- வெளிநாட்டு / உள்நாட்டு துரித தபால் பொதிகள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான பாதுகாப்பு மற்றும் காப்புறுதி உத்தரவாதம் (உங்கள் வீட்டில் இருந்தவாறு அனுப்பும் வசதி)
- சர்வதேச விமான பயணச் சீட்டுக்கள் (Air Ticket) மீள் உறுதிப்படுத்தல். திகதி மாற்றம் (Date Change) செய்து கொள்ளலாம்.
- கடல்/ஆகாய மார்க்க பெரிய பொதிகள் மற்றும் கார்கோ சேவை (Bulk Cargo)

(சி-2530)

சி.என்.ஆர்.எக்ஸ்பிரஸ் பொதிகள் சேவை

401, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (பெருமாள் கோயிலடி)

Hot Line : 0772931062 , Tel : 021 5674145



வீடு வாடகைக்கு தேவை

யாழ்ப்பாணம் நாவலர் வீதி, நல்லூர் கோவில் வீதி உள்ளிட்ட பகுதியில் வீடு வாடகைக்கு தேவை.

தொடர்பு :

0776365774



குத்தகைக்கு காணி தேவை

பலாலி வீதியில் உரும்பிராய்க்கும் திருநெல்வேலிக்குமிடையில் குத்தகைக்கு காணி தேவை (2155)

தொடர்புகளுக்கு 0769004807



காணி விற்பனைக்கு

பலாலி வீதி, தபாற்பெட்டி சந்தி திருநெல்வேலி எனும் இடத்தில் 1 பரப்புக்காணி உடன் விற்பனைக்கு உண்டு (2153)

தொடர்புகளுக்கு: 0779773375



SUNJEY'S MULTI MARKETING CENTER

SMMC

Sunjey's Multi Marketing Center என்னும் ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டதை முன்னிட்டு எதிர்வரும் தீபாவளிப் பண்டிகை வரை அனைத்துப் பொருட்களுக்கும் 10% விசேட விலைக்கழிவு வழங்கப்படும்

குறிப்பாக இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட அசல்தோல் (Pure Leather) சப்பாத்துக்களை 6 மாத உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளலாம்.

முக்கிய குறிப்பு :

இந்தியாவில் இருந்து சட்டபூர்வமான எந்தப் பொருட்களும் விமானம் மூலம் 10 நாட்களில் பெற்றுக் கொடுக்கப்படும். (நிபந்தனைக்கு உட்பட்டது)



கந்தன் கருணை

முருகன் அடியார்களுக்கு

கந்தசஷ்டியை முன்னிட்டு யாழ்.நகரில் இருந்து முதன் முறையாக ஆறுபடை வீடு தரிசனம்

தரிசனம் 10 நாட்கள்.... புறப்படும் திகதி 11/11/2015

ஆறுபடை வீடுகளில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு முருக படைத் தரிசனத்துடன் கடைசி 2 நாட்கள் திருச்செந்தூரில் நடைபெறும் உலகப் பிரபல்யம் பெற்ற சூரன் போர் காட்சியை கந்த அடியார்கள் காண ஓர் அரியசந்தர்ப்பம். மேலும் போகும் வழியில் உள்ள பிரசித்தி பெற்ற ஆலயங்களையும் தரிசனம் செய்யலாம்.

20% விசேட கட்டணக் குறைப்புடன் 75,000/= SL. Rs

சென்னையில் ஒருநாள் சொப்பிங்குக்கு ஒதுக்கப்படும்

எங்கள் கட்டணத்தில் உள்ளடக்கப்பட்டவை

- இருவழி விமான கட்டணம்
- இருவழி விமான நிலையத்துக்கான போக்குவரத்து கட்டணம்
- மூன்று நேர உயர்தர சைவ உணவுகள்
- இருவர் தங்கக்கூடிய அறை, இணைந்த குளியலறை
- 2 தண்ணீர் போத்தல்/ காலை, மாலை தேநீர்
- இந்தியாவில் 9 நாள்களும் யாத்திரைக்கு தனி குளிரூட்டப்பட்ட வாகனம் பயன்படுத்தப்படும்

முக்கிய குறிப்பு:

இன்னும் 4 ஆசனங்கள் மாத்திரமே உள்ளன. முற்பணமாகச் சிறு தொகையை கட்டிப் பதிந்தவர்களும் உங்கள் மீதித் தொகையை செலுத்தி உங்கள் பயணத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

Sunjey's Multi Marketing Center & Sunjeya Tourisum

No: 713 Hospital Road, Jaffna.

0212217070, 0777474111, 0773545115

(C-2539)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.10.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி
# சங்குநாதம்
Sankunatham
வள்ளுவர் ஆண்டு 2046 25.10.2015 தொலைபேசி : 021 222 3378
நாதம் 37



# புதிய தலைமை தேவை

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

ஆலடிப் பிள்ளையார் கோவிலில் விஜயதசமியும் மானம்பூ திருவிழாவும் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. முதியவர்கள் முழு வேலைகளையும் கவனித்துக்கொண்டிருந்தனர். வாழை நடுதல், பந்தல் போடுதல் என அனைத்தும் முதியவர்களால் செய்யப்பட்டுக் கொண்டிருந்தன. இளைஞர்கள் எவரையும் காணவில்லை.

விஜயதசமி மானம்பூத் திருவிழா இவைபற்றி செய்தியும் நேரடி ஒளிபரப்பும் செய்வதற்காக ஓம் தொலைக்காட்சிச் சேவையினர் ஆலடிப் பிள்ளையார் கோயிலுக்கு வந்திருந்தனர். வாகனம் ஒன்றில் வந்தவர்கள் ஒளிபரப்புக்குத் தேவையான கருவிகளையும் கொண்டு வந்திருந்தனர்.

கோயில் வரலாறு, விஜயதசமியின் மகிமை இவற்றையெல்லாம் அறியும் பொருட்டு தொலைக்காட்சி ஊடகவியலாளர் ஒருவர் ஆலடி மாநாட்டில் இருந்தவர்களிடம் கேள்வி தொடுத்தார். முதலில் பண்டிதர் பரமலிங்கத்தைப் பிடித்துக் கொண்டனர். ஒலிவாங்கி பண்டிதரின் கையில் வழங்கப்படுகிறது.

**செய்தியாளர்:** ஐயா! வணக்கம், நாங்கள் ஓம் ரீவியில இருந்து வந்திருக்கிறம். ஆலடிப்பிள்ளையார் கோயிலில நடக்கிற விஜயதசமி மானம்பூத் திருவிழாவைப் பற்றி நேரடி ஒளிபரப்புச் செய்வதற்கு வந்துள்ளோம்.

**பண்டிதர்:** வணக்கம். நல்லது தம்பி. எங்கட கோயில்கள் பற்றி தொலைக்காட்சியில வாறது நல்லது தானே!

**செய்தியாளர்:** ஆலடிப் பிள்ளை கோயிலில இளைஞர்கள் ஒருவரையும் காணவில்லை. முதியவர்கள்தான் எல்லாவேலைகளையும் கவனிக்கின்றனர். என்ன காரணம்?

**பண்டிதர்:** அதையேன் கேட்கிறியள் தம்பி. எங்கட ஆலடிப் பிள்ளையார் கோயிலில் மட்டுமல்ல இன்றைக்கு எங்கட மண்ணில இது தான் நிலைமை.

முன்பென்றால் இளைஞர்கள்தான் அத்தனை வேலைகளையும் செய்வினம். என்ன செய்வது நாசமாய்ப் போன யுத்தம். எங்கட இளைஞர்களை வெளிநாட்டுக்கு அனுப்பிவிட முதியவர்களின்ர தலையில எல்லாம் பொறுத்துப் போயிற்றுது.

இப்ப சுவாமி காவுறது கூட வயோதிபர்கள் தான். வயோதிபம் போகப்போக சுவாமி காவுறது ஏலாது என்பதால் சகடை வண்டில் செய்து வைத்திருக்கிறம். கோயில் உள்வீதியில உருட்டிக்கொண்டு வாறது சுகம்தானே.

**செய்தியாளர்:** ஒரு காலத்தில இளைஞர்கள் வெளிநாட்டுக்குப் போனதால ஒரு இடைவெளி ஏற்பட்டது உண்மைதான். ஆனால் இன்றைய இளைஞர்கள் கோயிலுக்கு வரவில்லை. அதற்கு என்ன காரணம்?

**பண்டிதர்:** சரியான கேள்வி தம்பி! இப்ப எங்கட மண்ணில இளைஞர்கள் இல்லை என்று நான் சொல்ல வரல்ல. ஆனால் அந்த இளைஞர்கள் கோயில் பக்கம் வருவதே கிடையாது. கோயிலுக்குப் போவது வேலை மெனக்கெடு என்று நினைக்கினம். மாணவர்களுக்கு விடிந்தால் பொழுதுபட்டால் ரீயூசன். அதால இந்தக் காலப் பிள்ளைகளுக்கு கோயிலில என்ன நடக்குது என்பதே தெரியாது.

**விதானையார்:** அதுமட்டுமல்ல ஒருவேலை செய்வதால் அதுமட்டும்தான் செய்யமுடியும் என்ற நினைப்பு. இதால பிள்ளைகளின்ர அவதானங்களும் பல்துறை ஆளுமைகளும் இல்லாமல் போயிற்று.

**கங்காணி:** விதானையார் செய்யிறது சரி என்றாலும் மாணவர்களிட்ட பல்துறை ஆளுமையை வளர்க்கிற பொறுப்பு பாடசாலைகளுக்கு உண்டு.முன்பு நவராத்திரி காலம் என்றால் பாடசாலைகள் விழாக்கோலம் பூண்டுவிடும். தோரணம் கட்டுகிற மாணவர்கள், அலங்காரம் செய்கிறவர்கள்,நாடகம் நடிக்கிறவர்கள், பாட்டு, வயலின், வீணை, பட்டிமன்றம் இப்படி எத்தனையோ கலைத்திறன்கள் மேடையில அரங்கேறும்.

இந்த நிகழ்வுகளை மாணவர்கள் தாமாகவே முன்வந்து செய்வர். பிரசாதத்தை எல்லோருக்கும் சமமாகப் பகிர்வதில கூட ஒரு பகுதி மாணவர்கள் ஈடுபட்டு அதை எல்லோருக்கும் வழங்குவர்.

ஒவ்வொரு நாளும் படிப்பு, ஒவ்வொரு நாளும் நோட்ஸ் ஒப் லெசன் என்றால் மூளை மந்தமாப் போகும். மாணவர்களின்ர ஆளுமைக்கும் இடம்கொடுக்க வேணும்.. அதுக்காகத் தான் பாடசாலைகளில நவராத்திரியும் விஜயதசமியும் கொண்டாடப்படுகிறது.

ஆனால் இப்ப, அதிபரும் வாத்திமாரும் சகலகலாவல்லி மாலை பாடி விழாவை முடிக்கிறதாக நிலைமை வந்திட்டுது.

**செய்தியாளர்:** விதானையார் ஐயா! இதை மாற்றி அமைக்க ஏலாதோ

**விதானையார்:** ஏலாது தம்பி விஜயதசமி அன்று க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கு செமினார் நடத்துகிற கலாசாரம் வந்திட்டுது. பிறகு என்னென்டு இந்தக் காலத்துப் பிள்ளைகளிட்ட ஆளுமை வளர்றதும் அவர்கள் கோயிலுக்கு வாறதும் ஒரு போதும் சரிவராது.

**செய்தியாளர்:** என்ன? விஜயதசமியன்று மாணவர்களுக்கு கருத்தரங்கு நடந்ததோ?

**கங்காணி:** ஓம் தம்பி. வருடத்தில 365 நாட்கள். இதில பரீட்சைக்காலம் போக மிகுதி 350 நாட்கள். இருந்தாலும் விஜயதசமி அன்று மாணவர்களுக்கு கருத்தரங்கு வைக்கிறது எந்தளவுக்கு நியாயம் எண்டு பாருங்களன்.

**செய்தியாளர்:** அப்ப ஏன் இந்த நாளில கருத்தரங்கு வைக்கினம்.

**பண்டிதர்:** அவ்வளவு கடமை உணர்வு என்று காட்டத்தான்.

(ஆலடி மாநாட்டில் சிரிப்பு)

**கங்காணி:** அதில்லதம்பி. திட்டமிடல் எதுவும் கிடையாது. ஏதோ! ஒரு திகதியை எடுக்கிறது. அப்படி எடுத்ததில அன்றைய நாள் விஜயதசமியாய் போய்ச்சு. பிற கென்ன கல்விக் கொள்கையின்ர ஐந்தாண்டுத்திட்டத்தை அவித்துக் குடிக்கிறது தானே.

**செய்தியாளர்:** பண்டிதர் ஐயா. இதுபற்றி உங்கட கருத்து.

**பண்டிதர்:** மாணவர்கள் பாடசாலை நிகழ்வுகளில அர்ப்பணிப்போட பங்குபற்று வேண்டும். விஜயதசமி என்றால் ஆண் பிள்ளைகள் வேட்டி கட்டிக்கொண்டு வரச் செய்யவேணும். அன்றைய நாளை மாணவர்களுக்குச் சுதந்திரமாக விட வேணும். காலை விஜயதசமி. பிற்பகல் கருத்தரங்கு எண்டால் எந்த மாணவனாவது வேட்டிகட்டிக் கொண்டு வருவானோ! அவன் பள்ளிக்கூடமே வரமாட்டான். கரு த்தரங்குக்குத்தான் போவான். எங்கட அதிகாரிகள் இது பற்றிச் சற்றுச்சிந்திக்க வேணும்.

**செய்தியாளர்:** பண்டிதர் ஐயா விஜயதசமி பற்றிச் சொல்லுங்களன்.

**பண்டிதர்:** காடு போய் வந்த பாண்டவர்கள் வன்னி மரத்தின் அடியில புதைத்து வைத்திருந்த ஆயுதங்களை எடுத்து பூசை செய்த நாள் தான் விஜயதசமி. சுருங்கச் சொன்னால் கௌரவர்களை அழிப்பதற்கு போரை ஆரம்பிப்பதற்கு முன்னதாக பாண்டவர்கள் ஆயுத பூசைநடத்திய நாள்தான் விஜயதசமி. எங்களுக்கு இனி அப்படி ஒரு பூசையும் இல்லை. (இப்படிப் பண்டிதர் பெருமூச்சுடன் கூறி முடிக்க, வாத்தியார் வைத்திலிங்கம் தாண்டித்தாண்டி ஆலடி மாநாட்டிற்கு வந்து சேர்ந்தார்)

**மூப்பர்:** என்ன வாத்தியார் நடந்தது.

**வாத்தியார்:** அதையேன் கேட்கிறியள். 23.10.2015 வெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்கு விஜேய் ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ் கொம்பனியின்ர ---- இலக்கம் கொண்ட நோமல் பஸ்ஸில யாழ்ப்பாணம் வர ஏறினனான். அந்தச் சாரதி பஸ்ஸை ஊர்ந்து ஊர்ந்து ஓடினது மட்டுமல்ல எத்தனையோ இடங்களில நிற்பாட்டி நிற்பாட்டி... கடவுளே! போதும் என்று போய்ச்சுது. 650 ரூபா கொடுத்து பஸ்ஸில வந்த நான் காலை நீட்டி நிமிர்த்த முடியாமல் இருந்ததில கால் வீங்கிப் போய்ச்சுது. இப்ப 2 ஆயிரம் ரூபா கொடுத்து மருந்து எடுத்திட்டு வாறன்.

**மூப்பர்:** தம்பி எங்கட கொழும்பு- யாழ்ப்பாண பஸ் சேவை தொடர்பில ஒரு யதார்த்தக்களம் வையுங்கோ. பஸ்ஸில ஏறின சனங்களை மதிப்பது கிடையாது. ஆடு, மாடு களை விட மிக மோசமாக நடத்துகினம். இதை யாரிட்ட முறையிடுகிறது என்பது தெரியல்ல. ஏதோ எல்லோருமாகச் சேர்ந்து சுகப் பயணத்திற்கு உதவவேணும். இப்படி மூப்பர் சொல்ல ஆலடிப் பிள்ளையார் கோயில் மணியும் ஒலிக்க, மாநாட்டில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர் மானம்பூ திருவிழாவைப் பார்க்க.




## விஜயதசமி நாளிலும் மாணவர்களுக்கு செமினார்

ஆதித்தன்



# தமிழர்களின் அவசிய தேவை புதிய அரசியல் தலைமை



## முதல்வர் விக்னேஸ்வரனால் ஆகுவது காலத்தின் நியதியும் கட்டளையும்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுதலைப் புலிகளால் உருவாக்கப்படவில்லை என்று கூறுமளவில் நிலைமை மாறியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக இன்றும் இருக்கவேண்டியவர் வீ.ஆனந்தசங்கரி என்பது மறுக்க முடியாத உண்மை.

எனினும் எங்கள் தமிழினத்தின் சோத்தி அரசியல் தலைமைகள் தங்கள் திறத்தை வெளிப்படுத்தாமல் பொய்ப் பிரசாரங்கள், அண்டல்கள் மூலமாக தங்கள் அரசியல் தலைமைகளைத் தக்க வைத்ததன் காரணமாக வீ.ஆனந்தசங்கரி போன்றவர்கள் திட்டமிடப்பட்டு ஓரங்கட்டப்பட்டனர். இங்கு ஆனந்தசங்கரியை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்குள் இருந்து ஓரங்கட்டுவது என்பதற்கு பிரதேச வாதமும் முக்கிய இடத்தைக் கொண்டிருந்தது என்பது ஆழமாக ஆராயும் போது தெரியவரும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பதவியில் வீ. ஆனந்த சங்கரி இருந்திருப்பாராயின் இரா. சம்பந்தரின் காய் நகர்த்தல்களுக்கு இடமிருந்திருக்கமுடியாது.

சம்பந்தரை அதட்டிப் பேசக்கூடிய ஆளுமை மூத்த அரசியல் தலைவர் ஆனந்தசங்கரியிடம் மட்டுமே இருந்தது. எனவே ஆனந்தசங்கரியை வைத்துக்கொண்டு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை தன்னால் கட்டி அவிழ்க்க முடியாது என்று நினைத்த சம்பந்தமானவர்கள் ஏதோவொரு வகையில் புலிகளையும் சங்கரியையும் பகைக்க வைத்தனர்.

சந்தர்ப்பத்திற்கேனும் புலிகளை அனுசரித்துப் போக வேண்டும் என நினைக்காத ஆனந்தசங்கரியின் இறுக்கமான போக்கும் வடபுலத்தின் அரசியல் தலைமையை ஓரங்கட்ட வேண்டும் என்று நினைத்தவர்களுக்கு மிகச் சாதகமாகிப் போக வடபுலத்தின் அரசியல் தலைமையை வேரறுக்கவேண்டும் என்று நினைத்தவர்கள் வெற்றி அடைந்தனர் என்றே கூற வேண்டும்.

வடபுலத்து அரசியல் தலைமையை வெளியேற்றி கொழும்பு அரசியல் தலைமைக்குக் கீழ் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கொண்டு வருவதற்கு மாவை சேனாதிராஜாவும் ஒத்துழைத்தார் என்பது நிறுதிட்டமான உண்மை.

மாவை சேனாதிராஜாவைத் தமது கைக்குள் வைத்துக்கொண்டு ஆனந்தசங்கரியை அரசியலில் இருந்து ஓரங்கட்ட வேண்டும் என்று நினைத்த இரா.சம்பந்தருக்கு மாவையிலும் அதிகம் நம்பிக்கை இருக்கவில்லை.

நம்பிக்கை இருந்திருந்தால் வடக்கு மாகாணத்தின் முதலமைச்சர் வேட்பாளராக மாவை சேனாதிராஜாவை சம்பந்தர் நிறுத்தியிருப்பார். எனினும் அவர் அதைச் செய்யவில்லை. இருந்தும் எய்தவர் இருக்க, மாவை சேனாதிராஜா அம்பை நொந்து கொண்டார்.

ஆம். வடக்கு மாகாணத்தின் முதலமைச்சர் வேட்பாளராக ஓய்வுபெற்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் நிறுத்தப்பட்டார். எனினும் மாவை சேனாதிராஜா சம்பந்தரை நோகாமல் விக்னேஸ்வரனை எதிர்த்தார்.

இதற்குக் காரணம் சம்பந்தரை எதிர்க்கும் வல்லமை மாவை சேனாதிராஜாவிடம் மருந்துக்கும் இருக்கவில்லை. ஆகையால் விக்னேஸ்வரன் மீது அவர் தனது எதிர்ப்பைக் காட்டினார். அந்த எதிர்ப்பை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முழுமைக்கும் பரவச் செய்தார். அதற்குச் சிலர் உறுதுணையாகவும் இருந்தனர்.

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் பதவியைத் தனக்குத் தரவில்லை என்ற கோபத்தில் இருந்து மாவையைச் சமாளிப்பதற்காக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவி மாவை சேனாதிராஜாவுக்கு வழங்கப்பட்டது.

எனினும் அந்தத் தலைமையால் எந்தப் பிரயோசனமும் இல்லை என்பது சம்பந்தருக்கு நன்கு தெரியும். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவுக்கு கட்சியின் தலைவர் என்ற அதிகாரம் இருந்திருக்குமாயின் தேசியப்பட்டியல் எம்.பிக்களின் நியமனத்தை மாவையே செய்திருப்பார்.

ஆனால் அவரால் எதுவும் செய்யமுடியவில்லை. தமிழரசுக்கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவர் பேராசிரியர் சி.க சிற்றம்பலத்தை தேசியப் பட்டியலின் முதன்மை வேட்பாளர் என்று அறிவித்து விட்டு, அவரை ஏமாற்றியதில் இருந்து மாவை சேனாதிராஜாவின் கட்சித் தலைமை அதிகாரம் எங்கிருக்கிறது என்பது புரிகிறது அல்லவா. ஆக, தேசியப் பட்டியல் எம்.பி. பதவியை யாழ்ப்பாணத்தில் எவருக்கும் வழங்கக்கூடாது என்பதில் சம்பந்தப்பட்டவர்கள் மிகவும் தெளிவாக -உறுதியாக இருந்தனர். ஆக, ஆரம்பத்தில் ஆனந்தசங்கரியை எங்ஙனம் புலிகளுடன் பகைக்கட்டி வெளியேற்றினரோ அதே பாதையில் யாழ்ப்பாணத்தாரின் அரசியல் பிரசன்னம் அடித்துக் குறைக்கப்பட்டு வருவது தெளிவாகின்றது.

இவை ஒருபுறம் இருக்க கொழும்புத் தமிழ் அரசியல் தலைமையின் அடுத்த கட்ட நடவடிக்கை வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனை வெளியேற்றுவதாகும்.

முதல்வர் விக்னேஸ்வரன் தமது ஆட்டத்திற்கு தாளம் போடுவார் என்று நம்பியவர்களுக்கு அவரின் நேர்மைத்தனம், உண்மையை வெளிப்படையாக பேசும் போக்கு என்பன பெரும் இடைஞ்சலாக இருந்தன. இதனால் வடக்கு மாகாண சபையில் இருக்கக்கூடிய ஒரு சிலரை ஏவி விட்டு முதல்வர் விக்னேஸ்வரனுக்கு எதிராக செயற்படும் திட்டத்தை சபைக்குள் அமுல்படுத்தலாயினர்.

இப்போது கூட இந்த நாட்டின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முதல்வர் விக்னேஸ்வரனுடன் கதையாமல் இருப்பதன் பின்னணி கொழும்பு தமிழ் அரசியல் தலைமை என்பது புரிந்திருக்கும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி, இந்திய முன்னாள் நிதியமைச்சர் ப.சிதம்பரம் உள்ளிட்ட தலைவர்கள் பலர் முதல்வர் விக்னேஸ்வரனை புகழ்ந்துரைக்க சிலர் மட்டும் அவருக்கு எதிராக செயற்படுவது ஏதோ ஒரு சூழ்ச்சியைமையப்படுத்தியது என்பதை மட்டும் இப்போதைக்கு கூறிக்கொள்ளலாம்.


இது எப்படியாக இருப்பினும் தமிழர்களின் இன்றைய அவசரத் தேவை நேர்மையான -நீதியான - விசுவாசமான அரசியல் தலைமையாகும். அதனை அமைக்கக்கூடிய தகைமையும் துணிவும் முதல்வர் விக்னேஸ்வரன் அவர்களுக்கே உண்டு.

என்னை இரா.சம்பந்தனே அரசியலுக்கு கொண்டு வந்தார். எனவே அவருக்கு எதிராக செயற்படக் கூடாது என்று முதல்வர் விக்னேஸ்வரன் நினைத்தால் அதன் விளைவு அவருக்கு மட்டுமல்ல தமிழினத்துக்கே பேராபத்தாக அமையும் என்பதால் உடனடியாக தமிழ் மக்களுக்கான புதிய அரசியல் தலைமையை முதல்வர் விக்னேஸ்வரன் அவர்கள் உருவாக்க வேண்டும். இது காலம் அவருக்கு இட்டிருக்கும் கட்டளையும் நியதியுமாகும்.

விதுரன்

# "மை டியர் ஜீபா... டைனோசர் இனம் எப்படி அழிந்தது?"

"டைனோசர்களின் அழிவுக்கு இதுதான் காரணம் என ஒரு விடயத்தை மட்டும் கூற முடியாது செல்வமணி. தற்போது, பூமியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊர்வன உயிரினங்கள் உள்ளன. சுமார் ஆறரைக் கோடி ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஊர்வன உயிரினத்தில் மிகப் பெரியது, டைனோசர். இவற்றில் பல வகைகள் உள்ளன. இவை அழிந்தது பற்றி பல்வேறு கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. பாறைகளைவைத்து, மெக்ஸிகோ விஞ்ஞானிகள் சிலர் செய்த ஆய்வில், டைனோசர்களுக்குப் போதுமான உணவு கிடைக்காததும், பூமியின் வெப்ப நிலை மாற்றமும் தான் அவற்றின் அழிவுக்குக் காரணமாக இருந்திருக்கலாம் எனக் கூறுகிறார்கள். ருமேனியா பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வில், டைனோசர் வாழ்ந்த பகுதியில் விண்கல் மோதியது தான் அவற்றின் அழிவுக்குக் காரணம் என்கிறார்கள்."



**"அன்பு ஜீபா... பாரத ரத்னா விருது எப்போது உருவாக்கப்பட்டது?"**

"இந்திய அரசால் கொடுக்கப்படும் விருதுகளில் உயர்வானது, பாரத ரத்னா. 1954 ஆம் ஆண்டு முதல் இந்த விருது அளிக்கப்படுகிறது. பொதுச்சேவை, கலை, இலக்கியம், அறிவியல் உள்ளிட்ட துறைகளில் மதிக்கத்தக்க சாதனைகளைச் செய்தவர்களுக்காக வழங்கப்படுகிறது. முதல் ஆண்டில், தமிழகத்தைச் சேர்ந்த முன்னாள் முதலமைச்சர் ராஜாஜி, அறிவியல் மேதை சேர் சி.வி.ராமன், முன்னாள் ஜனாதிபதி டாக்டர். ராதாகிருஷ்ணன் ஆகியோருக்கு அளிக்கப்பட்டது. யாருக்கு இந்த விருதை அளிக்கலாம் என இந்தியப் பிரதமர், ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்வார். அதன்படி வழங்கப்படும். ஓர் ஆண்டில் அதிகபட்சம் மூன்று நபர்களுக்கு அளிக்கப்படலாம். இறந்தவர்களுக்கு பாரத ரத்னா விருது அளிக்கப்படக் கூடாது எனும் விதியை பின்னாளில் திருத்தினார்கள். இந்த விருது பெற்றவர்கள், தங்கள் பெயருக்கு முன் இதைப் பட்டமாக பயன்படுத்தக் கூடாது. இந்திய நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் அல்லாமல், ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த கான் அப்துல் கப்பார் கான், கறுப்பின மக்களின் விடுதலைக்காகப் போராடிய நெல்சன் மண்டேலா, பிறப்பால் வெளிநாட்டவராக இருந்து, பிறகு இந்தியக் குடியுரிமை பெற்ற அன்னை தெரசா ஆகியோர் பாரத ரத்னா விருது பெற்றிருக்கிறார்கள். இந்த ஆண்டு, மதன் மோகன் மாளவியா மற்றும் அடல் பிஹாரி வாஜ்பாய் ஆகியோருக்கு பாரத ரத்னா வழங்கப்பட்டது. இதுவரை 45 பேர் இந்த விருதைப் பெற்றிருக்கிறார்கள்."

**"கூகுள் நிறுவனத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சுந்தர் பிச்சை பற்றி சொல்லேன் ஜீபா"**



"புதுப்புது செய்திகளை அறிந்து கொண்டு அப்டேட்டாக இருக்கிறாயே அக்ஷயா, சபாஷ். 1972 ஆம் ஆண்டு சென்னையில் பிறந்தவர், பிச்சை சுந்தரராஜன். இணையத்தளங்களில் பயன்படுத்தும் பெயர், சுந்தர் பிச்சை. வீட்டில் செல்லமாக, ராஜேஷ் என அழைப்பார்கள். அப்பா ரகுநாத பிச்சை, மின் பொறியாளர். அம்மா லட்சுமி, ஸ்டெனோவாக வேலை பார்த்தவர். மனைவி பெயர், அஞ்சலி. ஒரு மகனும், ஒரு மகளும் இருக்கிறார்கள். சிறு வயதில் ஒருமுறை டயல் செய்த தொலைபேசி எண்ணைக்கூட மனப்பாடமாகச் சொல்லும் அளவுக்கு அபார நினைவாற்றல் உடையவர் சுந்தர் பிச்சை.

கரக்பூர் ஐ.ஐ.டி-யில் உலோகவியல் பொறியியலில் (Metallurgical Engineering) பட்டப்படிப்பு முடித்ததும், கல்வி உதவித்தொகை கிடைக்க, அமெரிக்கா சென்று ஸ்டான்/போர்டு பல்கலைக்கழகத்தில் எம்.எஸ் படித்தார். 2004 ஆம் ஆண்டு, கூகுள் நிறுவனத்தில் சேர்ந்தார். கூகுளின் முக்கிய வசதிகளான ஜி மெயில், கூகுள் டிரைவ், வீடியோ கோடக் ஆகிய சேவைகள் பிரிவின் சீனியர் வைஸ் பிரசிடென்ட் பொறுப்பில் இருந்தார். கணனியில் இருந்து இணையத்துக்குத் தொடர்பு கொள்ள உதவுபவை பிரௌஸர்கள். உலகம் முழுக்க இன்டர்நெட் எக்ஸ்ப்ளோரர், மோஸில்லா என ஏற்கனவே பல பிரௌஸர்கள் பிரபலமாக இருந்த நிலையில், 'கூகுளின் பிரத்தியேக பிரௌஸராக, 'க்ரோம்' உருவாக்குவோம்' என்றார் சுந்தர். அந்த ஐடியாவுக்கு கூகுள் நிறுவனத்தில்வரவேற்பு இல்லை. 'இப்போதைய பிரௌஸர்களில் இருக்கும் எந்தக் குறையும் இல்லாமல், நம் பிரௌஸர் இருக்கும்' என விடாமல் போராடி, அந்த புராஜெக்ட்டுக்கு ஒப்புதல் வாங்கினார். இன்று, உலகின் நம்பர் ஒன் பிரௌஸர் கூகுள் க்ரோம். தற்போது, கூகுளுக்கு சுந்தர்தான் தலைமை. எதையும் தெளிவாகவும் தொலைநோக்குடனும் திட்டமிடுவது, திட்டமிட்டதை வெற்றி கரமாகச் சாதிப்பது... இதுதான் சுந்தர் பிச்சையின் பலம். நடுத்தரக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்து, இன்று உலகமே கவனிக்கும் மனிதராக உயர்ந்திருக்கிறார் சுந்தர் பிச்சை."

**"ஹாய் ஜீபா, வயலினைக் கண்டுபிடித்தவர் யார்?"**

"இசை என்றால் உனக்கு ஆர்வமா கவின்? 16 ஆம் நூற்றாண்டில், இத்தாலியைச் சேர்ந்த ஆன்டோனியோ ஸ்ட்ராடிவேரியஸ் (Antonio Stradivarius) என்பவரால் உருவாக்கப்பட்டது தான் வயலின். பழங்காலத்தில் இது, 'பிடில்' (fiddle) என்று அழைக்கப்பட்டது. இன்று, மின் சார வயலின் வரை பல வகைகள் கிடைக்கின்றன. கர்நாடக இசை, திரைப்பட இசை எனப் பலதரப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு வயலின் பயன்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டில், குன்னக்குடி வைத்தியநாதன், டி.என்.கிருஷ்ணன், லால்குடி ஜெயராமன், டாக்டர் எல்.சுப்ரமணியம் உள்ளிட்ட பலர் வயலின் இசைப்பதில் புகழ் பெற்றவர்கள்."

# மயில்-சில குறிப்புக்கள்!



பார்க்கப் பார்க்க அலுக்காத ஆச்சரியங்களில் ஒன்று மயில். தோகை விரித்து ஆடும் மயிலின் அழகுக்கு மயங்காதவர்கள் இல்லை. இந்தியாவின் தேசியப் பறவையைப் பற்றி சில துளிகள்...

ஆங்கிலத்தில் மயிலின் பொதுப் பெயர் Peafowl. ஆண் மயிலின் பெயர் Peacock. பெண்மயிலின்பெயர் Peahen.

இந்திய மயிலின் அறிவியல் பெயர், பாவோ க்ரிஸ்டாடஸ் (Pavo Cristatus).

ஆண் மயிலுக்கு தமிழ் மொழியில், சேவல் என்ற பெயர் உண்டு.

1972 ஆம் ஆண்டு இயற்றிய இந்தியச் சட்டப்படி, மயிலை வேட்டையாடுவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

அதிக ஒலியெழுப்பும் பறவைகளில் மயிலும் ஒன்று. சாதாரண நாட்களைவிட, மழைக் காலங்களில் அதிக முறை ஒலியெழுப்பும். காடுகளில் கேட்கும் மயிலின் குரல் மூலம், புலி போன்ற ஆபத்தான விலங்குகளின் இருப்பைத் தெரிந்துகொள்ளலாம்.

பிறந்து ஒரு நாளே ஆன மயில் குஞ்சுகள், தாயின் உதவியின்றித் தானாகவே நடக்க ஆரம்பிக்கும். உணவு உண்ணவும், நீர் அருந்தவும் செய்யும்.

ஆண் மயிலின் வண்ணமயமான தோகை, பெண் மயில்களை ஈர்க்கவும், பிற விலங்குகள் தாக்க வரும்போது, தனது தோகையை விரித்துக் காட்டி பயமுறுத்தவும் பயன்படுத்தும்.

மயிலின் தோகை, நாம் பார்க்கும் கோணத்துக்கு ஏற்ப வெவ்வேறு நிறங்களை எதிரொளிக்கும்.

அகவல், ஆலல், ஏங்கல் போன்ற பல சொற்களால் மயிலின் ஒலியைக் குறிப்பிடுகிறார்கள்.

மயில் தோகையின் வேறு பெயர்கள்... சரணம், சிகண்டம், கூந்தல், சந்திரகம், கலாபம், கூழை, பீலி, தொங்கல் மற்றும் தூவி.

1963இல் மயில், இந்தியாவின் தேசியப் பறவையாக அறிவிக்கப்பட்டது.

மயிலினங்களைத் தேசியப் பறவையாகக் கொண்ட வேறு நாடுகள்: மியன்மார் மற்றும் கொங்கோ. உலகின் பல்வேறு பகுதிகளில், வெள்ளை மற்றும் சாம்பல் நிற மயில்கள் காணப்படுகின்றன.

# நன்றி மறக்காத எறும்பு

ஒரு கட்டெறும்பு தண்ணீரில் தத்தளித்துக் கொண்டிருந்தது.

மரத்திலிருந்து இதைப் பார்த்த புறா ஒன்று மரத்தயிலிருந்த இலை ஒன்றைப் பறித்து நீரில் வீசியது.

எறும்பும் தத்தித் தத்தி வந்து அந்த இலையின் மேல் ஏறிக் கொண்டது. அந்த இலை காற்றில் அசைந்து மெதுவாகக் கரைப்பக்கம் ஒதுங்கக் கரையில் ஏறி தப்பியது அந்த எறும்பு.

மற்றொரு நாள்.

ஒரு வேடன் அந்த புறாவைக் குறி வைப்பதைப் பார்த்தது அந்த எறும்பு.

ஆனால் புறாவோ இதை அறியாமல் வேறெங்கோ கவனமாக இருந்தது. அன்று தன்னைக் காப்பாற்றிய புறாவின் உயிரைக் காப்பாற்ற வேண்டியது தனது கடமையாக எண்ணியது எறும்பு.


விரைந்து சென்று வேடனின் காலில் நறுக்கென்று கடித்தது.

கடியின் வலி தாங்க முடியாமல் கத்திய வேடனின் குறி தப்பியது. சத்தத்தைக் கேட்டுத் திரும்பிய புறா தனக்கேற்பட விருந்த ஆபத்தை அறிந்து அந்த இடத்தை விட்டுப் பறந்தது.

அன்று புறா நமக்கென்ன என்று அலட்சியமாயிருக்காமல் உதவி செய்ததால்தான் புறா வின் உயிர் தப்பியது. அந்த சிறிய உருவம் கொண்ட எறும்பும் நன்றி மறக்காமல் செயற்பட்டது.

எவருக்கும் எந்த நேரத்திலும் நம்மால் முடிந்த உதவியைச் செய்ய வேண்டும். அது போல் நமக்குச் செய்த நன்றியையும் எந்தக் காலத்திலும் மறக்கக் கூடாது.







வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள், இல.3,2 ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்) 021 567 1532



**விஜயின் போக்கிரியை புகழ்ந்தவர்கள் புலியை ஏன் இகழ்கிறார்கள்?**

**உங்க மனைவி கேதார கௌரி விரதமாமே?**

**அம்மாவின் அன்பை அதிகம் பெற ஒரு பெண்ணா என்ன செய்ய?**

**சயந்தன் — யாழ்ப்பாணம்**

தமிழ் அரசியல் கைதிகளின் போராட்டம் பற்றிய நம் தமிழ் தலைமையின் நிலைப்பாடு என்ன?

அவர்கள் கொதிக்கும் எண்ணெய்க்குள் போடும் கடுகு மாதிரி வெடித்துப் பறந்து விடுவார்கள்.

அவர்களுக்கு தேவை கைதிகளின் விடுதலை இல்லை. அடுத்த பாராளுமன்ற தேர்தலுக்கான சிந்தனை அதுதானப்பா.

எண்ணெய் கைதிகளென்றால் நம் அரசியல் வாதிகள் கடுகுகள். சடுதியாக வெடித்துப் பறந்துவிட கொதிப்பது எண்ணெய் மட்டும் தான்.

**யசீரா — யாழ்ப்பாணம்**

நாற்பது வயதில் திருமணம் செய்வது பற்றி உமது கருத்து?

முதலாவது மனைவியிடம் சட்டபூர்வமாக விவாகரத்தைப் பெற்றுவிட்டு அடுத்துக்கு முயற்சிப்பது மிக நல்லது.

**லவன் — கோப்பாய்**

தத்துவம் ஒன்று சொல்லுங்க?

பெண்ணைவிட ஆணுக்கு பலம் அதிகமாக ஆண்டவன் படைத்தது அவளுக்கு பாதுகாப்பாக இருப்பதற்கே அன்றி பலாத்காரம் செய்வதற்கல்ல.

**அனிதா — கோப்பாய்**


அம்மாவின் அன்பை அதிகம் பெற ஒரு பெண்ணாக என்ன செய்ய?

பெண்மை என்றால் தாய்மை. தாய்மை என்றால் அன்பு. அன்பென்றால் அம்மா. நீயும் ஒரு பெண்தானே.

**கிருஷா — வரணி**

உங்க மனைவி கேதாரகௌரி விரதமாமே?

ம்ம்ம்... முதல் நாள் இரவு நான் பாலும் பழமும் கைகளில் ஏந்தி என படித்தேன். அவளோ காப்பெடுக்க வந்தேனம்மா கௌரியம்மா தாயே என முடிக்கிறாள்.



**குமார் — தொல்புரம்**

சிதம்பரம் ஏன் இங்க வந்தார்?

விக்கினங்கள் தீர்க்கும் விக்கினேஸ்வரனிடம் சென்றிருக்கிறார் கவலை வேண்டாம் எல்லாம் நன்மைக்கே.

**கோபி — மந்திகை**

ஜோக் ஒன்று சொல்லுங்க?

கடவுள் : பக்தா உன் பக்தியை மெச்சினேன் உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்?

பக்தன் : கடவுளே நீ எனக்கு வரம் தந்தாய் என்று சொன்னா யாருமே நம்ப மாட்டாங்க. அதால முதல்ல வா ஒரு செல்பி எடுத்துக்குவம்.



எங்கள் தலைவருக்கு அதிக வயது ஆகிவிட்டது என்கிறீர்கள். ஆனால், அவர் பேசினால் சிறுபிள்ளைத்தனமாகப் பேசுகிறார் என்கிறீர்களே... இது என்ன நியாயம்?


**அன்பு வாசகர்களே!**

நீங்களும் வியாசர் பகுதிக்கு உங்கள் கேள்விகளை எழுதி அனுப்புங்கள். அரசியல், ஆன்மீகம், சமூகம், பொழுதுபோக்கு சார் கேள்விகளை மிக சுருக்கமாக உங்கள் பெயர், முகவரியுடன் அனுப்பி வையுங்கள்.

**குறுந்தகவல் (SMS) 021 567 1532**


**வேணா — கோண்டாவில்**

பொய் என்றால்?

வேற தொலைபேசி மாத்தியதில உங்களோட தொலைபேசி இலக்கத்தை மிஸ் பண்ணிட்டன் சமீபத்தில் அதிகம் சொல்லப்படும் பொய்.

**பப்பு — இணுவில்**

முதலாளி, தொழிலாளி யார் பெரியவர்?

ஒரு முதலாளியிடம் வேலையை விட்டுட்டு போயிருவேன் என நெஞ்சை நிமிர்த்தி கூறக் கூடிய அளவுக்கு வேலை செய்ய தெரிஞ்சா நேர்மையான தொழிலாளி. வேலை தெரிந்த தொழிலாளியை இழக்காமல் அவனை கூடவே வைத்திருப்பவனே உண்மையான முதலாளி.

**பிரியா — யாழ்ப்பாணம்**

குட்டிக் கதை பிளீஸ்?

என்னை முதியோர் இல்லத்தில் சேர்த்து விட்டு திரும்பிக் கூடப் பார்க்காமல் செல்லும் மகனுக்கு இறுதிவரை தெரியக் கூடாது அவனை நான் அருகில் உள்ள அநாதை இல்லத்தில் இருந்து எடுத்தேன் என்று.

**நளாயினி — கோண்டாவில்**

விதி என்றால் என்ன?

நீண்ட நேரமாய் பாதையேற மின்கம்பத்தின் அருகில் நின்றவர் ஏதேச்சையாக எட்டி இரு அடிகள் வைத்ததும் வீதியால் வந்த வாகனம் மின்கம்பத்தை பதம் பார்த்தது.

**தீனா — யாழ்ப்பாணம்**

விஜயின் போக்கிரியை புகழ்ந்தவர்கள் புலியை ஏன் இகழ்கிறார்கள்?


நல்லதை போற்றவும் கெட்டதை தூற்றவும் பழகிவிட்டதப்பா இந்த உலகம். இரண்டு மணித்தியாலம் உள்ள ஒரு படத்தை பார்த்து விமர்சனம் எழுதிவிட்டு இறுதியில் இது ஒரு படமே இல்லை என எழுதுவது சுலபம். ஒரு படத்தை உருவாக்க எத்தனை படைப்பாளிகளின் இரத்தமும் சதையும் கலந்திருக்கிறது என்பதை உணர்ந்திடாத மனிதர்.

**கோபிகா — பருத்தித்துறை**

மது அருந்திவிட்டு மனைவியை அடிப்பவர்கள் பற்றி?

மது அருந்தாமல் மனைவியை அடிக்கத் தெரியாதவர்கள்.





## கவிதைக் கலசம்

### இமயம் தொட

இயலாமையை விட்டொழிக்க
இயலும் என எண்ணு
தடை பல வந்தாலும்
தகர்த்தெறிவேன் -என
உன்னை நம்பு
படை பல வந்தாலும்
சுட்டெரிப்பேன்- என
நிமிர்ந்து நில்
எதுவென்ன ஆனாலும்
இலக்கை அடைவேன்-என
உறுதி கொள்

மாவை, நா:கஜேந்திரன்

### இரவு நேரம் அது

நங்கையின் நுதல்
விண்ணில் தாவும் நேரம் அது
கன்னியின் கேசத்தில் சூடிய
மல்லிகை மலர்ந்தது போல்காட்சி தரும்
கண் சிமிட்டும்நட்சத்திரங்களுடன்...
வீசும் தென்றல்மடியில் உறங்கும்
குழந்தை அனுபவிக்கும்மூச்சுக் காற்றோ...
பகலில் ஆணவத்துடன்இருந்த அகத்தி
இரவில் அகம் மூடும்மாயம் என்ன???
போட்டிக்கு தோழி நிலா வந்ததுதான் காரணமோ
பகைவனுடன் கொண்ட
பகையால் பயந்த வௌவாலோ
தோழி மல்லிகையின் வருகையால்
மணங்கவர்ந்து உறக்கம் கலைந்ததோ
பகலில் அலங்காரம் செய்து
வண்டிடம் கற்பை இழந்த பூக்களும்
தாயின் வருகைக்காக
தனிமையில் தவித்த குஞ்சுகளும்
ஓயாது கண்விழித்த
சூரியனும் கண்ணுறங்கும் நேரம் அது...
இரவன்னையின் மடியில்
நைட்டிங்கேலின் தாலாட்டுடன்
என் இருளுக்கு வெளிச்சமாய்
என் விரலின் ஸ்பரிசத்திற்காய் ஏங்கும்
நைட்லாம் உடன் கண்ணுறங்கும் நேரம் அது

ச.தமிழினா
யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு ம.க

### நம்பிக்கையோடு இரு

நீ என்பது தனிமை மட்டுமல்ல உண்மையும் அதுதான்
முன்னேறும் நதிகள் பள்ளத்தைப் பார்க்காது
முகம்நோக்கி நீயும்மனங்களை படித்துவிட்டு
கண்ணில் கார்காலம் நாளை கலைந்துபோகும்
கனவுகள் குலைந்தாலும் நனவினில் நினைவாக்கு
முடியாத பாதையுமில்லை விடியாத நாளுமில்லை
எல்லாம் நீ அறிந்த உண்மைதான்
நெஞ்சுக்குள் ஜோதி எழுந்தால்தான்
அஞ்சும் ஜாதி அடியோடு மாளும்
வரலாற்றிலே வலியின்றி வாழ்வில்லை
உன் வாழ்வில் நிலையென்று எதுவுமில்லை
பாதி கவலைகள் உன் கற்பனைகள்
மீதி கவலைகள் தற்காலிகமானவை
பிறகு எதற்கு வாட்டமும் வருத்தமும்
வருந்தாதே நீ... வலியோடும் ஒரு
ஒலி பிறக்கும்- ஒலிக்குமுன்
ஒளிபிறப்பது நியதியாயின்
நாளை உன் வாழ்வில் விடியலும் நிச்சயம்
நம்பிக்கையோடு இரு

அ.நளினாசினி, கோண்டாவில்

### அறிவாய் அறிவே உயிர் நாடி

உன்னை அறியத் தெரிந்து கொள்
உலகை உணரத் தெரிந்து கொள்
கண்ணை மயக்குங் காட்சிகளால்
கவனம் இழக்கா திருந்துகொள்
அறிவே உலகின் உயிர் நாடி
அயரா தோடு அதை நாடி
குறியாய் வெற்றி அதைத் தேடு
குன்றா திருப்பாய் நிறைவோடு
துடுப்பாய் அறிவைத் துணையாக்கு
துன்பக் கடலைக் கடந்திடலாம்
எடுப்பார் கையிற் பிள்ளைபோல்
எவரிலும் தங்கி வாழாதே
கொடுக்கக் கொடுக்கக் குறையாத
செல்வம் அறிவு அறிந்திடுவாய்
இடுக்கண் களையப் பற்றிடுவோம்
அறிவென் னுயர்ந்த துணையதனை

கலாபூஷணம் ந. இராமநாதன்,
அல்வாய்.

# மௌனத்தின் தேடல்- 271



### பொறுப்பற்ற எஜமானர்

மனித இனத்தை
நன்றி காட்டியே ஈர்த்திடும்
நாலு கால் ஜீவன்
காவலுக்கு வேந்தன்
கள்ளனுக்கு விரோதி
தப்பாமல் திருட்டொழிக்கவே
மோப்பத்தால் விரட்டிடும்!
விலங்கின் எஜமானர்களின்
பொறுப்பற்ற செயலால்
தெரு முனையில் கட்டாக்காலியாகி
வீதிவிபத்து பெருக்கத்துக்கு
இந்த ஜீவனுமொரு
காரணியாகுவது துன்பமே!

அராலியூர்
சோ.சிவகுமாரன்

### ஆறறிவா? உனக்கு

மனிதகரம் கொண்டு
மனிதசிரம் அறுக்கும்
மதிகெட்ட உலகமடா இது
பிஞ்சுப்பாலகரை தன் பசிக்கு
இரையாக்கும்
மனம் மரணித்த பூமியடா இது
கேட்பதற்கு ஆளில்லை-இங்கு
கோட்ஸ்க்கு போயும் தீர்ப்பில்லை
பிஞ்சுக்குழந்தையின்
பஞ்சுத் தடவல் கண்டு
அடங்கிப் போகிறது ஐந்தறிவு
மனிதா உனக்குள்தான்
மிருக குணம்
குடிகொண்டதா- கற்றுக்கொள்
ஐந்தறிவிடமிருந்து...

சா.தர்சிகா
கொக்குவில் மேற்கு

### செல்லமே

வக்ரம் சூழ்ந்த இவ்வுலகில்
எத்தனையோ இசைகள் இருந்தும்
ஏனோ சிலர் இச்சைகளையே
நாடுகின்றார்கள்
நன்றிகெட்ட மனிதம்
இவ்வுலகில் இருந்தும்
தத்தி தத்தி அன்னை நடைபோடும்
செல்லமே -நன்றியுள்ள
செல்லப்பிராணியோடு
நீ கண்களால் வார்த்தை பேசுவது
மெய் சிலிர்க்க வைக்கின்றது

லி.டயானி
மறவன்புலோ மத்தி

### விசுவாசம்

பணக்கார வர்க்கத்தின்
சொர்க்கத்தில்
நாய்க்கு கொடுக்கப்படும்
மரியாதை ஏழைக்கு
கொடுக்கப்படுவதில்லை
இருப்பினும்
அன்பான குழந்தையும்
நன்றியுள்ள நாயும்
விசுவாசத்தின்
உயிர் மூச்சு

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

### பாசப்பிணைப்பு

பாசமெனும் பக்குவத்தை
பண்புடனே காட்டும் ஐந்தறிவு
ஜீவன்களின் மகிழ்வான வாழ்வின்
சுதந்திரத்தின் இரகசியத்தை
கேட்டறிய துடிக்கும் மனித இதயத்தின்
அமைதியான பாசப்பிணைப்பா இது

எ.யூட் கமில்டா
கிளி. உருத்திரபுரம் ம.வி.

### குழந்தையும் நாயும்

குழந்தைப் பிள்ளையும் குட்டிநாயும்
கதைசொன்ன காலம்மாறி
செவ்வாய்க்கிரகத்துக்கு சென்றுவர
ஆலோசிக்கும் காலம் இது

வி.அபிராமி
தொல்புரம் மத்தி

### உயிர் காக்கும் நாய்

கருமை கறுப்பினுள்ளே
உருவம் மறைப்போடு
இரு துளைகளினூடே
வரும் காட்சி காணும்
வக்கிர மனிதநாய் முன்னே
பராக்கிரம மனிதனும் நின்றால்
உயிர் போக்கிவிடுவர்
குழந்தையும் நன்றியுள்ள நாயும்
அன்புடன் பழகுகிறார்கள்!
எவரது உயிரையும் பாதுகாக்கும்
மிருகநாய்தான் மனிதனாக

சி.சுகிர்தமலர்
உரும்பிராய்

### பாராட்டுக்குரிய பண்பு

வந்தாரை வரவேற்று உபசரிக்கும்
மண்ணில் மனிதநேயப்
பண்புகள்
மரணித்துப் போகிறதே இன்று
பெண்கள் சிறுமியர் பாலியல்
வன்புணர்வும் கொள்ளை
கொலை கடத்தல் என
ஒழுக்கம் சீரழியும்
இக்கால கட்டத்தில் இச்சிறுவன்
நாயோடு நட்புக்கொண்டு
பழகும் பண்பு பாராட்டுக்குரியதே

துரை
தென்மட்டுவில்

# மௌனத்தின் தேடல் -272



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 28.10.2015ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

**வலம்புரியில் தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருக்கின்ற மாணவர்களுக்கான சரீர தண்டனை தொடர்பில், "சிறுவர்களுக்கு வழங்கப்படும் உடல் ரீதியான தண்டனைகளை தவிர்ப்பதன் ஊடாக சிறுவர் நேயப் பாடசாலைகளை உருவாக்குவோம்" என்ற தலைப்பில் வாசகர் ஒருவரின் கருத்துப்பகிர்வு இவ்வாறம் தரப்படுகின்றது.**


# மனவெளி

இலங்கையின் தண்டனை சட்டக் கோவையின் படி சிறுவர்களுக்கு வழங்கப்படும் உடல் ரீதியான தண்டனைகளுக்கு பின்வரும் வகைகளில் வழக்கு பதிவு செய்யமுடியும்.பெற்றோர் அல்லது பாதுகாவலரால் சிறுவர் கொடுமைப்படுத்தப்படல் - தண்டனை. சட்டக் கோவை பிரிவு 308 சிறுவர்களை தாக்குதல் மற்றும் காயத்தை ஏற்படுத்தல்- த.ச.கோ. பிரிவு 314, சிறுவர்களுக்கு கடும் காயங்களை ஏற்படுத்தல் - த.ச.கோ. பிரிவு 316. யாழ் மாவட்டத்தில் 2012ம் ஆண்டு சிறுவர் நீதவான் நீதிமன்றம் உருவாக்கப்பட்டது. மேற்குறித்த சிறுவர்களுக்கு எதிராக இழைக்கப்படும் துஷ்பிரயோகங்களை குறித்த நீதிமன்றம் விசாரணை செய்து குற்றவாளிகளுக்கு தண் டனையும் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு நட்டஈடும் வழங்கிவருகின்றது.

பாடசாலைகள் மற்றும் கல்விநிறுவனங்களில் மாணவர்களுக்கு வழங்கப்படும் உடல் ரீதியான சரீர தண்டனைகளால் பல எதிர்மறையான விளைவுகள் மாணவர் மத்தியில் ஏற்படுவதை ஆய்வுகள் மூலம் உறுதி செய்த கல்வியமைச்சு 2005/17 ஆம் இலக்க சுற்று நிருபத்தில் சரீர ரீதியான தண்டனைகளை ஆசிரியாகள் வழங்க முடியாதெனக் கண்டிப்பாகக் கூறியுள்ளது. இலங்கையில் கல்வியமைச்சால் ஆரம்ப காலங்களில் வெளியிடப்பட்ட 1927 ஆம் ஆண்டு 36 ஆம் இலக்க சுற்று நிருபம் என்பவற்றின் உடல் ரீதியான தண்டனை பற்றி பின்வருமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. 1927ஆம் ஆண்டு சுற்றுநிருபத்தின் படி பிரம்பு, தடி என்பவற்றை பாடசாலை மேசை மீது கூட வைத்திருக்க முடியாது எனக் கூறப்பட்டுள்ளது. மேலும் ஆரம்ப கால சுற்று நிருபங்களில்சரீர தண்டனை வழங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால் குற்றத்தின் தன்மை, த்ண்டனை விதித்த முறை, வழங்கப்பட்ட அடிகளின் எண்ணிக்கை என்பன புத்தகம் ஒன்றில் பதியப்படல் வேண்டும்' எனக் கூறப்பட்டுள்ளது. அத்துடன் அடிக்க வேண் டிய கட்டாயம் ஏற்பட்டால் பிரம்பால் மாத்திரமே உள்ளங்கையில் மட்டும் அதுவும் நான்கு அடிகளுக்கு மேல் அடிக்க கூடாது எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்படி பிரம்படி கலாசாரம் 2005ஆம் 17ஆம் இலக்க "பாடசாலைகளில் ஒழுக்க விழுமியங்களைப் பாதுகாதல்" என்ற கல்வி அமைச்சின் சுற்று நிருபத்தின் மூலம் நீக்கப்பட்டுள்ளது. அதாவது மாணவர்களை ஒருபோதும் உடல்ரீதியாக தண்டிக்க முடியாது எனவும் தண்டனை வழங்கப்பட்டால் பின்வரும் சட்ட நடவடிக்கைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்படும் எனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

I. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் III அத்தியாயம் II வது வாசகம் மற்றும் XVI வது அத்தியாயம் 126வது பிரிவிற்கமைய அடிப்படை உரிமை மீறுமவழக்கு தாக்கல்செய்ய முடியும்.

### உடல் ரீதியான தண்டனைகள் தடுக்கப்பட வேண்டும்



II. 1995 இல.22 கொண்ட குற்றவியல் சட்டத்தின் மூலம (மறு சீரமைக்கப்பட்ட) சட்டதின் 3ஆவது வாசகம் மற்றும் பிரதான சாசனத்தின் 308(அ) பிரிவின் கீழ் பிள்ளைகளை மோசமான முறையில் தண்டனைக்கு உட்படுத்திய தவறின் கீழ் வழக்குத் தாக்கல்செய்ய முடியும்.

III. கல்வி அமைச்சின் பொறுப்பாளர்களினால் நடத்தப்படும் ஒழுக்காற்று விசாரணைகளில் உடல் ரீதியான தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டால் தாபன விதிக் கோவையின் II வது பிரிவின் கீழ் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்க முடியும். மாணவர்களுக்கு உடல் ரீதியாக தண்டனை வழங்குவதால் ஏற்படும் சாதக பாதகங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் முடிவுகள மூலம் அறிய வந்திருப்பது பிள்ளைகளிடையே ஒழுக்கப் பண்புகளை விதைப்பதற்கு கொடுக்கப்படும் தண்டனைகள் மூலம' எதிர்பார்த்த பயனை அடைய முடியவில்லை என்பதாகும். மாறாக மாணவர்களி டையே பின்வரும் உடல். உள, சமூக பாதக விளைவுகள்உருவாகுவது கண்டறியப்பட்டுள்ளது.

•உடல் காயங்கள் ஏற்படுதல்.(செவிப்பறை வெடித்தல், கண்டல் காயங்கள்)

•மாணவர்களிடையே ஆத்திரமடையும் பழக்கங்கள், வன்முறை நடத்தைகள் அதிகரித்தல்.

•மாணவர் - ஆசிரியர் - அதப்ர் இடையேயான நல்ல இடைவினைபாதிப்படையும்.

•பாடசாலை இடைவிலகல் அதிகரிப்பு

•சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கான சந்தர்ப்பம் அதிகரித்தமை

•பதகளிப்பு, மனஅழுத்தம், பின்னடைவுகள், மீச்செலவு நடத்தைகள் மாணவர்களிடையே ஏற் படுதல்.

•ஆண் ஆசிரியர்கள் சிலர் அடிப்பது என்றபோர்வையில் மாணவிகளிடத்தில் கெட்ட தொடுகைகளை ஏற்படுத்தல் உட்பட பாலியல்ரீதியான சுரண்டல் நிகழக்கூடிய வாய்ப்புக்கள் காணபபடுகின்றது. மாணவ்களிடையேபகிடிவதை கலாசாரம்உருவாகுதல்

•அதிகமாக தண் டனை வழங்கும் ஆசிரியர் சில சமயம் பாலியல் துஷ்பிரயோகத்தில் அல்லது பெற்றோருக்கு தெரிவிக்காமல் விடும் அபாய நிலை காணப்படுகின்றது.

உளவியல் ஆய்வுகளில் புதிதாக ஓர்நடத்தையை உருவாக்க மீள வலியுறுத்தல் நுட்பத்தை (Reinforcement) ஆய்வுகள் மூலம் நிரூபித்துள்ளனர். அவற்றுள் நேர் (positive) மீள வலியுறுத்தல், எதிர் (Negative) மீளவலியுறுத்தல் ஆகிய நுட்பங்கள் பயன்படுத்தப் படுகிறது. இந்நுட்பங்கள் மூலம் புதிதாக ஓர் நடத்தையை உருவாக்கலாம். அல்லது நடைமுறையில் உள்ளநடத்தைகளைமேலும் வலுவூட்டலாம். நேர் மீள் வலியுறுத்தலில் பரிசு, பாராட்டு, தட்டிக் கொடுத்தல், சலுகைகளை வழங்குதல, பதவிகளை வழங்குதல் ஊடாக நடத்தை ள் உருவாக்கப்படும். எதிர் மீள் வலியுறுத்தல் ஊடாக தேவையற்ற நடத்தைகளை நீக்க முடியும். எதிர் மீள்வலியுறுத்தலில் தண்டனைகள் வழங்குவதன் ஊடாகவோ சலுகைகள் பதவிகளை பறிப்பதன் ஊடாகவோ நடத்தைகள் விரும்பியவாறு மாற்றியமைக்கப்படலாம்.

எனினும் உளவியலாளர்களின் கருத்துப்படி நீண்டகால நடத்தை மாற்றததுக்கு தண்டனை ஆக்கபூர்வமான முறை அல்ல எனக் கூறுகின்றனர். தண்டனைகளை தவிர்ப்பதற்காக குறுகியகால நடத்தை மாறறத்தை காட்டும் மாணவர்கள், தண்டனை இல்லாத காலங்களில் குறித்த நடத்தைகளை மீளவெளிப்படுத்துவார்கள் என ஆய்வுகள் கூறுகின்றது.

தண்ட னைகளால் சில தவறான நடத்தைகள் வலுப்பெறும் வாய்ப்பும் காணப்படுகின்றது. அதாவது பிள்ளைகள் அநேகமாக பிறர் கவனத்தை தம் மீது திசை திரும்புவதற்காகவே தவறான காரியங்களை செய்வதுண்டு. அவ்வேளைபெற்றோர அல்லது ஆசிரியர் தண்டனை அளித்தால்அச்செயல்கள் மீளவலியுறுத்தப்படலாம்.

பிறர் கவனத்தை விரும்பும் மாணவன் தண்டனையைப் பெறுவதன் மூலம் மேலும் பிறர் கவனத்தைப் பெற்று, அவர்களிடம் இருந்து கணிப்பையும் பெறுவான். மேலும் தண்டனை வழங்கிய ஆசிரியர் கற்பிக்கும் பாடத்தையும் மாணவர்கள் வெறுக்க ஆரம்பித்து விடுவர்.

எனவே தண்டனையை விட வெகுமதியினாலேயே கற்றலிலும், நடத்தை மாற்றத்திலும் நல்ல விளைவுகளகிடைப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. உடல் ரீதியான தண்டனைகளுக்கு பதிலாக கீழ்க் குறிப்பிடப்படும் மாற்று நடவடிக்கைகளை பின்பற்ற முடியும் என கல்வி அமைச்சு 2005ஆம் ஆண்டு சுற்றறிக்கையில் அறிவுறுத்தியுள்ளது.

* பாடசாலைகளில் இணைப்பாட விதான செயற்பாடுகளை அதிகரிப்பதனூடாக தவறிழைக்கும் மாணவர்களை சிறிது காலம் இணைப்பாட விதான செயற்பாடுகளில் இடை நிறுத்தம் செய்தல்.

*தவறிழைக்கும் மாணவர் அனுபவிக்கும் வரப்பிரசாதங்களை வரையறுத்தல் அல்லது இடை நிறுத்தல். உ-ம்: மாணவதலைவர், வகுப்புதலைவர்போன்ற பதவிகளை இல்லாமல' செய்தல்.

*பாரிய ஒழுக்கத்திற்கு எதிராக செயற்பட்ட மாணவர்களுக்கு 2 வாரத்துக்கு மேற்படாத காலத்திற்கு வகுப்புத் தடை விதித்தல்.

* தொடர்ந்து பிரச்சினைகளை ஏற்படுத்தும் மாணவர்களை பாட சாலை ஒழுக்க குழு ஒன்று கூடி எடுக்கும் தீர்மானத்துக்கு அமைய வேறொரு பாடசாலைக்கு கல்வி கற்ற ஆண்டிற்கே மாற்றம் செய்தல்.

தொகுத்து நோக்குமிடத்து மனிதநேயம' என்பது அருகிவருகின்ற இன் றைய உலகில் மனித உரிமைகளை பாதுகாப்பதுநம்அனைவரினதும் கடமை ஆகும' .

எனவே பெற்றோர், ஆசிரியர்கள் சிறுவர்களை உடல் ரீதியாகத் தண்டிப்பதைத் தவிர்க்க வேண்டும். காலம் காலமாக பிள்ளைகளுக்கு அடித்து வளர்த்த எமது சமூகத்தில் சடுதியாகதண்டனைவழங்காது விடுதல் என்பது உடனடியாக மாற்றப்பட முடியாத விடயம் என்பது யதார்த்தம்.

எனவே இம்மாற்ற த்தை ஏற்படுத்துவதின் மிகப் பெரிய பொறுப்பு பெற் றோரிடமே உள்ளது. ஏனையில் வீட்டில் பெற் றோரால், அடித்து வளர்க்கப்படும் பிள்ளைகள் பாடசாலை சூழலிலும் அதையே பழக்க மாக கொள்ளும்.

வீட்டில் அன்புக்கு கட்டுப்பட்டு வளரும் குழந் தைகள் பாடசாலையிலும் ஆசிரியரின் அன்புக்கு கட்டுப்படும் என்பதில் ஐய மில்லை. அடுத்துமுன்பள்ளி ஆசிரியர்களும் முன்பள்ளி சூழலில் சரீர தண்டனை களை முற்றாக தவிர்க்க வேண்டும். இவ்வாறு வீட்டுசூழல், முன்பள்ளி சூழல் என்பவற்றில் உடல் ரீதி யாக தண்டனைகளை வழங் காது வளர்க்கப்படும் சிறுவர்களையே பாடசாலை ஆசிரியர்களாலும் சரீர ரீதியான தண்டனைகளை வழங்காது கற்பிக்க முடியும் என்பதே உண்மை.

"உடல் ரீதியான தண்டனை தவிர்ந்த மாற்றுவ்ழி தெரிந்திருக்காத ஆசிரியர் திறமை குன்றியவர்" என ஒரு வாதமும் காணப்படுகின்றது.

இக்கருத்தை ஏற்றுக் கொள்வதாக கல்வி அமைச்சின் 2005/17 இலக்க சுற்றறிக்கையிலும் "உடல் ரீதியான தண்டனைகளை வழங்காது ஒழுக்கத்தைப் பாதுகாக்க முடியாத பட்சத் தில் அதன் மூலம' சித்தரித்துக் காட்டப்படுவது ஆசிரியரின் திறமையற்ற தன்மையே ஆகும்" எனக் கூறப்பட்டுள்ளது.

எனவே இவ்வாதத்தை பொய்ப்பிப்பது இன்றைய நவீன திறமையுள்ள ஆசிரியர்களின்மிக முக்கிய சவால் என்னவென்றால் உடல் ரீதியான தண்டனைகளை வழங்காது ஒழுக்கத்தைப் பாதுகாக்க முடியும் என நிலைநாட்டுவதேயாகும்.

**க.ராஜீவன**
**BA(Hons) in Psychology, Dip in Counselling, பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர், பிரதேச செயலகம், பருத்தித்துறை.**

வாசகர்களிடமிருந்து கேள்விகள், கருத்துக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. தரமானவை துறை சார்ந்த நிபுணர்களின் பதில்களுடன் வலம்புரியில் வெளியாகும்.

**அனுப்பவேண்டிய முகவரி : சாந்திகம் ஊடகக்குழு,**
**8, 8/1 கற்பகவிநாயகர் ஒழுங்கை,**
**கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.**

மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும் கேள்விகளும் கருத்துக் களும் ஏற்றுக்கொள்ளப்படும்:

Email: psych@sltnet.lk
Face book: Shanthiham

# அமெரிக்காவின் முதல் பெண் ஜனாதிபதி

அமெரிக்கா, தனது முதல் பெண் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுத்து முடித்துவிட்டது. வாக்குப் பதிவு, கணக்கெடுப்பு, அதிகாரபூர்வ அறிவிப்பு போன்ற சம்பிரதாயங்கள் மட்டுமே எஞ்சியிருக்கின்றன. வேறு எவரையும்விட ஹிலாரி கிளிண்டன் இதை நன்றாகவே உணர்ந்திருக்கிறார். "எதிர்காலத்தில் உன்னாலும் ஜனாதிபதியாக முடியும் என, ஒரு தந்தை தன் பெண் குழந்தையிடம் இனி தைரியமாகச் சொல்லலாம்' என்று புன்னகைக்கிறார் ஹிலாரி. "பராக் ஒபாமாவின் ஆட்சியைக் காட்டிலும் உங்களுடைய ஆட்சி வேறுபட்டதாக இருக்குமா?' எனக் கேட்டதற்கு, அதிகம் அலட்டிக்கொள்ளாமல் சாதுர்யத்துடன் ஹிலாரி பதில் அளித்தார்... "ஒரு பெண், முதல்முறையாக ஜனாதிபதி பொறுப்பை ஏற்றால், ஒபாமாவிடம் இருந்து மட்டும் அல்ல, இதுவரை அமெரிக்காவை ஆண்ட அனைத்துப் பிரதமர்களிடம் இருந்தும் அவ்ருடைய ஆட்சி வேறுபட்டுத்தான் இருக்கும்!'

இது ஹிலாரி கிளிண்டனின் இரண்டாவது ஜனாதிபதி கனவு. முதல் கனவு 2008 ஆம் ஆண்டு டெமாக்ரடிக் பிரைமரி தேர்தலில் உதயமானது. "அமெரிக்கா, தனது முதல் பெண் ஜனாதிபதிக்குத் தயாராகிவிட்டது' என ஹிலாரி நம்பினார். அவரை எதிர்த்துப் போட்டியிட இலினாய்ஸில் இருந்து பராக் ஒபாமா முன்வந்த போது, ஹிலாரியின் வெற்றியை உறுதிசெய்து இறுதித் தீர்ப்பு எழுதி முடித்தது மீடியா. "வாக்குப்பதிவு, கணக்கெடுப்பு, அதிகாரபூர்வ அறிவிப்பு போன்ற சம்பிரதாயங்கள் மட்டுமே எஞ்சியிருக்கின்றன' என இப்போது போலவே அப்போதும் பலர் ஆரூடம் சொன்னார்கள். அவர்களுக்கு ஏற்றாற்போல் ஒபாமா அதிகம் அறியப்படாதவராக, அந்நியராக, நன்கொடை திரட்டத் தெரியாதவராக, மீடியா வெளிச்சத்தைத் திரட்டத் தெரியாதவராக, எல்லாவற்றுக்கும் மேலாக வெள்ளையாக இல்லாதவராக இருந்தார்.

"சொக்லேட் போய் இமேஜுடன் வலம் வந்த பில் கிளின்டனின் மனைவியை எதிர்த்து, பின்னணியே இல்லாமல் ஒபாமா நிற்பது பரிதாபமானது. இது சம பலம் கொண்ட இருவரிடையே நடத்தப்படும் போட்டியே அல்ல' எனச் சிலர் உச்சுக்கொட்டி அங்கலாய்த்தார்கள். ஆனால் பராக் ஒபாமா, ஹிலாரியை வென்று, ரிபப்ளிகன் போட்டியாளரான ஜோன் மெக்கெயினையும் தோற்கடித்து அமெரிக்காவின் ஜனாதிபதி ஆனார். "இது ஒரு வரலாற்றுத் தருணம்' என, மீடியா தனது தீர்ப்பைத் திருத்தி எழுதியது.

"ஒபாமா எப்படி வென்றார்?' என்பதைவிட, "ஹிலாரி ஏன் தோற்றார்?' என்பதுதான் இன்றைய சூழலுக்குப் பொருத்தமான கேள்வி. தலைவலி, காய்ச்சல் தொடங்கி சர்வதேசப் பிரச்சினைகள் வரை அனைத்துக்கும் ஒரே தீர்வு போர் மட்டுமே எனும் ஆத்மார்த்தமான நம்பிக்கையுடன் துணிச்சலாகச் செயற்பட்டவர் முந்தைய ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ். தன் ஆட்சிக்காலத்தில் உள்நாட்டுப் பொருளாதாரத்தையும் உலக அரங்கில் மிச்சம் இருந்த அமெரிக்காவுக்கான நல்ல பெயரையும் ஒரே சமயத்தில் மின்னலென சுத்தமாகத் துடைத்து அழித்து, புதிய சாதனை புரிந்தவர் அவர். எனவே, யார் வேண்டும் என்பதைவிட யார் வேண்டாம் என்பதை அமெரிக்கா தீர்மானமாக முடிவு செய்து இருந்தது. "ஒருபோதும் இன்னொரு புஷ்ஷை வெள்ளை மாளிகைக்குள் அனுமதித்துவிடக் கூடாது!'

"கவலைப்படாதீர்கள்... நான் நிச்சயம் அமெரிக்கா விரும்பும் நல்ல ஜனாதிபதியாக இருப்பேன்' என ஹில்லாரி நம்பிக்கையூட்டினார். வீசிய பெரும்புயலில் முதலில் அமெரிக்கர்கள் தொலைத்தது தங்கள் நம்பிக்கையைத்தான் என்பதால், அவர்களால் ஹிலாரியின் வார்த்தைகளைப் புனித வேதாகமமாக எடுத்துக்கொள்ள முடியவில்லை. புஷ்ஷின் ஆட்சியில் இருந்து தன்னுடையது எப்படி எல்லாம் வேறுபட்டிருக்கப்போகிறது என்பதை ஹிலாரியால் குறைந்தபட்சம் கோடிட்டுக்கூட காட்ட முடியவில்லை. தவிரவும், அவர் தன் கொள்கைகளையும் அரசியல் நிலைப்பாடுகளையும் வாரம் இரு முறை அல்லது மாதம் ஒரு முறை மாற்றிக் கொண்டிருந்தார். பொருளாதாரம், போர், சமூகநலத் திட்டங்கள் என எதிலும் ஆணித்தரமாக அவர் நிற்கவில்லை. மிக முக்கியமாக, ஒருபோதும் அவர் மக்களிடம் நெருங்கவும் இல்லை. தன்னை வெளிப்படுத்திக் கொள்ளவும் இல்லை.

மற்றொரு பக்கம், அமெரிக்கர்கள் அழுத்தமாகக் கேட்க விரும்பிய "மாற்றம்" எனும் மந்திரச்சொல்லை, ஒபாமா கூரை மேல் ஏறி நின்று சத்தம் போட்டு உச்சரித்தார். பெரிய பெரிய பதாகைகளில், பெரிய பெரிய எழுத்துருக்களில் அதை எழுதி வைத்தார். "உங்களை, உங்கள் தேசத்தை, உங்கள் வாழ்வை மாற்றுவேன்' என முழங்கினார். அமெரிக்கர்கள் தாவி வந்து அவரைத் தாங்கிப்பிடித்துக் கொண்டார்கள். சோர்ந்து கிடந்த அமெரிக்கா, ஒரு நீரூற்றுபோல் உற்சாகத்துடன் எழுந்து நின்றது. அந்த அலையில், ஒபாமாவின் பலவீனங்கள் அனைதும் நொடிப்பொழுதில் அடித்துச் செல்லப்பட்டன. அப்படியோர் அலையைத்தான் இப்போது ஹிலாரி கிளிண்டன் எதிர் பார்த்துக்



ஹிலாரி

கொண்டிருக்கிறார். ஒபாமாவிடம் இருந்து பெற்ற தோல்வி, ஒபாமாவிடம் இணைந்து பணியாற்றியபோது கிடைத்த வெற்றி இரண்டிலும் இருந்து பாடங்கள் கற்றுக்கொண்டு, இரண்டில் இருந்தும் தன் பலத்தைத் திரட்டிக்கொண்டு களம் இறங்கியிருக்கிறார் ஹிலாரி.

தான் ஒரு பெண் என்பதை பெருமிதத்துடன் நினைவுபடுத்த வேண்டிய அதே சமயம், தன் பலம் அது மட்டுமே அல்ல என்பதையும் அவ்வப்போது நினைவுபடுத்தி வருகிறார் ஹிலாரி. "மக்களுக்காகப் போராடிய நீண்ட வாழ்நாள் அனுபவம் எனக்கு இருக்கிறது. குழந்தைகளுக்காக, பெண்களுக்காக, குடும்பங்களுக்காக நான் போராடியிருக்கிறேன். எடுத்துக்கொண்ட விடயத்தை எப்படி வெற்றிகரமாகச் செய்து முடிப்பது என எனக்குத் தெரியும்' என்கிறார். "ஒசாமா பின்லேடன் குறித்து முடிவெடுக்கும் சிக்கலான தருணத்தில் ஒபாமா கலந்தாலோசித்த ஒருசிலரில் நானும் ஒருவர்' என்பதை அழுத்தமாகப் பலமுறை நினைவுபடுத்தியுள்ளார் ஹிலாரி. தன்னால் வலிமையான முடிவுகளை எடுக்க முடியும் என்பதை அமெரிக்கர்களின் மனதில் பதிய வைப்பதே ஹிலாரியின் நோக்கம்.

ஆனாலும் ஒபாமாவைப் போல் "மாற்றம்" என மீண்டும் பெரிதாக முழங்க முடியாது என்பது ஹிலாரிகுத் தெரியும். அதேசமயம் ஒபாமா முழுக்க முழுக்க நல்லாட்சியை மட்டுமே அளித்தார் என்றும் சொல்லி விட முடியாது. இந்த இக்கட்டை ஹிலாரி சாதுர்யமாகக் கடந்துசென்றார். 2016 ஆம் ஆண்டு நடக்கவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடிவெடுத்ததைத் தொடர்ந்து, ஒபாமா அரசிடம் இருந்து கூடுமான வரை தன்னை விலக்கி வைத்துக் கொண்டார். சரியான ஒரு தருணத்தில் ஒபாமாவை எதிர்க்கவும் செய்தார். அதற்கொரு நல்ல வாய்ப்பும் கிடைத்தது. புஷ்ஷுக்கு ஒரு அல் கொய்தா என்றால், ஒபாமாவுக்கு ஒரு ஐ.எஸ்.ஐ.எஸ். "சிரியாவிலும் ஈராக்கிலும ஐ.எஸ்.ஐ.எஸ். பலம் பெற்றிருபபதற்கு ஒபாமாவின் தவறான வெளிவிவகாரக் கொள்கையே காரணம்' என இடித்துக் காட்டினார் ஹிலாரி.

கடந்த முறையைப்போல் இல்லாமல் நிலையான அரசியல், சமூக மற்றும் பொருளாதாரக் கொள்கைகளை வகுத்துக்கொண்டார். அவற்றைச் சுருக்கமாக இப்படி வகைப்படுத்த முடியும்... "பெரும் பணக்காரர்களுக்கு அதிக வரி விதிக்க வேண்டும். சமூகநலத் திட்டங்களை அரசிடம் இருந்து பறித்து தனியார்களிடம் கொடுக்கக்கூடாது. தண்டனைகள் கடுமையாக்கப்பட்டால் குற்றம் குறையும் எனச் சொல்ல முடியாது. துப்பாக்கி உரிமம் கட்டுப்படுத்தப்பட வேண்டும். மிகுந்த வரவேற்பு பெற்றுள்ள ஒபாமா கேர் காப்பீட்டுத் திட்டம் விரிவாக்கப்பட வேண்டும். மாசுபாட்டைக் குறைத்து புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் பயன்படுத்த வேண்டும். கருத்தடை செய்துகொள்ள ஒரு பெண்ணுக்கு முழு உரிமை உண்டு. அதை யாரும் கட்டுப்படுத்த முடியாது. பெண்களையும் சிறுபான்மையினரையும் பணியில் அமர்த்திக்கொள்வது சட்டமாக்கப்பட வேண்டும். சுதந்திரச் சந்தை, ஆதரிக்கப்பட வேண்டும், விரிவாக்கபபட வேண்டும். மற்றப்படி, இராணுவ விரிவாக்கம் அவசியம் அற்றது!'

ஒபாமாவைப் போலவே இரண்டு கட்டங்களை ஹிலாரி கடந்து சென்றாக வேண்டும். ஜனாதிபதி தேர்தல், 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெறவுள்ளது. அதற்கு முன் டெமாக்ரடிக் பிரைமரி தேர்தலில் வெற்றிபெற்று, அந்தக் கட்சியின் அதிகாரபூர்வமான ஜனாதிபதி வேட்பாளராக அவர் நியமிக்கப்பட வேண்டும். இதில் எந்தச் சிக்கலும் இருக்கப்போவது இல்லை என்பதை இப்போதே தொடங்கிவிட்ட வாக்கெடுப்புகளும் மீடியா செய்திகளும் உறுதிசெய்கின்றன.

எதிர்த்தரப்பில் இருந்து ஹிலாரியுடன் போட்டிபோட அதிக சத்தத்தையும் தூசியையும் எழுப்பிக்கொண்டிருக்கிறார் ரிபப்ளிக் கட்சியின் டொனால்டு டிரம்ப். "சிந்திப்பதற்கும் பேசுவதற்கும் இடையில் எந்தவிதத் தொடர்பும் இருக்கவேண்டியது இல்லை' எனும் கொள்கையைத் தீவிரமாகப் பின்பற்றிவரும் டிரம்ப், நாளொரு உளறல்... பொழுதொரு பிளிறல் என, தேர்தல் களத்தைக் குப்பையாக்கிக்கொண்டிருக்கிறார். "அகதிகள் வரமுடியாதபடிக்கு அமெரிக்க எல்லைகளில் நீண்ட சுவர்களை அமைப்பேன். கருத்தடையா... கூடவே கூடாது. இராணுவம் பல மடங்கு அதிக பலம் பெறவேண்டும். துப்பாக்கி, அமெரிக்கர்களின் அடிப்படை உரிமை' ஆகியவை அவர் சமீபத்தில் உதிர்த்த அச்சடத்தகக முத்துக்கள். அச்சிட முடியாதவற்றின் பட்டியல் மிகவும் நீணடது. அவை இணையத்தில் ஜோக்குகளாக உலவிக்கொண்டிருக்கின்றன.

மற்றப்படி, ஹிலாரியின் மிகப் பெரிய சவால் ஹிலாரிதான். நான்கு முக்கிய பிரச்சினைகளில் அவர் சிக்கித் தவித்துக்கொண்டிருக்கிறார். ஒரு வேளை எதிர்வரும் தேர்தலில் அவர் தோற்கவேண்டி இருந்தால் அதற்கு இவையே காரணம் எனக்கொள்ளலாம்.

முதலாவது, ஈ-மெயில். அதிகாரபூர்வமான மெயில் ஐ.டி இருக்கும் போது, எதற்காக ஹிலாரி கிளிண்டன் தன் அலுவலகப் பரிவர்த்தனைகளுக்குத் தனிப்பட்ட மெயிலைப் பயன்படுத்தினார்? சில விடயங்கள் வெளியில் தெரியக் கூடாது என அவர் நினைத்தாரா? முந்தைய ஜோர்ஜ் புஷ் ஆட்சியின்போது இப்படித்தான் 22 மில்லியன் பிரத்தியேக ஈ-மெயில்களை வெள்ளை மாளிகை இரகசியமாகத் துடைத்து அழித்தது. இரண்டாவதாக, ஏன் ஹிலாரி எளிதில் அணுக முடியாதவராக இருக்கிறார்? ஒரு கேள்வி கேட்டால் "ஆம்', "இல்லை' எனப் போட்டு உடைக்காமல் ஏன் தயங்கிக் குழைகிறார்? எடுத்த முடிவில் ஏன் நிலையாக இருப்பதில்லை? மூன்றாவதாக, கணவரும் முன்னாள் ஜனாதிபதியுமான பில் கிளின்டன் நடத்திவரும் கிளின்டன் / பவுண்டேஷனுக்கு வந்து குவிந்த நன்கொடையில் உள்ள ஓட்டைகள். அவற்றை ஹிலாரி தன் பதவியைப் பயன்படுத்தி எப்படி அடைத்தார் என்பதையும் இந்த நன்கொடைகள் எப்படி, எதற்காக, எங்கு இருந்து வந்தன என்பதையும் அம்பலப்படுத்தி பல புலனாய்வுக் கட்டுரைகளும் புத்தகங்களும் வெளிவந்துவிட்டன.

நான்காவது, பெங்காஸி சம்பவம். 2012 ஆம் ஆண்டில் லிபியாவில் உள்ள அமெரிக்கத் தூதரகம் இஸ்லாமிய பயங்கரவாதிகளால் தாக்கப்பட்டபோது அமெரிக்கத் தூதர், அயல் துறை அதிகாரி, இரு சி.ஐ.ஏ. அதிகாரிகள் ஆகியோர் கொல்லப்பட்டனர். "கூடுதல் பாதுகாப்பு வேண்டும் என முன்பே தூதரகம் ஒபாமா அரசிடம் விண்ணப்பித்து இருந்தபோதும், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை' என்ற விமர்சனம் எழுந்தபோது, தவிர்க்க இயலாதபடி ஹிலாரி கிளிண்டன் அதற்குப் பொறுப்பேற்றுக் கொண்டார். இது பற்றிய அதிகாரபூர்வமான விசாரணை நடைபெற்றுவருகிறது. எதிர்க்கட்சி இதை மேலதிகத் தீவிரத்துடன் ஹிலாரிக்கு எதிராகத் திருப்பததான்போகிறது. ஆனால், ஹிலாரி ஆதரவாளர்கள் தெளிவாக இருக்கிறார்கள். "இன்னும் அவகாசம் இருக்கிறது, இந்தச் சர்ச்சைகள் எல்லாம் பறந்துபோய்விடும்' என்கிறார்கள் அவர்கள். மக்கள் ஆதரவு மட்டும் அல்ல, ஹிலாரியின் தேர்தல் நிதியும் பெருகிக்கொண்டிருக்கிறது என்பதை இவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். கிட்டத்தட்ட 30 மில்லியன் டொலர் இதுவரை நன்கொடையாகத் திரண்டிருக்கிறது. "நிறம் குணம் பணம் புகழ் அனைத்தும் எங்கள் பக்கம்தான்' என இப்போதே ஆரவாரிக்கத் தொடங்கிவிட்டார்கள் ஹிலாரி ஆதரவாளர்கள். இந்த நம்பிக்கையையும் உற்சாகத்தையும் அரசியல் ஆய்வாளரகள் அனைவரும் பகிர்ந்து கொள்கின்றனர் எனச் சொல்ல முடியாது. "ஆணா-பெண்ணா, கறுப்பா-வெளுப்பா என்பது முக்கியம் அல்ல. அமெரிக்கா என்றும் அமெரிக்காவாகவே இருக்கப்போகிறது' என இவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். "முதல் கறுப்பு ஜனாதிபதி தேர்ந்தெடுக்கபபட்டபோதும் இப்படித்தான் ஓர் அதிசய நீரூற்று கிளம்பியது. இப்போது முதல் பெண் ஜனாதிபதி என்றொரு நீரூற்று கிளம்பியிருக்கிறது. இதுவும் அடங்கியே தீரும்' என்கிறார்கள் அவர்கள் பார்க்கலாம்!

ஜூனியர் விகடன்



# ஓய்வு பெற்றது இந்தியாவின் அதிரடி



கங்குலி - சச்சின் ஓப்பன் பார்ட்னர்ஷிப் என்பது மாறி ஷேவாக்- சச்சின ஓப்பனிங் துடுப்பாட்டக் காரர்களாக களமிறங்கியபோது "யார் இவன் சச்சினைப் போலவே விளையாடுறான்" என ஆரம்பித்து, "யார் இவன் சச்சினையே தூக்கி சாப்புடுறானே" என்று பவுண்டரிகளாலும், சிக்ஸர்களாலும் தெறிக்கவிட்டவர் ஷேவாக். சச்சின் 90 ஓட்டங்களைத தொட்டதும் சென்சுரி அடிப்பதற்காக படபடப்பு ஆட்டம் ஆடும்போது அநாயசமாக சிக்சர்களைத் தூக்கிவிட்டு சதம், இரட்டைச்சதம், முச்சதம் என எதற்கும் எந்த டென்ஷனும் காட்டாமல் மிரட்டியவர். பூச்சியத்தில் இருந்தாலும் சரி, 99 ஓட்டங்களில் இருந்தாலும், 295 ஓட்டங்களில் இருந்தாலும் சரி அவரது பட், பந்தை பதம் பார்க்குமே தவிர பணியாது.

1999-ஆம் ஆண்டு பாகிஸதானுக்கு எதிராக முதல் ஒருநாள் போட்டியில் அறிமுகமானார ஷேவாக்.

ஆரம்பமே அபசகுணம் தான். ஒரு ஓட்டத்தில் அவுட் ஆனார். பந்து வீச்சு இன்னும சொதப்பல். 3 ஓவர்கள் வீசி, 35 ஓட்டங்கள் கொடுத்தார். அடுத்த ஒன்றரை ஆண்டுகள், அதாவது 20 மாதங்களுக்கு மீண்டும் இந்திய அணியில் ஆடும் வாய்ப்பே ஷேவாக்குக்கு கிடைக்கவில்லை. 2001 ஆம் ஆண்டு காலில் ஏற்பட்ட காயம் காரணமாக சச்சின் டெண்டுல்கர் இந்திய அணியில் இல்லை. நியூசிலாந்து, இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடருக்காக இந்திய அணி இலங்கை செல்கிறது. கங்குலியுடன் ஒப்பனிங் துடுப்பாட்டக்காரராக யாரை களமிறக்குவது என குழப்பம். யுவராஜ் சிங், அபய் குரசியா என யார் யாரையோ எல்லாம் ஒப்பனிங் துடுப்பாட்டககாரராக இறக்கிவிட்டு கடைசியாக, ஷேவாக்குக்கு வாய்ப்பை வழங்குகிறார் கங்குலி. நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் போட்டியில் முதலில் ஆடிய நியூசிலாந்து 260 ஓட்டங்கள் குவிக்கிறது. சுழற்பந்துக்கு சாதகமான, மிகவும் ஸ்லோவான மைதானம் இந்த ஸ்கோர் என்பது 350 ஓட்டங்களுக்கு நிகரானது. கங்குலியுடன் ஓப்பனிங் துடுப்பாட்டக்காரராக இறங்குகிறார் ஷேவாக். 69 பந்துகளில் 100 ஓட்டங்கள் அடித்து அந்த ஆட்டத்தில் மேட்ச் வின்னராக உயர்ந்து நின்றார் ஷேவாக். அதன்பிறகு இந்தியாவின் நிரந்தர ஓப்பனிங் துடுப்பாட்டக்காரர் ஷேவாக்தான்.

கிரிக்கெட் ஜென்டில்மேன்களின் விளையாட்டு என்பார்கள். ஆனால், கிரிக்கெட்டை ஜென்டில்மேன்களைத் தாண்டி எல்லோரும் ரசிக்கும் விளையாட்டாக மாற்றியவர்கள் ஒரு சிலரே. அதில் மிக முக்கியமானவர் வீரேந்திர ஷேவாக். கிரிக்கெட் டிப்ளமஸி என்று உண்டு. முதல் நாள் கோட் போட்டு டாஸ போட்டுவிட்டு, வெள்ளை உடையில் ஐந்து நாட்கள் எந்த சுவாரஸ்யமும் இல்லாமல் ஆடிக்கொண்டே இருப்பாரகள். ஆனால், "டெஸ்ட் போட்டியிலும் இவ்வளவு ஆக்ரோஷம் காட்ட முடியும், இப்படி பவுண்டரிகள் அடிக்க முடியும், இப்படி எல்லாம் ஆடி ஒருவரால 300 ஓட்டங்கள் குவிக்க முடியும்" என்று ஆச்சரியப்படுததியவர் ஷேவாக். ஆமாம். அவருக்கு கிரிக்கெட் டிப்ளமஸி தெரியாது.

டெஸ்ட் போட்டிகளில் மட்டும் இரண்டு முச்சதங்களும், மூன்று இரட்டைச் சதங்களும் விளாசியிருக்கும் அன் டிப்ளோமேட்டிக் துடுப்பாட்டக்காரர் ஷேவாக்.

இலங்கை சுற்றுப் பயணத்தின் போது அஜந்த மென்டிஸ் என்னும் புதிய சுழற்பந்து வீச்சாளரைப் பார்த்து இந்திய வீரர்கள் நடுங்கிக் கொண்டிருந்தனர். அப்போது மென்டிஸை துவம்சம் செய்தார் ஷேவாக். "சுழற்பந்து வீச்சாளர்களை நான் பந்துவீச்சாளர்களாகவே கருதுவதில்லை. ஸ்பின்னர் என்பவர் துடுப்பாட்டக்காரரால் தான் உருவாகிறார். துடுப்பாட்டககாரர் ஒரு பந்தை சுழல்வதற்கு முன்பே அடித்துவிட்டால் அப்புறம் ஏது சுழற்பந்து. பந்து சுழல்வதற்கு முன்பாகவே தூக்கி கிரவுண்டுக்கு வெளியே அடித்தால் ஒருவர் எனக்கு வாழ்நாள் முழுக்க ஸ்பின்னே போடமாட்டார்" என்று சொன்னார் ஷேவாக்.

"எனக்கு டெக்னிக்ஸ் மீது நம்பிக்கை கிடையாது. நான் பர்பாமென்ஸின் மீது நம்பிக்கை கொண்டவன். நீங்கள் ஸ்ட்ரோங்காக இருந்தால் போதும், டெக்னிக் இருந்தாலும் இல்லா விட்டாலும் உங்களால் சமாளிக்க முடியும். என் வாழ்க்கையில் நடந்தது அதுதான். பத்தாம் வகுப்பு படித்து முடித்த பின்னர் தான் நான் சீரியஸாக கிரிக்கெட் விளையாட பயிற்சியாளரிடம் சேர்ந்தேன். டெக்னிக்ஸை கற்றுக்கொள்ள எனக்குப் பொறுமையில்லை. பந்தை எப்படி போட்டாலும் வெள்ளைக் கயிற்றைத் தாண்டி அடிக்கவேண்டும் என்பதில் தான் என் கவனம் இருக்கும். சர்வதேச கிரிக்கெட் விளையாட வந்தபோதும் என் ஸ்டைலை நான் மாற்றிக் கொள்ள வில்லை. சில தொடர் களில் நான் சரியாக ஆடாத போது டெக்னிக்ஸ் வேண்டும் என்று சொல்வார்கள். அடுத்த போட்டியிலேயே சதம் அடித்து விட்டால் ஷேவாக்கின் ஸ்டைல் இதுதான் என்பார்கள். இங்கே எதற்குமே இதுதான் பார்முலா என்று இல்லை. பார்முலாக்களை நம்பினால் சில நேரங்களில் மட்டுமே வெற்றி கிடைக்கும்.

உங்கள் திறமையை நம்பினால் எப்போதுமே வெற்றிதான்" என்பது ஷேவாக்கின் சக்ஸஸ் சீக்ரெட்.

மிகச்சிறந்த என்டர்டெய்னர், அசைக்க முடியாத மேட்ச் வின்னர் ஷேவாக். அப்பர் கட் ஷாட்டை மிகச்சரியாக விளையாடியவர். "பிட்சில் ஒரு இடத்தில் ஷேவாக் நிலையாக நின்று ஆடவே மாட்டார். கால்கள் நகர்ந்து கொண்டே இருக்கும். இதனால் அவரது பின் காலில் ஒரு பெரிய கோதுமை மூட்டையைக் கட்டி விட்டுவிட்டு முன் காலைப் பயன்படுத்தி ஆடவைத்தோம்.

அதன்பிறகு ப்ரன்ட் பூட் மட்டும் அல்ல, பேக் பூட், அப்பர் கட், அக்ராஸ் தி லைன் என பந்துகளை நொறுக்கித்தள்ள ஆரம்பித்துவிட்டார் ஷேவாக்" என்கிறார் ஷேவாக்கின் பயிற்சியாளர் அமர்நாத் ஷர்மா.

கிரிக்கெட் மைதானத்தில் ஷேவாக் அடித்த முச்சதங்கள், இரட்டைச் சதங்களைத்தாண்டி அவரது முக்கியமான இன்னிங்ஸ்கள் பல இருக்கின்றன. தென்னாபிரிக்காவுக்கு எதிராக அறிமுகமான முதல் டெஸ்ட் போட்டியிலேயே, அதுவும் தென்னாபிரிக்காவின் ப்ளூம்பான்டின் மைதானத்தில் 105 ஓட்டங்கள் விறுவிறுவென அடித்து டெஸ்ட் போட்டியில் தனக்கான இடத்தைப் பதிவு செய்தார் ஷேவாக். டெஸ்ட் போட்டிகளில் அதிக சிக்ஸர்கள் விளாசிய இந்தியர் ஷேவாக்தான்.


**ஷேவாக் என்பவர் யார்?**

ஷேவாக் ஒரு கிரிக்கெட் ஜீனியஸ். அவரது ஆட்டத்தை அவரது ஸ்டைலில் இன்னொருவர் எந்த காலத்திலும் இனி ஆடவே முடியாது.

ஷேவாக் என்பது பெரும் கனவு. அது கொஞ் சம் சீக்கிரமே முடிந்து போனதில வருத்தமே!

**நன்றி:விகடன்**

# மீசைக்கார நண்பர்கள்




சிறுவயதில் 'எப்போ நமக்கு மீசை, தாடி வளரும்' ங்கிற நினைப்பில் கையில் ரேசருடன் சுற்றிக் கொண்டு இருப்போம். வளர்ந்த பின்பு ஷேவிங் செய்ய சோம்பேறித்தனம் வந்து 'எதுக்குதான் நமக்கு மீசை தாடியெல்லாம் முளைச்சுச்சோ' என அலுத்துக்கொள்வோம். எதுக்கு ஷேவிங் பண்ணிக் கிட்டு... தாடிதானே வளர்ந்துட்டுப் போகுதுனு விட்டாலும், 'எதுக்குடா தாடி வளர்த்து கேடிப்பைய மாதிரி சுத்திட்டு இருக்கே', 'என்னடா லவ் ஃபெய்லியரா' என அடுக்கடுக்கா கேள்வி கேட்டு திக்குமுக் காட வைப்பாங்க. அப்படி சின்னதா ஒரு முறுக்கு மீசை வெச்சு மெயின்டெய்ன் பண்றதே அவ்ளோ சிரமம், ஆனா, இந்த போட்டோவெல்லாம் பார்த்து நான் ஆடிப்போயிட்டேன் அசந்து போயிட்டேன்.

இவங்கள்லாம் யாருனா... மீசை மற்றும் தாடி வளர்ப்பவர்களுக்கு இடையே நடக்கும் உலக சம்பியன்ஷிப் போட்டியின் போட்டியாளர்கள். இதுபோன்ற சம்பியன்ஷிப் போட்டிகள் 1970 களில் இத்தாலியில் சிறிய அளவில் நடத்தப்பட்டு வந்தது. பின்னர் 1990ஆம் ஆண்டில் இருந்து பெரிய அளவில் ஏற்பாடு செய்து நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு நியூசிலாந்தில் உள்ள ஆஸ்திரியா எனும் ஊரில் நடைபெற்றது.

வளர்ச்சியைப் பொறுத்து 17 பிரிவுகளின் கீழ் இந்தப் போட்டி நடைபெறுகிறது. ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பிடித்தவர்களுக்குப் பரிசுகள வழங்கப்படுகின்றன. இந்த ஆண்டு நடைபெற்ற போட்டியில் 300இற்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்து கொண்டனர்.

என்னதான் இருந்தாலும் 23 ஆம் புலிகேசி மீசைக்கு இணையா வரலை.



ஷாபாவுடன் ஜேமி...

# பெண் ஆணாச்சு!

இங்கிலாந்தைச் சேர்ந்த ஜேமி ரெயின்ஸ் இப்போ உலக பிரபல்யம். 21 வயது இளைஞரான ஜேமி பிறப்பால் ஒரு பெண். என்ன பாஸ் குழப்பமா இருக்கா? மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் ஆண் தன்மை வரவழைக்கக்கூடிய 'டெஸ்டோஸ்டிரோன் சிகிச்சை' எடுத்துக்கொண்டு, இப்போது முழு ஆண் மகனாக உருமாறியிருக்கிறார்.

பெண் ஆணாக மாறுவதும், ஆண் பெண்ணாக மாறுவதும் இயல்பான ஒன்றுதான். ஆனால் மூன்று ஆண்டுக



ளாக இந்த மாற்றத்தை செல்ஃபிக்களாக ஜேமி எடுத்து வைத்திருப்பதுதான் ஸ்பெஷல்.

"எனக்கு நான்கு வயதான போதே என்னை ஓர் ஆண் பிள்ளையாகத் தான் உணர்ந்தேன். பருவமடைந்த பிறகு என் வயதுப் பெண்களுடன் பேசிப் பழகுவதில் கூச்சம் ஏற்பட்டது. அப்போதெல்லாம் கண்ணாடியில் பெண்ணாகத் தெரியும் என்னை நானே வெறுத்தேன். மூன்று வருடங்களுக்கு முன்பு 18 வயதான போது டெஸ்டோஸ்டிரோன் சிகிச்சை எடுத்துக் கொள்ள ஆரம்பித்தேன்.

இப்போது எனக்கு வயது 21. முழு ஆணாக மாறிவிட்டேன். என் உருவத்தைக் கண்ணாடியில் பார்க்கும் போது மகிழ்ச்சியாக உணர்கிறேன். எனக்கு இந்த விடயத்தில் உறுதுணையாக இருந்தவர் தோழி ஷாபா!" என்கிறார்.

சனல் 4 தொலைக்காட்சியின் 'கேர்ள்ஸ் டு மென்' எனும் நிகழ்ச்சியிலும் ஜேமி ஆணாக மாறிய் அனுபவங்கள், செல்ஃபிக்களோடு ஒளிபரப்பாகவுள்ளது!

# வெள்ளைப் பூ...

சிறுகதை

அமாவாசை வந்து 5-6 நாட்கள் இருக்கும் போலை, பிறைச்சந்திரன் ஒளியிழந்து போய்க் கொண்டிருந்தான். இருளும் ஒளியும் கலந்த ஒரு மைம்மல் வெளிச்சம். சித்திரை மாதத்து இளவேனிற்காலம். தென்றல் சுகமாக உடலை வருடிக்கொண்டு போகின்றது. பஸ்தரிப்பிடத்தில் நின்று கொண்டிருந்தேன். பஸ் வருமா வராதா? பஸ் வராது போனால் மேற்கொண்டு என்ன செய்யலாம் என்ற கவலையுடன் வரவேற்பு விழா ஒழுங்கு செய்தவர்களை மனதுக்குள் சபித்தபடி நான் நிற்கின்றேன்.

சட்டைப் பையில் இருந்த அலைபேசியை எடுத்து இயக்கிப் பார்க்க 8.10 காட்டியது. மணிக்கூடு அணியாதிருந்தாலும் நேரத்தை முகாமைத்துவம் பண்ணிக்கொண்டிருப்பவர்கள் நாங்கள்தான் என ஒருநாள் கதைத்துக் கொண்டிருக்கும் போது நண்பர் சத்தியமூர்த்தி கூறியது ஞாபகத்துக்கு வந்தது. இனி பஸ் வராது போலை, என்ன செய்யலாம் என கவலைப்பட்டுக் கொண்டிருந்த வேளை.

கடைசி பஸ்ஸும் போய்விட்டதே. நீங்கள் பஸ்ஸுக்கா நிற்கிறீர்கள்? எவ்விடம் போகவேண்டும் என கேட்டவாறு ஒருபெண் தோன்றினாள்.

ஓம் ஓம் வீட்டை போக வேண்டும்.பஸ்போய்விட்டுதுபோலஅதுதான்.

கடைசி பஸ்ஸையும் தவறவிட்ட ஒருவர் எவ்வாறு போய் சேர்வது என்றாள். பரிவுகாட்டுகிறாளா? அல்லது பரிகசிக்கின்றாளா? ஒன்றும் புரியவில்லை எனக்கு.

இல்லை, இல்லை அப்படியொன்றும் இல்லை. வீட்டை போனால் ஓய்வாகவும் ஆறுதலாகவும் இருக்கும். அதுதான்....

நீங்கள் செல்ல வேண்டிய இடத்தை இன்னமும் கூறவில்லையே.

முல்லை. நகருக்குப் போகவேண்டும். நீங்களும் பஸ்ஸைத் தவறவிட்டவரா? இல்லை இல்லை. அருகில் தான் எனது வீடு. இந்த நேரத்தில இவ்விடத்தில் உங்களைக் கண்டதும் விடயம் அறியும் ஆவலிலும் ஏதாவது வகையில் உதவலாம் என்றுதான்...

எந்த வகையில் உதவமுடியும் எனக்கு? யாருடைய உதவியென்றாலும் தேவைப்படும் நிலைதான் இப்போதைய எந்நிலை. உங்களுக்கு ஆட்சேபனை இல்லாதிருந்தால், இரவு எங்களுடன் தங்கிச் செல்லலாம். எனது குரங்கு மனம் தாவிப் பாயத்தொடங்கியது. இவள்யார்? என்ன நோக்கில் உதவ முன்வருகிறாள். அழகாய்இருக்கிறாள். இளமையாகவும் இருக்கிறாள். இவளோடு போவதா என யோசிக்கத் தொடங்கியது.

அதிக நேரம் இவ்விடத்தில் நிற்பது ஆபத்து. இராணுவ ரோந்து அணிவரும். அதிகம்யோசிக்கவேண்டாம். பயமும் வேண்டாம். என்னால் ஆன உதவிகளைச் செய்வேன் வாருங்கள்.

வேறு வழி இருப்பதாக எனக்கும் விளங்கவில்லை. இவ்விடம் நிற்கக் கூடாது என்பது மட்டும் புரிந்தது. என்னவாயினும் நல்லதாய் நடக்கட்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டு அவளுடன் சென்றேன்.


பாதீனியமுள்ளொன்றுஎன்னைப் பதம் பார்த்தது. அவள் கையைப் பிடித்து மெள்ள மெள்ள அசைத்து முட்களிலிருந்து விடுவித்தாள். இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. பாதீனியத்தின் முள் தூண்டில் முள் போல ஒருவழிப் பாதைதான். தைத்தால் கழட்டுவது பெரும் சிரமம்.முள்ளுச் செடியின் கிளையை முதலில் பிய்த்தெடுத்தாள்.முள்ளின் வளைவுகளுக்கேற்ப சரித்துத் திருப்பி,வலி இல்லாதவாறு காயத்திலிருந்து எடுத்த லாவகம், முன்பின் தெரியாத ஒருவர் உதவி செய்ய வந்தால்,அவர் பெண் என்பதால் விபரீத எண்ணங்களை ஏன் வளர்க்கின்றாய் என மனதைக் கடிந்து கொண்டேன்.

சிலரைக் கண்டதும் மகிழ்வு தோன்றும். மனம்விட்டுப்பேசவும் விருப்பம் வரும். சரிசரி எழுந்து வாருங்கள். அம்மா தனித்திருப்பார் என்று கூறியவாறு முன்னே சென்றாள்.

யாரது,மாதவியா? ஏனம்மா இவ்வளவு நேரம்.கட்டிலில் சாய்ந்திருந்தபடி கைத்தடியால் தட்டிக்கொண்டு கேட்டாள் அன்னம். ஓமம்மா நான்தான்,

யாரது கூட வந்திருப்பது? என்றாள். எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. கண் பார்வையற்று இருப்பவள் எப்படி அறிந்து கொண்டாள்.

யாருமில்லை அம்மா. நான் மட்டும் தான் வந்தேன் என்றாள் என்னைப்பார்த்துக் கண்களைச் சிமிட்டியவாறு.



கண்ணை மூடிக் கொண்டிருந்தால் பூனைக்குத்தான் உலகம் இருண்டுவிட்டதென நினைக்கத் தோன்றும்.என்ரை கண்பார்வையைத்தான் கொள்ளேலை போவான்கள் குண்டடிச்சுப் பறிக்க முடிந்தது.ஆனால் உணர்வுகளை அல்ல என்று கூறிக்கொண்டு **தம்பி,நீர் அந்தக் கதிரையை இழுத்துப் போட்டுக் ,கொண்டு இரும் என்றாளே.** நான் நிலை குலைந்து போனேன்.பிள்ளை கால்முகம் கழுவி சாமி விளக்கேற்றிவிட்டு வாடி தம்பிக்கு ஒரு தேநீர் கலந்து கொடு.ஒருவர் வந்திருப்பதை உணர்ந்து கொண்டது சரி,அவர் ஆண் என எவ்வாறு அறிந்தாள்.மூத்தவர்கள் எவ்வளவு ஆற்றலுடன் உள்ளார்கள்.

எனக்கொண்டும் இப்ப அவசரமில்லை.அவர் ஆறுதலாக வரட்டும்.

தம்பி,என்ன பஸ்ஸைத் தவற விட்டுட்டீரா,இப்படித்தான் உவங்கள் ஒரு நேரக்கணக்கில்லாமல் தங்கள் தங்கள் வசதிக்கேற்ற மாதிரிப் போவான்கள். வீட்டிலை தேடமாட்டினமோ, வீட்டை ஒருக்கா அறிவியுமன் தம்பி.

ஓமம்மா யார் இருக்கினை, ஆருக்கு அறிவிக்க.

ஏன் தம்பி,மனைவி, பிள்ளையள் என ஒருவரும் இல்லையோ, தனியாளாகவா இருக்கிறீர்.

எல்லாத்தோடும் எல்லாரோடும் தான் நானும் சீவிச்சனான்.இந்தக் கொடிய யுத்தம் என்னையும் ஒரு மகளையும் மட்டும் விட்டுட்டு எல்லாத்தையும் துடைச்சு எடுத்துக் கொண்டுட்டுதம்மா.

தட்டித்தடவி,எனது கையைப்பிடித்துக் கொண்டு தம்பி எல்லாருக்கும் தான் பாதிப்பாய் போய்ச்சு. கவலைப் படாதை. யாரும் நினைச்சிருக்கேல்லை.இப்படி நடந்து போச்சு.மண் கொள்ளைக்காறன்கள் ஒண்டு சேர்ந்து போட்ட நாடகமடா தம்பி.கொள்ளைக்காரன் நாடகத்திலை, தர்மம், ஞாயம், அறம் எண்டு ஏதேனும் இருக்குமோ.பொறு தம்பி பொறு.அது சரி அப்ப மகன் வீட்டிலை தனியாவோ இருப்பான்.கைகளைப் பிடித்தபடி கதைக்கக்,கதைக்க எனக்கு ஆறுதலாக இருந்தது.

இல்லையம்மா,அவனைப் பாடசாலை விடுதியில் தங்கவைத்துப் படிப்பிக்கின்றன்.

ஓம் தம்பி என்ரை பேரனும் சரியான கெட்டிக்காரன். படிப்பிக்கத்தான் வசதியில்லை. தகப்பனும் இறந்து போனார்.வாத்திமார் சொன்னவை தங்கட செலவிலை படிப்பிக்கிறமெண்டு. உவயளை நம்பி விட முடியுமே.அப்பதான் அந்தப்புண்ணியவான் வந்தார்.அவர் பிள்ளையைக் கூட்டிச் சென்று காப்பகம் ஒன்றிலை விட்டிருக்கிறார்.

அம்மாவுக்கு கதைக்கிறதுக்கு இண்டைக்கு நல்ல ஆள் கிடைச்சிருக்குப் போலை என்று கூறியவாறு மாதவி வந்தாள் தேநீருடன்.குளித்துப் புத்தம் புதுமலராக பொட்டிட்டுப் பூவைத்து வந்ததும் நான் ஒருகணம் தடுமாறிப் போனேன்.

என்ன அப்பிடிப் பார்க்கிறீர்கள். அவர் இருக்கும்போது,எ தான் இறந்தாலும் விதவைக் கோலம் பூணவேண்டாமெனச் சத்தியம் வாங்கினவர். வேடிக்கையாகத் தான் என்று நானும் நினைத்திருந்தேன்.இப்படி ஆகும் என யாரும் எண்ணியிருக்கவில்லை கண்கலங்கியவாறு. ஒருவகையில் இக்கோலம் ஒரு வேலியாகத்தான் இருக்கின்றது.கண்டபடி யாரும் உள்நுழைய முடியாத பாதுகாப்பு அரண் தான். விட்டுப் பிரிய இருப்பதறிந்து தான் அரண் அமைத்துவிட்டுச் சென்றார் போலை.

சமூகம் ஏற்றுக்கொண்டதா? உங்களை வசவு,வசவென்று வசவியிருப்பார்களே,

சமூகம் என்றால் யார்?நீங்கள் நான்,அம்மா இன்னும் பலர் தான். ஒவ்வொரு வீட்டிலும் இழவென்றால் எந்த வீட்டில் போய் அழுவது? ஆரம்பத்தில் கஷ்டமாக இருந்தது உண்மைதான்.இப்ப இது ஒரு பாதுகாப்பு ஏற்பாடாகிவிட்டது.

மாதவி,இரவுச் சாப்பாட்டுக்கு ஏதாவது ஒழுங்குசெய்யன் பிள்ளை. எனக்கென ஒன்றும் தயார் பண்ண வேண்டாம்.வயிறு குழப்பமாக இருக்கிறது.

வரவேற்பு விருந்துபசாரத்தில் நன்றாக வெட்டியிருப்பீர்களாயிருந்தாலும் எமது வீட்டுக்கு அழைத்து வந்த விருந்தாளியை உபசரிக்காமல் விடுமளவிற்கு நாங்கள் ஏழைகளாகவில்லை இன்னமும்.

அப்படி யார் கூறியது?எனக்குப் பசியில்லை என்றதுக்கு இவ்வளவோ?

சரி,சரி நீ போய் ஏதாவது ஒழுங்குபார் பிள்ளை.அப்ப தம்பி இப்படியே இவளைப் போல நீங்களும் காலம் முழுதும் தனியாக இருக்கப் போறீங்களே.எது எது எப்ப எப்ப செய்யவேண்டுமோ அப்ப செய்திட வேண்டும் தம்பி.

அதைப்பற்றி எண்ணிப் பார்க்கும் மனநிலையில் நான் இல்லை அம்மா, பிள்ளையைப் படிப்பித்து பெரியவனாக்கி தாயின்ரை கனவை நனவாக்க வேணும்.அதுதான் என் விருப்பம், இலட்சியம் எல்லாம்.

தம்பி, வயசு அனுபவத்தைக் கொண்டு மூத்தோர் கூறும் வார்த்தைகளுக்கு நிறைய அர்த்தம் இருக்குதுதம்பி.யோசியும்நன்றாகயோசியும்.

கேட்பதற்கு ஆள்கிடைத்துவிட்டால் அம்மா பேசுவதை நிறுத்த மாட்டார்.வாருங்கள் எல்லோரும் சாப்பிடுவம்.காலமை நேரத்துக்கு வேலைக்குப் போகாட்டி,முதலாளி நாள் முழுவதும் சீறிவிழுவார்.

ஓமடிபிள்ளை,நீயும் சாப்பிடு, தம்பி இரவிலை வெறுவயிற்றுடன் படுக்கக் கூடாது.கொஞ்சமென்றாலும் சாப்பிட வாரும் என்றாள் அன்னம்மா.

மறுநாள் காலை வீட்டுவேலைகள் எல்லாம் முடித்து அன்னைக்குச் சாப்பாடு, மருந்து எல்லாம் எடுத்து வைத்துவிட்டு தானும் தயாராகி வேலைக்குப் புறப்பட்டுச் செல்லும் மாதவியுடன் நானும் புறப்பட்டேன்.தம்பி,நான் கூறியதை மறந்திடாதையும்.யோசியும் என்றாள் அன்னை.

என்ன? ஏன் தனியே இருக்கிறீர்கள்,கலியாணம் செய்து கொள்ளுங்கள் என அம்மா கூறினவாவோ? வழியில் மாதவி கேட்டாள்.

எவ்வாறு இப்படியெல்லாம் சரியாக ஊகிக்க முடிகின்றது உங்களால்.

இங்கு தினம் தினம் வீட்டில் ஒரே நச்சரிப்புத்தான்.சிலவேளைகளில் சண்டையும் பிடிப்பார். சிலவேளைகளில் அழுது புலம்புவார்.கடவுளைக் கண்டபடி பேசுவார்.

அவருடைய நிலையிலிருந்து பார்த்தால் அவர் கூறுவதும் சரிதான். என்ன சரிதான், மனமொன்றி வாழ்ந்தவாழ்வை, வாழ்க்கைத்துணையை மறந்து இன்னொருவருடன் எப்படி வாழ்வதென்று அம்மாவுக்குப் புரியமாட்டேன் என்குதே. எனக்கு முடியாது என்றாள்.

ஏன், ஆவேசப்படுகிறீர்கள். அம்மா கூறுவதில் உள்ள உண்மையை ஆறுதலாக யோசித்துப் பாருங்கள். அவருடைய பக்கத்து நியாயத்தை யோசிப்பது பிழை அல்லவே. வாழ்க்கையை நடைமுறைச் சாத்தியமாய் எடுக்கப் பழகவேண்டும்.

சரி,சரி நானும் நடைமுறைச் சாத்தியமாகவே கேட்கிறேன். என்னை ஏற்றுக் கொள்ள நீங்கள் தயாரா? நெற்றிப் பொட்டில் அடி விழுந்த மாதிரி உணர்விழந்து நின்றேன்.

இதைக் கூறுவது எளிது. செய்வது கடினம்.நீங்கள் தயாரில்லாத போது மற்றவர்களுக்கு ஆலோசனை கூற முயலக்கூடாது.

இல்லை மாதவி. இதுபற்றி நான் யோசித்துப் பார்க்கவே இல்லை. வீட்டிலை உங்கள் அம்மா யோசியும் தம்பி என்கிறார். நீங்கள் இப்படிக் கேட்கிறீர்கள்.எனது அமைதியை ஏன் நீங்கள் பின்வாங்கலாகப் பார்க்கிறீர்கள்?திடீரென நீங்கள் கேட்டதும்,குழம்பிப் போனன் நான்.கொஞ்சம் யோசிக்க வேண்டும்.கொஞ்சம் கால அவகாசம் வேண்டும்.

இது தான் ஆலோசனை கூறுபவர்களின் நிலைமை. மற்றவர்களுக்குப் புத்தி கூறுவார்கள். நீங்கள் தயாரா என்றால் யோசிக்க வேண்டும், கால அவகாசம் வேண்டும் என்பார்கள். ஏசுகிறாளோ அல்லது ஏளனம் செய்கிறாளோ என புரியாமல் கூடவே நடந்தேன்.

என்ன அமைதியாகி விட்டீர்கள்? மறுமொழி கூற முடியவில்லை அல்லவா. இனிமேல் ஆலோசனைகள் கூறுவதை விட்டுவிடுங்கள். கோபமாகக் கதைப்பதாகக் கொள்ள வேண்டாம். அத்தனையும் பட்டுவிட்டோம். அமைதியாக வாழ்ந்த வாழ்வு யுத்த அரக்கனால் அழிக்கப்பட்டது. அழகாய் நான் இருப்பதால் அமைதியாக வாழ முடியாமல் போய்விட்டது. அநாதரவு நிலை என்பதன் அர்த்தம் இப்போ நல்லா எனக்குப் புரிகின்றது. நான் பெண் என்பதால் பிள்ளையும் இருப்பதால் தனியே இருக்கக்கூடாதென்கிறீர்கள். துணை வேண்டும் என்கிறீர்கள். ஆலோசனை கூறுகிறீர்கள். நீங்களும் மனைவியை அநியாயமாக இழந்துவிட்டு தனியே தானே வாழ்கிறீர்கள். நீங்கள் ஆண். உங்களால் முடியும் என்றால்? பெண் என்பதால் என்னால் முடியாதென்று ஒரு விதி எழுதிவைத்திருக்கிறதா? அமைதியாகத்தான் பேசினாள். ஆணித்தரமான கருத்துக்கள்.

ஆசுவாசப்படுத்த எண்ணி அவளது கைகளைப் பிடித்தேன். கொஞ்சம் அடங்கினாள். பிறகு இறுக்கிக் கொண்டாள். கைகள் இணைந்து கொண்டன, கருத்துகளும்தான். நல்லனவே எண்ணி வாழின் நல்லனவே நடக்கும் என நம்பிக் கொண்டு நான் அலுவலகம் நோக்கியும் அவள் வேலை செய்யும் இடம் நோக்கியும் பயணிக்கின்றோம்.

**மயூரதன்**
**யாழ்ப்பாணம்.**

# காலத்தால் அழியாத கானங்கள் ...

பாடல்: சந்திரோதயம் ஒரு பெண்ணானதோ
படம்: சந்திரோதயம்
பாடலாசிரியர்: வாலி
இசை: எம். எஸ். விஸ்வநாதன்




சந்திரோதயம் ஒரு பெண்ணானதோ செந்தாமரை இரு கண்ணானதோ

சந்திரோதயம் ஒரு பெண்ணானதோ செந்தாமரை இரு கண்ணானதோ பொன்னோவியம் என்று பேரானதோ என் வாசல் வழியாக வலம் வந்ததோ

சந்திரோதயம் ஒரு பெண்ணானதோ செந்தாமரை இரு கண்ணானதோ குளிர் காற்று கிள்ளாத மலரல்லவோ கிளி வந்து கொத்தாத கனியல்லவோ

குளிர் காற்று கிள்ளாத மலரல்லவோ கிளி வந்து கொத்தாத கனியல்லவோ

நிழல் மேகம் தழுவாத நிலவல்லவோ நெஞ்சோடு நீ சேர்த்த பொருளல்லவோ

எந்நாளும் பிரியாத உறவல்லவோ இளம் சூரியன் உந்தன் வடிவானதோ செவ்வானமே உந்தன் நிறமானதோ

பொன் மாளிகை உந்தன் மனமானதோ என் காதல் உயிர் வாழ இடம் தந்ததோ

இளம் சூரியன் உந்தன் வடிவானதோ செவ்வானமே உந்தன் நிறமானதோ

ஆஆஆஆஆ ஆஆஆ ஆஆஆஆ

முத்தாரம் சிரிக்கின்ற சிரிப்ப ல்லவோ முழு நெஞ்சைத் தொடு கின்ற நெருப்பல்லவோ

முத்தாரம் சிரிக்கின்ற சிரிப்பல்லவோ முழு நெஞ்சைத் தொடுகின்ற நெருப்பல்லவோ

சங்கீதம் பொழிகின்ற மொழியல்லவோ சந்தோஷம் வருகின்ற வழியல்லவோ என் கோயில் குடி கெ?ண்ட சிலையல்லவோ

சந்திரோதயம் ஒரு பெண்ணானதோ செந்தாமரை இரு கண்ணானதோ

அலையோடு பிறவாத கடல் இல்லையே நிழலோடு நடக்காத உடல் இல்லையே துடிக்காத இமையோடு விழியில்லையே துணையோடு சேராத இனமில்லையேஎன் மேனி உனதன்றி எனதில்லையே

இதழோடு இதழ் வைத்து இமை மூடவோ இருக்கின்ற சுகம் வாங்கத் தடை போடவோ

மடி மீது தலை வைத்து இளைப்பாறவோ முகத்தோடு முகம் வைத்து முத்தாடவோ

கண் ஜாடை கவி செ?ல்ல இசை பாடவோ இளம் சூரியன் உந்தன் வடிவானதோ செவ்வானமே உந்தன் நிறமானதோ

சந்திரோதயம் ஒரு பெண்ணானதோ செந்தாமரை இரு கண்ணானதோ

ஆஆஆஆ ஆஆஆஆஆ ஆஆஆஆ ஆஆஆஆஆ

இப்பாடலை
**SMS** மூலம் விரும்பிக் கேட்டவர்கள்:
கி.நவரத்தினராசா (தெல்லிப்பழை), லீலா செல்வவடிவேல் இணுவில், சாருகன், நிருஜன், அனுஷா, இந்துமதி, பிரியா, ஸ்ருப்திகா, இராம கிருஷ்ணன்- கொழும்பு, கே. கேதீஸ்வரன்- கோண்டாவில், சி.லக்சிகா- கொக்குவில், விஜயன்.மதியவன் குடும்பம், பவானந்தன்- மல்லாகம், சுதன்- கொக்குவில், செல்வகுண சந்திரன்- பருத்தித்துறை, எஸ். சஜீதன்- இடைக்குறிச்சி, காதலனுக்காக - எஸ். அஜந்தா- உருத்திரபுரம், கே. நிதர்ஷனா- தம்பளை, அச்சுவேலி.


*அன்பு வாசகர்களே!*
காலத்தால் அழியாத கானம் பகுதிக்கு நீங்களும் பாடல்களை விரும்பிக் கேட்கலாம். உங்கள் பெயர், முகவரியுடன் விரும்பிக் கேட்பவர்கள் பெயர், முகவரியையும்
**021 567 1543**
எனும் இலக்கத்திற்கு **SMS** செய்யுங்கள்.

# ஈழத்து சினிமா

## மூன்றாவது கை -குறும்பட விமர்சனம்

ஆசிரியராகக் கடமையாற்றும் றெஜிஸ்“நிர்க்கதியோ?” என்ற குறும்படத்தின் மூலம் படைப்புலகத்திற்கு அறிமுகமாகியவர். ஆசிரியர் தொழிலில் இருந்து கொண்டிருக்கும்போதும் சமுதாயத்திற்கு தேவையான அறம் சார்ந்த போதனைகளையும் தற்சமயம் சமூகத்துக்குத் தேவையான சீர்திருத்தக் கருத்துக்களையும் ஒளிப்படம் மூலம் விதைக்க குறும்படம் எனும் ஊடகத்தினை கையில் எடுத்திருக்கின்றார்.

மாற்றுத்திறனாளிகள் சமூகத்தில் பெற்றுக்கொள்ளும் இடையூறுகள், அவமானங்கள் என்பவற்றை வெளிச்சம் பிடித்துக்காட்டி அதன்பின் இருக்கும் வலிகளையும் பேசி அவர்களுக்குத் தேவையான தன்னம்பிக்கையை வளர்க்கும் விதமாக வந்திருக்கும் குறும்படம் மூன்றாவது கை. வாய்பேசவும் செவிமடுக்கவும் முடியாத மாற்றுத்திறனாளி ஒருவர் தனது வாழ்க்கையைத் திரும்பிப் பார்க்கும் நிகழ்வுகளாக படம் ஆரம்பிகின்றது. அவரது சிறுவயது ஞாபகங்கள் காட்சிப்படிமமாகச் சொல்லப்பட ஆரம்பிக்கின்றன. கடையில் சென்று படிப்பதற்குத் தேவையான பொருட்களை கொள்வனவு செய்வதிலிருந்து வீதிகளைக் கடப்பது வரையான அன்றாட இயல்பு வாழ்க்கைச் சம்பவங்களில் எதிர்கொள்ளும் இடர்பாடுகள் படிப்படியாக சொல்லப்படுகின்றன. மிகச்சிறிய வயதில் சேர்ந்து சக நண்பர்களால் விளையாடும்போது அவர்களிடம் இருந்து புறக்கணிக்கப்பட்டு அவமானப்படுத்தப்பட நேர்கின்றது. இவை



மூன்றாவது கை

மெல்லிய சோகமான இசையுடன் அற்புதமாகச் சொல்லப்படுகின்றன. சக மாணவர்கள் பாட்டுப்பாடி விளையாடும்போது அம் மனவெழுச்சியில் தானும் சொல்லமுடியுமான வார்த்தைகளை பாட்டுப்பாடுவதுபோல உச்சரிக்க அதனைக் கேட்டு சக மாணவர்கள் கேலியாக சிரித்து அவமானப்படுத்த அவ்விளையாட்டில் இருந்து தொய்ந்த முகத்துடன் விலகிச்செல்லும்போது பின்னணியில் ஒலிக்கும் இசை இன்னும் வலிமையான நெகிழ்ச்சியான தருணங்களை பார்வையாளர்களிடம் ஆழமாக விதைகின்றது. இவ்வாறான அவமானப்படுத்தல்களோடு அவர் வளர்கின்றார். கடுமையான நெருக்கமான சூழ்நிலையில் தனக்கு ஏற்பட்ட உடல் ஊனத்தை நினைந்து துன்பமடைகின்றார். இப்படியான தாழ்வுச்சிக்கலில் சிக்கித்தவிக்கும்போது அவருக்கு ஆசிரியர் வடிவத்தில் மீட்புக்கான தருணம் வருகின்றது.

அவரை சந்திக்கும் ஆசிரியர் நம்பிக்கையான இயல்பான பேச்சைக்கொடுத்து அதிலிருந்து மீள்வதற்கும் வாழ்வினை இயல்பாக கொண்டு செல்வதற்குமான வழிகளை மெல்லிய ஒளிக்கீற்றாக காட்ட விளைகின்றார். மெலிதான நம்பிக்கை வேர்கள் முகத்தில் ஆழமாகப்படர ஆரம்பிக்கின்றது. அந்நம்பிக்கையை போதனைகளாகத் தரும் ஆசிரியர் நவீல் பாடசாலையைச் சேர்ந்தவர். தன் பாடசாலையில் சேர்த்து ஏனைய மாற்றுத்திறனாளிகளுடன் பயணிக்க வைக்கின்றார். அங்கிருக்கும் ஏனைய மாற்றுத்திறனாளிகளின் மகிழ்ச்சியான குதூகலமான வாழ்க்கை இன்னும் தன்னம்பிக்கையை ஏற்படுத்துகின்றது. தாழ்வுச்சிக்கலில் இருந்து மெல்லமெல்ல விடுதலையாகி முன்னேறுகினறார். திரைக்கதையின் போக்கு இவ்வாறு இருக்கின்றது.

பல்வேறு காலகட்டங்களில் கதை நிகழ்வதாக காட்டும்போது பல்வேறு தருணங்களில் சறுக்கியிருகின்றார்கள். பின்னணியில் காட்டப்படும் இடங்கள், காலங்களைச் சரியாகச்சொல்லவில்லை. 1985 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிகழ்வதாக காட்டப்படும் காட்சிகளில் புனரமைக்கப்பட்ட நவீன பிரதேசங்களின் தற்போதைய நிலைமை காட்டப்படுகின்றது. கடைகளில் ஒட்டியிருக்கும் விளம்பர நிறுவனங்களின் ஸ்ரிக்கர்கள் நவீன காலங்களில் வந்தவை. அவை அப்பட்டமாக ஒளிப்படம் பிடிக்கப்பட்டிருக்கின்றன. கால அமைப்பை படத்தில் சரிவரக் கையாளாமல் விடப்பட்டது படத்தில் மிகப்பெரிய குறையை தோற்றுவித்துள்ளது.

பாத்திரத்தேர்வுகள் அட்டகாசமாக அமைந்துள்ளன. பால்ய காலங்களில் சிறுவனாக வரும் காட்சிகளில் நடித்த சிறுவனின் முக அமைப்பும் இளைஞனாக வருபவரின் முக அமைப்பு பொருந்துவதுகூட மிகச்சிறப்பாக அமைந்திருக்கின்றது. இசை அமைப்பாளரான விக்டரின் இசை பின்னணியில் நெகிழ்ச்சியாக அமைந்திருக்கின்றன.

**அனோஜன் பாலகிருஸ்ணன்**

# ஈழத்துக் கவிதைகள்

## அகங்களும் முகங்களும்-1

இடிந்து கிடந்த நினைவுத் தூண்களை
எழுப்பி வைத்தீர்
இடித்தவரை நினைவூட்ட
எழுபத்தேழு ஒகஸ்டில் தெற்கில்
இழந்த உயிர்களுக்கு
நினைவுத் தூண்கள் நிறுவுவீரா?
உங்கள் இழிமைகளை நினைவூட்ட

மலர் வளையங்கள், மாலைகள் சாத்தல்
இவை உதவப் போவதில்லை
எங்கள் நினைவுகளில் உங்களைச் செதுக்க
மலர் வளையங்களும் மாலைகளும்
உதிர்ந்து விழும் உங்கள்
சொல்லலங்காரங்கள் போல
மாலை சாத்திய கைகள் மறுநாளே வாளெடுக்கும்
நிகழ்ச்சிகள் பல நடப்பிலே கண்டோம்.

மலர் தூவிய கைகளாலேயே
துட்டகைமுனுவின் அஸ்தியும் தூவுவீர்
வகுப்புவாத மேகங்கள் இருண்டு
குருதி மழை பொழிய
இரத்தச் சுவடுகள் பதிய
ஒழிந்தோடி ஓர் மூலையில் பதுங்கி
உடைமாற்றிவந்து ஒப்புக்கழுவீர்
உடை மாற்றலேன்? உங்களை மாற்றுங்கள்.

இனவாதமணம் அறாதவாயால்
இன்னமுத மொழிகள் இதயத்தை
உங்களிடமே விட்டுவிட்டுச்
செல்கிறேன் இப்படிப் பலப்பல
எடுத்துச் செல்லுங்கள்
உங்களிதயத்தை உங்களுடனேயே
எங்கள் நினைவுகளில் உங்களைச் செதுக்கமுன்
உங்கள் இதயத்தைச் செதுக்குங்கள்
காலங் காலமாய் இரத்தக் கறைபடிந்து
துருப்பிடித்த இதயத்தை
துருவி ஆராயுங்கள்.
போலித் தார்மீகப் போர்வை களைந்து
உண்மை நிர்வாணம் பற்றுங்கள்.


## விடுதலைப் பொழுது

எழுந்திரு பிள்ளாய்
இது விடுதலைப் பொழுது
இருளின் துயில் கலைகிறது நீயோ
இழுத்துப் போர்த்தபடி
இன்னம் உறங்குதியோ? எழுந்திரு.
இதோ விடியலில் கீழ் வானம்
ஒளிமுடி தரிக்கும் உன்னதம்
உனக்குத் தரிசனமாகவில்லை.
குருகினங்களின் உதயத்து இசை
உனக்குத் தேனிப்பதில்லை.
மெல்லிதழ் மலர்த்தி வரும் தென்றல்-உன்
மேனி வருடச் சிலிர்ப்பதில்லை.
சீ! நீ என்ன மனிதன்
இன்னந் துயில் புணர்வாய்
புலர் பொழுதை ஸ்பரிசிக்காத
நின் புலன்கள் பழுதுடைய;
இனியும்,காலம் கடத்தாதே
புலன்கள் நறையுண்ணும்
பொழுதை மழிக்காதே.
ஒளியேந்தவிரியும் விழிகொள்
விடியலின் குரலுக்குச் செவிகொடு
நெஞ்சப்புலம் நெகிழ்ந்து அங்கு
புலரவிடு காலைப் பொழுதை. எழுந்திரு
சோம்பலை உதறிச்
சுருட்டிய பாயொடு தூரவீசு. வைகறை நீராடு
பொய்கறை இருள் கழுவிப்
புலரும் பொழுதை வரவேற்று
மனதில் ஒரு கும்பம் வை.
நினைவுகள் ஒருங்குவி
திகழ் ஒளியைத் தியானி-அதோ
உன் வீட்டு வாசற்படியில்
ஒளிக்குழந்தை தொற்றித் தவழ்கிறது
ஒற்றிக்கொள் கண்களில். கதவிடுக்கின் ஊடாக
உட்செல்லத் துடிக்கிறது
திறந்து விடு கதவை முற்றாய்
உனதகம் ஒளி பெறட்டும்

**சு.வில்வரட்ணம்**
**அகங்களும் முகங்களும் இதழில் இருந்து**
**(1985)**

# பத்து என்றதுக்குள்ள

## திரைவிமர்சனம்



வடஇந்தியாவில் இன்னும் சாதிவெறி மாறாத ஒரு கிராமம் என்று படம் தொடங்குகிறது. அங்கு ஒரு கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள் தமக்கென்று ஒரு பள்ளிக்கூடம் வேண்டுமென்று கேட்டதற்காக அக்கிராமத்திலுள்ள நாற்பதுபேரை வெட்டிச்சாய்க்கிறது ஆதிக்கசாதிக்கூட்டம். இப்படித் தொடங்கிவிட்டு அப்படியே சென்னைக்கு வந்துவிடுகிறார்கள்.

சென்னையில் ஒரு ஓட்டுநர் பயிற்சிப்பள்ளியில் பயிற்றுநராக இருந்து கொண்டு சின்னச்சின்ன கடத்தல்வேலைகளைச் செய்துகொண்டிருக்கும் விக்ரம், அநாதை விடுதியில் பிறந்து வளர்ந்து சரியான வேலை இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாலும் ஏகப்பட்ட குறும்புகளைச் செய்துகொண்டிருக்கும் சமந்தா.

கடத்தல் வேலைகளைச் செய்யும் பசுபதி மற்றும் அவருடைய ஆட்கள் ஆகியோருக்கும் வடஇந்தியாவில் நடந்த அந்தக் கொடுமையான நிகழ்வுக்கும் ஒரு சம்பந்தத்தை உருவாக்கி திரைக்கதை அமைத்திருக்கிறார் இயக்குநர் விஜய்மில்டன்.

எவ்வளவு பெரிய காரியமாக இருந்தாலும் பத்து எண்றதுக்குள்ள முடித்து விடுகிற திறமை உடையவர் விக்ரம் என்பதால் படத்துக்கு இந்தப்பெயர். படத்தில் அவருக்குப் பெயரே கிடையாது.

ஜேம்ஸ்பாண்ட், மணிரத்னம், முருகதாஸ், மைக்கல்ஜாக்சன் என்று நேரத்துக்கு ஒரு பெயரைச் சொல்கிறார் விக்ரம். பேரே இல்லாததை வைத்தே பல காட்சிகளை வைத்திருக்கிறார்கள். சுவாரஸ்யமாக இருக்கிறது.

முறுக்கேறிய உடலும் அலட்சிய உடல்மொழியுமாய் சண்டைக்காட்சிகளில் கவர்கிறார் விக்ரம். காதல்காட்சிகள் குறைவாக இருக்கின்றன.

எதிரில் இருப்பவர்களைப் புகைப்படம் எடுப்பதாகச் சொல்லிவிட்டு தன்னையே படமெடுத்துக்கொள்ளும் குறும்புக்காரி சமந்தா. அவர் பெயர் ஷகிலா. அம்மா பெயர் பரங்கி மலை ஜோதி என்று ஏகத்துக்கும் கிண்டலடித்திருக்கிறார்கள்.

குறும்புத்தனமான வேடத்துக்கேற்ப எந்நேரமும் புன்னகை தவழும் முகத்துடன் நடித்திருக்கிறார் சமந்தா. எதிர்பாராத விதமாக இன்னொரு தோற்றத்தில் வருகிற சமந்தா, காட்டுகிற கடுமை முற்றிலும் வேறாக இருக்கிறது. தோற்றம் நன்றாக இருக்கிறதா என்று கேட்காதீர்கள்.

பசுபதி, பூரன்சிங், அபிமன்யூ என்று படத்தில் பல வில்லன்கள் இருக்கிறார்கள். ஆனாலும் அவர்களுடைய வில்லத் தனம் பெரிதாக எடுபட வில்லை. பசுபதி வில்லனா நகைச்சுவையாளனா என்கிற குழப்பம் வந்துவிடுகிறது. சார்மி ஒரு பாடலுக்கு மட்டும் வந்து கவர்ச்சி விருந்து படைத்துவிட்டுப் போகிறார்.

இமானின் இசையில் பேரைக்கேட்டா பேஜாரு பண்றே, கானா கானா தெலுங்கானா உள்ளிட்ட பாடல்கள் தாளம் போடவைக்கின்றன. சண்டைக்காட்சிகளுக்குப் பின்னணி இசை பலமாக அமைந்திருக்கின்றன.

வடஇந்தியாவில் கதை தொடங்குவது மட்டுமின்றி விக்ரம் கார் பயணமாகவே வடஇந்தியா நோக்கிப் போவதால் பலவிதமான இடங்களில் படப்பிடிப்பு நடத்தியிருக்கிறார்கள். பாஸ்கரனின் ஒளிப்பதிவில் காட்சிகள் பார்க்க வைக்கின்றன.


வடஇந்தியாவின் கொடுமையான சாதியச் சிக்கலைக் கதைக்குப் பயன்படுத்திக் கொண்டிருக்கும் இயக்குநர் விஜய் மில்டன், திரைக்கதையில் கூடுதல் கவனம் காட்டியிருக்கலாம். காருக்குள் கதாநாயகியை வைத்துவிட்டு அது தெரியாமல் விக்ரம் போகிறார் என்று சொல்வது பலவீனமாக இருக்கிறது.

கதாநாயகனின் தங்கைப்பாசம், கதாநாயகி அநாதை என்கிற அனுதாபம், முட்டாள்வில்லன் என்கிற பார்த்துச்சலித்த பாத்திரங்கள் அலுப்பூட்டுகின்றன.

போயிட்டு முடிக்கிற விசயமில்ல முடிச்சிட்டுப் போற விசய்ம், பேயைப் பார்த்து பேய் பயப்படாது" என்று ரசிக்கும் வசனங்களோடு,

பத்து எண்றதுக்குள்ள எல்லாத்தையும் முடிச்சுடுவியா, நானே காட்டுவேனே எதுக்கு அவசரம்" போன்ற இரட்டை அர்த்த வசனங்களும் கலந்திருக்கின்றன. சமந்தாவின் சட்டைப்பையில் கார் சாவியை விக்ரம் எடுக்கிற நேரத்தில் ஒலிக்கிற பின்னணி இசை கொஞ்சம் அதிகம்.




3,6 மற்றும் 12 மாததவணை காலப்பகுதியில்
உங்கள் தெரிவுப்படி மீளச்செலுத்தலாம்
ரூபா.5மில்லியன்வரை
பெற்றுக்கொள்ள முடியும்
நம்பமுடியாத குறைந்தவட்டி வீதத்தில்
ரூபா.1மில்லியனுக்கு மாதாந்தவட்டி ரூபா.13,990 மட்டுமே
SINGER FINANCE நாடுங்கள்
உங்கள் வாகனபுத்தகத்தை கொடுத்து
உங்கள் பணத்தை பெற்றுக்கொள்ளுங்கள்

தொடர்புகளுக்கு
சுஜந்தன் 077 7 391 449
தர்ஷன் 077 7 009 666
தனு 077 9 357 124
இல.86, கே.கே.எஸ், வீதி, யாழ்ப்பாணம்

# உரிமைகளை வென்றெடுக்க இனியாவது முயற்சியுங்கள்



இலங்கை அரசியல் அமைப்புக்கு விரோதமானது என்று அரச தரப்பினர் கூறிவரும் சில நடவடிக்கைகளில் தமிழர் தரப்பு தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றது.

தமிழர், சிங்களவர், முஸ்லிமகள் என்று இனபேதம் இலங்கையில் பார்க்கப்படுவதில்லை என நல்லிணக்க முயற்சிகளை முன்னெடுப்பதாக அரசு வெளியுலகிற்கு காட்டிக்கொண்டாலும் சிறுபான்மையினத்தவர்களாக அடையாளப்படுத்தப்பட்டவர்கள் மீது அடக்கு முறைகள் பிரயோகிக்கப்பட்ட வண்ணமேயுள்ளன.

இதன் காரணமாக அரசியல் அமைப்புக்கு எதிரான சில நடவடிக்கைகளை தமிழர் தரப்பு செய்தாக வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. தமிழனை இல்லாதொழிக்க எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தால் அதனை அரசியல் அமைப்பை சாதகமாகப் பயன்படுத்தி அடக்க முற்படுவது அரசின் வாடிக்கையான நடவடிக்கையாகும்.

தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளைப் பொறுத்துக் கொள்ள முடியாமலும் கட்டவிழ்த்து விடப்பட்ட அநீதிகளை எதிர்த்து தன் இனத்தின் விடுதலைக்காக ஆயுதம் ஏந்திப் போராட வேண்டிய நிலை தமிழனுக்கு உருவானது.

தமிழன் ஆயுதம் ஏந்திப் போராடியது இலங்கை அரசியல் அமைப்புக்கு எதிரானது என்று வாதாடுவோர் அத்தகைய நிலைக்குத் தமிழனைக் கொண்டு சென்றவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத்தவறியதை என்ன காரணத்தைக்கூறி மூடிமறைக்க முடியும்.

நாட்டின் சட்ட திட்டங்கள் அனைத்து மக்களுக்கும் ஒரே விதமானது என்று கூறப்பட்டாலும் தமிழனை அடக்கி ஒடுக்க வேண்டும் என்ற நோக்கோடு சில சட்டங்கள் உருவாக்கப்பட்டதையும் மறுதலிக்க முடியாது.

பயங்கரவாதத் தடைச்சட்டம் மூலம் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் தமிழரின் விகிதாசாரத்தைக் கொண்டு நோக்குமிடத்து இந்த உண்மை புலப்படும்.

அதேவேளை யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுவிட்டது என 2009 ஆம் ஆண்டு மே மாதம் சிங்கள அரசு அறிவித்த போதும் சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளின் நிலைக்கு அடிப்படையாக அமைந்துள்ளதும் அரசியல் அமைப்பே.

சிறைகளில் அரசியல் கைதிகள் என்று யாருமே இல்லை என அமைச்சர்கள் ஒருவரை ஒருவர் மாறிமாறி கூறிக்கொள்ளலாம். ஆனால் உண்மையை மூடி மறைக்க முடியாது. சிறைகளில் வழக்கு விசாரணைகள் எதுவுமின்றித் தடுத்து வைத்திருப்போர் மீது இனியாவது கரிசனை காட்டப்பட வேண்டும்.

மைத்திரி - ரணில் கூட்டு அரசு உருவாகவும் யாராலும் அசைக்க முடியாத அதிகாரப் பலத்துடன் இருந்த மகிந்தவின் ஆட்சிக்கு முடிவுகட்டவும் தமிழர்கள் முன்வந்ததை மறக்கக்கூடாது. அவ்வாறு செய்தால் இனி வரும் காலங்களிலும் இன நல்லிணக்கம், சமாதானம், பொருளாதார முன்னேற்றம் என்பனவெல்லாம் கானல் நீராய் காணாமற்போயிடும்.

போரில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் கொத்துக் கொத்தாக கொன்றொழிக்கப்பட்ட போது தடுத்து நிறுத்த வல்லமையிருந்தும் தடுக்கத்தவறியவர்கள் இன்னொரு அழிவு யுத்தம் ஏற்படுவதையாவது தடுப்பது அவசியம்.

யுத்தத்தில் தமிழர்கள் அதிகளவில் படுகொலை செய்யப்பட்டனர். அவர்களின் நினைவுகள் என்றும் தமிழனை விட்டு நீங்க முடியாதவை. அதேபோன்று தமிழினம் சிங்களவர்களுக்கு இணையான அனைத்து அதிகாரங்களுடனும் சுதந்திரமாக வாழ வேண்டும் என்ற கோரிக்கையை முன்னிலைப்படுத்தி அடக்குமுறைகளிலிருந்து தன் இனத்தை விடுவிக்க களமிறங்கி வித்தாகிப்போன மற்றவர்களையும் மறக்க முடியாது.

போர்க்காலம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னரும் வடக்கில் மாவீரர் நினைவு நாள் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. மாவீரர் நாள் நினைவுகூரலை எப்படியாவது தடுத்து நிறுத்திவிட வேண்டும். அவர்களின் நினைவுகளை இல்லாதொழிக்க வேண்டும் என்று சிங்களப் படைகள் கங்கணம்கட்டிக்கொண்டு அலைந்தாலும் உணர்வலைகளை அடக்கும் முயற்சிகளில் படுதோல்வியையே கண்டு வருகின்றது.

மாவீரர் வாரம் ஆரம்பிப்பதற்கு சுமார் ஒருமாத காலம் இன்னும் இருக்கும் நிலையில் இப்போதே அது தொடர்பான எச்சரிக்கைகளை விட சிங்கள அரசு தயாராகிவிட்டது என்பதை பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி வெளிப்படுத்தியுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் மாவீரர் தினம் அனுஷ்டிக்க ஒரு போதும் அனுமதியளிக்க முடியாது என்று அவர் கூறியுள்ளார்.

மகிந்த ஆட்சிக்காலத்தில் பாதுகாப்புச் செயலாளராகவிருந்த கோத்தபாய ராஜபக்ஷவும் மாவீரர நாள் அனுஷ்டிப்பு விடயத்தில் மிகவும் இறுக்கமான நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தார்.

நவம்பர் மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதிவரை ஆலய வழிபாடுகளுக்குக்கூட அவர் தடைவிதித்து அராஜகத்தையும் ஆணவத்தையும் வெளிப்படுத்தியிருந்தார். தற்போது இலஞ்ச ஊழல் விசாரணைகளை எதிர்கொண்டு வரும் கோத்தபாய போரில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் கண்ணீர்விட்டு அழுவதற்கான சந்தர்ப்பத்தைக்கூட வழங்க மறுத்து வந்தார்.

அண்ணனின் அதிகாரத்தை அதிகளவில் துஷ்பிரயோகம் செய்து மகிந்தவுக்கு மட்டுமல்லாது மகிந்த ஆட்சியில் அதிகாரத்திலிருந்தவர்களுக்கும் நெருக்கடி நிலையை ஏற்படுத்தியவர் கோத்தபாய.

கோத்தபாயவின் கட்டுப்பாட்டின் கீழ் பாதுகாப்பு படைப்பிரிவு இயங்கிய காலகட்டத்தில் அமுல்படுத்தப்பட்ட அடக்கு முறைகளுக்கு அஞ்சாத தமிழினம் தமது வாக்குளால் உருவான அரசின் அச்சுறுத்தல்களுக்கு அஞ்சி , அடங்கி அஞ்சலிக்க வேண்டியவர்களுக்கு அவமரியாதை செய்ய ஒருபோதும் முற்படாது என்பதை உறுதிப்படக்கூற முடியும்.

மாவீரர் நாளுக்கு இன்னும் ஒருமாத காலம் உள்ள நிலையில் மைத்திரி - ரணில் கூட்டு அரசு தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து உயிரிழந்த உறவினர்களுக்கு அஞ்சலி செலுத்த அனுமதியளிக்க வேண்டும்.

ஈழ விடுதலைப் போராட்டத்தில் மாவீரர் குடும்பங்கள் இல்லாத சொற்பளவான குடும்பங்களே உள்ளன என்பதை உணர வேண்டும். உயிரிழந்தவர்களுக்கு நீதிகோரி சர்வதேச விசாரணையை எதிர்பார்த்திருந்தவர்களை பொருளாதாரம், நாடுகளுக்கிடையிலான உறவைக் காரணம் காட்டி ஏமாற்றி விட்டீர்கள். சர்வதேச விசாரணையையும் இல்லாமல் செய்து போர்க் குற்றவாளிகளுக்கு கருணை அடிப்படையில் மன்னிப்புக் கொடுக்கவும் முடிவெடுத்துள்ளீர்கள்.

ஆனால் உங்கள் இனத்தவர்களைக் காப்பாற்றுவதிலுள்ள சிறிதளவேனும் அக்கறையை தமிழினத்தவர்கள் உயிரிழந்த தமது உறவினர்களுக்காக கண்ணீர் விடுவதற்கு அனுமதியளிப்பதில் கூட காட்டவில்லை.

எனவே மீள உயிர்பெற்றுள்ள மாவீரர்கள் விவகாரத்தை அடிப்படையாகக் கொண்டு வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் போது மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை உறுப்பினர்கள் மீள ஒருமுறை நினைவுகூர்ந்து தாம் அளித்த வாக்குறுதிகளில் மாவீரர் தொடர்பாகவும் இறுதிப் போரில் கொல்லப்பட்டவர்கள் தொடர்பாகவும் இதுவரை என்ன செய்தீர்கள், என்ன செய்யத்தவறியுள்ளீர்கள் என்பதைச் சிந்தித்து செயலாற்ற வேண்டும்.

அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற அயராது பாடுபட வேண்டும். இனவிடுதலைக்காக போராடிவர்களின் நினைவாலயங்கள் அழிக்கப்பட்ட போது எதையும் செய்யமுடியாதவர்களாக தமிழர்கள் இருந்தது உண்மையே. ஆனால் தற்போது நிலைமை முற்றாக மாற்றம் கண்டுள்ளது. நல்லாட்சி மலந்துள்ளதாகக்கூறப்படும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உரிமைகளை வென்றெடுக்க வேண்டும். இதுவே உங்களை நம்பி வாக்களித்த ஒவ்வொரு மக்களின் எதிர்பார்ப்பாக அமைந்துள்ளது.

**காண்டீபன்**

## facebook

# வணிகன்



விருதுநகர் என்னும் ஊரில் வசிக்கும் வணிகன் ஒருவனுக்கு, முட்டாள் வேலைக்காரன் ஒருவன் இருந்தான்.

வேலைக்காரனை அழைத்த வணிகன், நம் வண்டியை எடுத்துக் கொண்டு காட்டுக்குப் போ அங்கே மரங்களை சிலர் வெட்டி வண்டியில் ஏற்றிக் கொண்டிருப்பார்கள். அதே போல, நீயும் மரங்களை வெட்டிக் கொண்டு வா, என்றான்.

அப்படியே அவனும் வண்டியை ஓட்டிச் சென்றான்.

அங்கே சிலர் மரங்களை வெட்டிக் கொண்டு இருந்தனர். சிலர் கீழே விழுந்த மரத்துண்டுகளை தூக்கி வண்டியில் போட்டுக் கொண்டிருந்தனர்.

இதைப் பார்த்த அவனால், சிரிப்பை அடக்க முடியவில்லை.

என்ன! இவர்கள் எல்லோரும் முட்டாள்களாக இருக்கின்றனர். மரம் வெட்டும் போதே அதற்குக் கீழாக வண்டியை நிறுத்தினால் மரம் அதில் சரியாக விழும். அப்படியே கொண்டு வரலாமே! எதற்காக மரத்தைத் தரையில் கிடத்திய பிறகு வண்டியில் போட வேண்டும் என்று நினைத்தான்.

என் திட்டத்தை இவர்கள் கண் முன்னாலேயே செய்து காட்ட வேண்டும். எல்லோரும் என்னைப் புகழ வேண்டும்" என்று நினைத்தான்.

தான் வெட்ட வேண்டிய பெரிய மரத்தைத் தேர்ந்து எடுத்தான்.

கோடரியால் அந்த மரத்தின் அடிப் பகுதியைப் பாதி அளவு வெட்டி முடித்தான். அந்த மரம் விழக்கூடிய இடத்தில் வண்டியை நிறுத்தினான்.

மரம் வெட்டிக் கொண்டிருந்த மற்றவர்கள், “ஏன் இவன் இப்படிப் பைத்தியக்காரத் தனமாக வேலை செய்கிறான் என்று நினைத்தனர்.

மீண்டும் மரம் வெட்டத் தொடங்கினான் .சிறிது நேரத்தில் அந்த மரம் சடசடவென்ற சத்தத்துடன் வண்டியின் மீது வேகமாக விழுந்தது.

அவ்வளவுதான். வண்டி தூள் தூளானது. இதைக் கண்ட அவன் திகைத்தான்.

தன் திட்டத்தில் என்ன குறை என்பதை அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை.

என் திட்டம் நல்ல திட்டம்தான். வண்டிக்குத் தான் வலிமை இல்லை" என்ற முடிவுடன் வீடு திரும்பினான்.

நடந்ததை அறிந்த வணிகன், முட்டாளாக இருக்கிறாயே? இப்படிச் செய்யலாமா? என்று அவனைத் திட்டினான்.

சில நாட்கள் சென்றன.

திடீரென்று அந்த ஊரில் மண்ணெண்ணெய் பஞ்சம் வந்தது. வணிகனிடம் இருபத்தைந்து பீப்பாய் எண்ணெய் இருந்தது. பதுக்கி வைத்தால், நிறைய இலாபம் கிடைக்கும் என்று நினைத்தான்.

வேலைக்காரனை அழைத்து, கடையில் இருக்கும் மண்ணெண் ணெய் எல்லாவற்றையும் இன்றிரவு எடுத்து வா. நம் வீட்டுத்தோட்டத்தில் பள்ளம் தோண்டிப் புதைத்துவிடு. யாருக்கும் தெரியக்கூடாது, என்றான்.

வணிகன் சொன்ன படியே, நள்ளிரவில் பெரிய பள்ளம் தோண்டினான் அவன்.

ஒவ்வொரு பீப்பாயாக உருட்டிச் சென்று அதில் உள்ள எண்ணெயைப் பள்ளத்தில் ஊற்றினான். இப்படியே எல்லா பீப்பாய் எண்ணெயையும் ஊற்றி முடித்தான்.

இந்தக் காலி பீப்பாய்களை என்ன செய்வது? இது குறித்து முதலாளி ஒன்றும் சொல்ல வில்லையே... சரி அவ ரையே கேட்டு விடுவோம்" என்று நினைத்தான்.

நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்த அவரை எழுப்பினான்.

ஐயா! நீங்கள் சொன்ன படி மண்ணெண்ணெயைப் பள்ளம் தோண்டிப் புதைத்து விட்டேன். காலி பீப்பாய் களை என்ன செய்வது? என்று கேட்டான். வணி கனுக்கு உண்மை புலப் படத் தொடங்கியது.

ஐயோ மண்ணெண் ணெய் எல்லாம் போச்சே! என்று அலறினான்.

அன்றே அவனை வேலையில் இருந்து நீக்கி னான்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 526

என்னம்மா இப்படி பண்றீங்களேம்மா




விமல் நாதன்




குரு குரு




தாரணி




விஜியந்தன்




இராமலிங்கம் ஜங்கரன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 04

## சிந்தனைக்கு...

### பாக்கிற்கு அடிமையாகி...

பலகோடி பற்களை அழித்து பல்லாயிரக் கணக்கானவர்களின் அழகையும் ஆளுமையையும் கெடுத்து வாய், குடல் என்பவற்றை எரித்து பலருக்கு புற்றுநோய்களை ஏற்படுத்தி ஆபத்து விளைவித்து பல சுகாதார பிரச்சினைகளை ஏற்படுத்திவரும் பாக்கு. புகையிலை சப்பும் பழக்கம் தொடர் கதையாகத் தொடர்ந்து வருகிறது. வெற்றிலை பாவம். இவற்றுடன் கூட்டுச்சேர்ந்திருப்பதால் தனது பெயரை கெடுத்துக் கொள்கிறது.

வெற்றிலை, பாக்கு என்பன எமது கலாசாரத்துடன் மட்டுமல்ல வியட்நாம், சீனாஉட்பட்டபலநாடுகளின் கலாசார பாரம்பரிய மரபுகளுடன் ஒன்றிப்போய் இருப்பதை அவதானிக்க கூடியதாக இருக்கிறது.

இவற்றை அளவுக்கு அதிகமாகப் பாவித்து அவற்றிற்கு அடிமையாகிப் போவது துரதிர்ஷ்டமே இதற்கு என்ன செய்யலாம்?

Dr.சி.சிவன்சுதன்
(பொது வைத்திய நிபுணர்)

## உங்களுக்கு உயர் குருதியமுக்கமுள்ளதா?

**குருதி அமுக்கம் என்றால் என்ன?**

உங்கள் உடலில் குருதி குழாய்களில் குருதி சுற்றியோடும் போது ஏற்படும் அமுக்கமாகும்

**சாதாரணமாக இது எவ்வளவு இருக்கும்?**

சுருங்கல் அமுக்கம்- 120 mmHg
விரிதல் அமுக்கம் - 80 mmHg

இது இளம் பராயத்தவர்க்கு சற்று குறைவாகவும் முதியோருக்கு சற்று அதிகமாக காணப்படும்.

**உயர்குருதி அமுக்கம் என்றால் என்ன?**

குருதி அமுக்கம் மேற்குறிப்பிட்ட அளவைவிடகூடுதலாக இருத்தல்

பொதுவாக சுருங்கல் அமுக்கம் - 140 mmHg ஐவிடகூடுதலாகவும்

விரிதல் அமுக்கம் - 90 mmHg ஐ விட கூடுதலாகவும் இருப்பின்

**யாருக்கு உயர்குருதி அமுக்கம் ஏற்பட வாய்ப்புக்கள் அதிகம்?**

- வயது அதிகரிக்கும்போது
- உடல் நிறை அதிகமானவர்கள்
- சிகரட்பாவனையாளர்கள்
- நீரிழிவுநோய், சிறுநீரகநோய் போன்ற வருத்தம் உள்ளவர்கள்
- குடும்ப அங்கத்தவரில் பலர் உயர் குருதியமுக்கத்தால் பாதிக்கப்பட்டிருப்பின்

**குருதியமுக்கம் கட்டுப்பாட்டில் இல்லாவிடில் என்ன பிரச்சினைகள் ஏற்படும்?**

- இருதயநோய்
- சிறுநீரக செயலிழப்பு
- பரிசவாத நோய்
- குருதிக்குழாய்கள் பாதிப்படைதல்

**குருதியமுக்க நோயை கட்டுப்பாட்டில் வைத்திருக்க நான் என்ன செய்ய வேண்டும்?**

- சரியான உணவு பழக்கவழக்கங்களை கடைப்பிடிக்க வேண்டும்.
- உடல் நிறையை அளவாக பேணவேண்டும்
- தினமும் உடற்பயிற்சி செய்யவேண்டும்.
- புகைபிடிப்பதை நிறுத்தவேண்டும்
- வைத்தியர் தரும் மருந்து வில்லைகளை அவர் கூறிய அறிவுரைக் கேற்ப தவறாது உள்ளெடுக்க வேண்டும்.
- உங்கள் குருதியமுக்கத்தை சரியான கால இடைவெளியில் சோதித்து பார்க்கவேண்டும்.

**நான் எவ்வகையான உணவுமுறையை கடைப்பிடிக்க வேண்டும்?**

- உப்பு அதிகம் சேர்க்கப்பட்ட உணவுகளை தவிர்க்கவேண்டும்.
- புகையூட்டப்பட்ட மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுகளை தவிர்க்க வேண்டும்.
- அதிக கொழுப்பு அடங்கிய உணவுகளை தவிர்க்க வேண்டும்.
- பழங்களையும் மரக்கறிகளையும் அதிகம் உள்ளெடுக்க வேண்டும்.
- மீன் உணவுகள் உடலுக்கு நன்று.

**நான் வீட்டில் எவ்வாறு குருதி அமுக்கத்தை சோதித்து பார்ப்பது?**

- குருதியமுக்கத்தை சோதிக்க முன் புகைப் பிடிக்ககூடாது
- கோப்பி, தேநீர் போன்றபானங்களை உள்ளெடுக்கக்கூடாது
- 30 நிமிடங்களுக்குள் உடற்பயிற்சி செய்திருத்தலாகாது.
- ஐந்து நிமிடங்கள் கதிரையில் இளைப்பாறிய பின்னரே அளவிட தொடங்க வேண்டும்.
- சரியான அளவுள்ள “cuff” ஐ பயன்படுத்தவேண்டும்.
- சோதிக்க முன்கதிரையில் சரியாகஅமரவேண்டும்
- சோதிக்கும் “cuff” ஐ முழங்கைக்குமேல்கட்டவேண்டும்.
- கையை ஒருமேசையில் தளர்வாக வைக்கவேண்டும். கை உங்கள் இதயத்தின் மட்டத்தில் இருக்கவேண்டும்.
- அளவிடும்போதுகதைக்கக் கூடாது.
- அளக்கும் இயந்திரம் மூலம் குருதியமுக்கத்தை அளந்து சரியாக குறித்துக்கொள்ளவேண்டும்.

Dr.க.சிவசுகந்தன்

## எம்மை மாற்றிக் கொள்ள...

ஒழுங்காக கைகழுவும் பழக்கம் எம்மை பல நோய்களிலிருந்து பாதுகாக்கும். உணவு உண்ண முன்பு கூட கைகழுவும் பழக்கம் குறைந்த கல்யாண வீடு போன்ற மங்களகரமான நிகழ்வுகளில் கூட பலர் உணவு உண்பதற்கு முன் கைக்ழுவும் பழக்கத்தை கைகழுவி விட்டு விட்டனர். குறைந்த பட்சம் அசுத்தமான வேலைகளை செய்த பின்பும் உணவு அருந்துவதற்கு முன்புமாவது அவசியம். இதனை தவறாது செய்ய எம்மால் முடியுமா?

அகத்தியா-

## கடந்தவார கேள்விக்கான உங்கள் பதில்கள்

ஒழுங்கான உடற்பயிற்சி உயிர் காக்கும், ஆரோக்கியம் தரும், மனதுக்கு புத்துணர்ச்சி தரும், உடல் அழகு மெருகுபெறும் என்றெல்லாம் தெரிந்திருந்தும் நாம் போதுமான அளவு உடற்பயிற்சி செய்வதில்லை.
இதற்கு பிரதான காரணமாக அமைவது,

A. பொருத்தமானஉடற்பயிற்சி முறைகள் சம்பந்தமான அறிவுபோதாமை என்பதற்கு 13 % ஆனவர்களும்,
B. போதியநேரமின்மை என்பதற்கு 13 % ஆனவர்களும்,
C. அன்றாடவீட்டுவேலைகளானச மையல் தோய்த்தல் கூட்டுதல்... போன்றன போதுமான உடற்பயிற்சிஎனக் கருதிக் கொள்ளுதல். என்பதற்கு 12 % ஆனவர்களும்,
D. அக்கறை இன்மை, அசண்டையீனம், கவனக்குறைவு போன்றவை என்பதற்கு 62 % ஆனவர்களும், கருத்து தெரிவித்திருந்தார்கள்.

## உங்கள் கருத்து ...

தாகம் எடுக்கும் பொழுது நீங்கள் உண்மையாக அருந்தவிரும்புவது
A. சுத்தமானநீர்
B. தேநீர் அல்லதுகோப்பி
C. செயற்கை பழரசம் அல்லது மென்பானம்
D. சோடா
E. இயற்கையின் பழரசம் அல்லது இளநீர்

A , B , C , D , E , F என்பவற்றில் உங்கள் தெரிவை 078 207 5424 என்ற இலக்கத்திற்கு SMS செய்து விடுங்கள்.

**மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் 078 207 5424 என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.**